# மொழிவளங் கண்ட மேலோர்

ஆசிரியர்

வித்துவான் ம. இராமநாதன்

தலைமைத் தமிழாசிரியர்

பரி. பேதுரு உயர்நிலைப்பள்ளி

தஞ்சாவூர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY

*(In association with the United Society for Christian Literature)*

POST BOX 501, PARK TOWN, MADRAS 3

*and at*

MYSORE BANGALORE TIRUVALLA

S.B.

*COPYRIGHT*

*First printed, 1957*

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1957. B8660

# முன்னுரை

சென்ற சில நூற்றாண்டுகட்குமுன் வாழ்ந்த மேலை நாட்டு மொழிக்கு வளம் நல்குவான் வேண்டிச் சிறந்த நூல்கள் பல எழுதியோரும், இந்த நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ் வாழ அடிகோலிய தமிழ்த்தாத்தாவும், பல்கலைக் கழகத்தில் தமிழின் நிலை ஆங்கில மொழியின் நிலைமையோடு ஒத்த மதிப்புப் பெற உதவிய சீரியரும் இச்சிறு நூலில் இடம் பெற்றுள்ளனர். மொழித்துறை யோடு அறிவுத்துறையில் மேம்பட்ட சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள் இளம் மாணவர்களின் மனதைச் செம்மைப்படுத்தும் என்பது உறுதி. இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்களும் பிற ஆசிரியர்களும் ஏற்ற ஆதரவு தந்து என்னை இப்பணியில் ஊக்குவிப்பாராக. இந்நூலைப் புத்தக உருவில் வெளிவர உதவிய கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தாருக்கு என் நன்றி.

இந்நூல் நன்முறையில் மிளிரத் தன் கருத்துகளைத் தந்து உதவிய எனது உழுவலன்பரும், கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியருமான வித்துவான் ம. சீனிவாசன் அவர்கட்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

தஞ்சாவூர்
4-9-1957

இங்ஙனம்,
ம. இராமநாதன்

## பொருளடக்கம்


பக்கம்

இலக்கிய மேதை

1. மில்டன் ... ... 1

பல்கலைக் கழகத் தலைவர்

2. டாக்டர் இலக்குமணசுவாமி முதலியார் ... 40

மொழிநலம் தேடியோர்

3. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 57

மேனாட்டு அறிஞர்

4. ஆலிவர் கோல்டுஸ்மித்து ... ... 74

# 1. மில்டன் (1608–1674)

நம் தாய்நாடான இந்தியா தனது சரிதத்தில் அநேக அந்நியர்கட்கு இடந்தந்து தன்னை ஆளும்படி செய்திருக்கிறது என்பதை அதன் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பவர் உணர்வர். அவ்வாறு மகம்மதியர், மொகலாயர் என்ற இவ்விரு இனத்தவரும் சில நூற்றாண்டுகள் ஆண்டபின்னர், வாணிபங்கருதிவந்தமேலைநாட்டவருள் ஒருவரான ஆங்கிலேயரும் ஆண்டனர். அவர் ஆட்சியில் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. நம் நாட்டவர் அம்மொழியைக்கற்றுத்தெளிந்தனர். அம்மொழியிலுள்ள சீரிய கவிகளையும் போற்றிப் புகழ்ந்தனர்.

நம் தமிழ் நாட்டில் 17 ஆம் நூற்றாண்டில் பல சீரிய புலவர்கள் வாழ்ந்திருந்ததாக இலக்கியமும் வரலாறும் கூறுகின்றன. அவ்வாறே 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கமே இங்கிலாந்திலும் சீரிய புலவர் பலர் தோன்றிய காலமாகும்.

## முன்னோர்

தமிழ் நாட்டில் தோன்றிய புலவரிற் பெரும்பாலோர் தாம் பிறந்த ஊரின் பெயரேகொண்டு விளங்கியதுபோல நம் ஆங்கிலப் புலவரும் விளங்கினார். இங்கிலாந்துத் தீவில் ஆக்ஸ்போர்ட்ஷையர் என்ற பகுதிக்கு அருகில் 'தேம்' என்ற பெரிய நகருக்கு அண்மையில் 'மில்டன்' என்றோரிடமிருந்தது. இங்குதான் நமது புலவர் மில்ட

னது மூதாதையர் வசித்துவந்தனர். அவரது முன்னோரைப்பற்றி மிக விரிவாகத் தெரியாவிடினும் அவரது பாட்டனார் ரிச்சர்ட்ஸ் என்பவர் ஒரு சிறு மதகுருவாகப் பணியாற்றிவந்தார் என்பது அறியத்தக்கது. ரிச்சர்ட்ஸ் தனது பிள்ளை, தன் மூதாதையர் கடைப்பிடித்துவந்த வைதிக மதத்தை விட்டவன் என்பது கருதி தனக்குச் சொந்தமான அளவில் மிக்க நிலபுலங்களைத் தர மறுத்துவிட்டார்.

## பிறப்பு

மில்டனின் தந்தையான ஜான் என்பாரும் பத்திரங்கள் எழுதிப் பணந்தேடும் வாழ்க்கையில் ஈடுபட்டார்; பின்னர், வட்டிக்குப் பணம் கொடுக்கும் லேவாதேவிக்காரராகவும் ஆனார். அவருக்கு இசையில் தனியான பயிற்சியும் திறமையும் இருந்தது. அதன் துணைகொண்டு திரண்ட பொருளை ஈட்டி ஏராளமான நிலபுலங்களை வாங்கினார். இவ்வாறு ஏழ்மையில் தந்தையால் புறக்கணிக்கப்பட்ட ஜான் திரண்ட செல்வத்திற்குத் தலைவரானார்.

வெல்ஷ் குடும்பத்தைச்சேர்ந்த காஸ்டன் (Caston) என்னும் பெண்ணை ஜான் வாழ்க்கைத் துணைவியாகக்கொண்டு இல்லறத்தில் ஈடுபட்டார்; மூதன் முதலில் 'கிறிஸ்தபர்' பிறந்தார். பின்னர் நம் கவியரசர் 'பிரெட்தெரு'வில் 1608 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாள் காலைக் கதிரவன் தோன்றிய சிறிது நேரத்திற்கெல்லாம், அதாவது பொழுது புலர்ந்த மூன்று நாழிகைக்குள்ளாகவே, இலக்கியக் கதிரவன்போல் தோன்றி



ஞர். இவருக்குப் பிறகு பிறந்த பெண்ணிற்கு ஆன் (Anne) என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

நம் புலவர் தோன்றிய 17 ஆம் நூற்ருண்டைச் சிறிது நோக்குவோம். அதுதான் மதச் சீர்திருத்தம் (Religious Revolution) பற்றிப் பல புதிய கருத்துக்கள் தோன்றி, ஆங்காங்கே பல கட்சிகள் இருந்து நிலவிய காலம் ஆகும். மதகுருமார்கள் கூறியவற்றை ஆராயாது கடைப்பிடிக்கலாகாது என்று மக்கள் திட்டமிட்டுக் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட காலம் அது எனில் மிகையன்று. மேலும் அரசன், பாராளுமன்றம் என்ற இவ்விருவரிடையே பிளவு ஏற்பட்டது. ஆதலால் அரசன் தனியாகவும், பாராளுமன்ற உறுப்பினர் தனியாகவும் கட்சிகளைத் தோற்றுவித்தனர். அரசனை ஆதரிப்போர் அரசன் கட்சி என்றும், பாராளுமன்றத்தை ஆதரிப்போர் மக்கள் கட்சி என்றும் முடிவு கட்டப்பட்டது. அவரவர் கட்சி வேறுபாட்டை அறிவிக்க வெவ்வேறு அடையாளத்தை அணிந்தனர். ஒரு கட்சியினர் மற்ருென்றை ஆதரிப்போரை வெறுக்கவும் தலைப்பட்டனர். அக்கால நிலையினை நம் மில்டன் குடும்பத்தோடு ஒட்டிப்பார்ப்போம். மில்டனுடைய பாட்டனர் காலம் முதல் மில்டன் குடும்பத்தினர் வெள்ளை ரோஜாக்குறியைக்கொண்ட அரச கட்சியினரை வெறுத்துவந்தனர். ஆதலால் மக்கட் கட்சியிலே பங்குகொண்ட குடும்பத்தில் வந்துதித்தார் நமது இலக்கியச் செம்மல் என்பது புலனுகும்.

## இளமையும் கல்வியும்

மில்டனது கல்வியில் அவர் தந்தை நிரம்பக் கவலையும் கவனமும் செலுத்தினர். ‘தாமஸ் யங்’

என்பவரே நமது கலேஞர் மில்டனுக்கு முதல் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். சிறு பையனுன மில்டன் தனது கல்வியில் பேரார்வங்கொண்டு விளங்கினுர். உயர்நிலேக் கல்விக்குப் பின்னர் சிறு வனது மதிநுட்பத்தையும் செயலாற்றுந்திறனேயும் கண்ட தந்தை, சிறிது காலம் கோயிலில் மதப்பணி யாற்றும் குருவிற்குப் பணிப்பையனுக அமர்த்தினுர். அவரும் குருவிற்குரிய தொண்டைச் செவ்வனே செய்துவந்தார்; பதினுரும் ஆண்டு முடியும்வரை செயின்ட் பால்ஸ் பள்ளியில் பயின்ருர்; அதன் பின்னர் கி.பி. **1624** ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் **12** ஆம் நாள் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலே யில் பட்டப்படிப்பிற்குச் சேர்ந்தார். முன்னே நல் வினேகள், உரியவனேச் சென்று அடைவதுபோல் மில்டனேயும் கல்விச் சிறப்பு வந்தடைந்தது.

பல்கலேக் கழகத்தில் மில்டன் உதவிச் சம்பளம் பெற்றுப் படித்துவந்தார். மேலும் உணவு விடுதியி லுங்கூடத் தனி உதவி அலுவல்களேக் கவனித்து அதன் ஊதியமாகச் செலவின்றியே உணவும் உண்டுவந்தார். கல்லூரிப் படிப்பின்போதுதான் நம் கவியரசர் லத்தீன் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார்; பல கவிதைகளேத் தனது ஓய்வு நேரங் களில் ஆக்கினுர். அவற்றிற்கெல்லாம் அந்தந்த நாட்களேக் குறித்தே ஆக்குவது வழக்கம். அநேகப் புலவர்கள், மில்டனேவிட இளம்பிராயத்திலேயே கவியாக்குந் திறத்தில் ஈடுபட்டிருப்பினும், இவரது 'இழந்த சுவர்க்கம்'போன்ற சிறந்த கவிதை நூலே எவருமே வெளிக்கொணர்ந்ததில்லே. பள்ளிப் படிப்பு முடிந்த உடனேயே உரைநடையைச் செய்யு

ளாக்கும் திறம்பெற்ருர்; பின்னர் லத்தீன் மொழி யில் உயர் இலக்கியப்பாணியில் செய்யுளாக்கத் தொடங்கிஞர். இவருக்குமுன் இத்தகைய செய்யுட் கள் ஒருவராலுமே ஆக்கப்படவில்லே. எலிசபெத் மகாராணியாரிடம் இருந்த ‘ஹாடன்’, ‘ஆஷம்’ என்ற இலக்கியக் கீர்த்திவாய்ந்தவர்களும் கூட உரைநடை எழுதுவதில் சிறந்தனரே அன்றிச், செய்யுள் செய்வதில் புகழ் பெறவில்லே. இவரது செய்யுட்கள் வெளிவந்ததும் பலர் அவைகளே மதியைக் கண்ட கடல்போல மகிழ்ந்து புகழ்ந் தனர். இலக்கியத்திறனே ஆய்ந்து வியந்தனர். இவ் வாறு கல்லூரிக்கு வெளிப்புறத்தில் புகழ்மாலே பெற்றபோதிலும், கல்லூரியில் மில்டனே மித மாகவே மதித்தனர். கல்லூரிப் படிப்பில் மில்டன் கலே இளவல் (பி.ஏ.) பட்டத்தை **1628** ஆம் ஆண்டிலும், கலே முதல்வர் (எம்.ஏ.) பட்டத்தை **1632** ஆம் ஆண்டிலும் பெற்ருர்.

## வெளிநாட்டுப் பயணங்கள்

இவ்வாறு பட்டம்பெற்று வெளிவந்த மில்டன் தானும் மதப்பணி புரியவேண்டும் என்ற நோக் கத்துடனேயே இருந்தார். எனினும் பின்னர் அத்தொழிலில் உள்ள சில கருத்து வேற்றுமை காரணமாய் அப்பணி மில்டனேத் தன் வயப்படுத்த வில்லே. மக்களேத் தன் மனம்போனபடி ஆட்டி வைத்தலும், தானும் மக்கள் மனப்படி சிலவற்றில் நடத்தலுமே அப்பணியின் இன்றியமையாத செயல்கள். ஆதலால் அப்பணி மில்டனே ஈர்க்க வில்லே. மந்திரி சபையில் பதவி வகித்தல், அர சாங்கத்தில் அலுவல் பார்த்தல் முதலிய வழிகளி

லும் மில்டன் மனம் நாட்டம் கொள்ளவில்லை. ஆதலால் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் தன் தந்தை வசித்துவந்த இடமான பக்கிங்ஹாம்பகுதியிலுள்ள 'ஹார்டன்' என்ற ஊரை அடைந்து தன் அருமைத் தந்தை பக்கலிலேயே வசித்தார். இவ் வாழ்க்கை ஐந்து ஆண்டுகள் நீடித்தது இந்தக் காலத்தில்தான் மில்டன் லத்தீன் மொழி கிரேக்க மொழி இவ்விரு மொழிகளிலுள்ள சிறந்த நூல்களையெல்லாம் நன்கு படித்தார். அப்பொழுது கிரேக்க மகாகவி ஹோமர் எழுதிய 'சாவ்ஸ்' (Circe) என்ற நூலை அடிப்படையாகக்கொண்டு 'கோமஸ்' என்ற ஒரு நாடகம் எழுதினார். இது 'லட்லௌ' என்ற ஊரில் 1634 ஆம் ஆண்டு பிரிட்ஜ்வாட்டர் கோமகனரது புதல்வரும் புதல்வியரும் நடிக்கும் பேறுபெற்றது.

எலிசபெத், ஜேம்ஸ், சார்லஸ் ஆகிய அரசர்கள் ஆண்ட காலத்தில் ஐயர்லாந்துக்குச் செயலாளர் பதவியில் 'சர் ஜான் சிங்' என்பார் இருந்தார். இவருக்கு 'சிங்' என்ற ஒரு மகன் உண்டு. 'சிங்' என்பாரும் மில்டனும் சேர்ந்து கல்லூரிப் படிப்புப் படித்தனர். கி.பி. 1637-ல் தனது உயரிய நண்பனுன 'சிங்' இறந்தார். இது கேட்டு மில்டன் 'லிஸிடஸ்' என்றோர் இரங்கற்பா பாடினர்.

அவ்வமயம் தன் நாட்டிலேயே தங்கியிருப்பதில் மில்டனுக்கு வெறுப்புத்தட்டியது. வெளிநாட்டுச் செலவு, அறிவினைச் செம்மை செய்யும் என்று எண்ணினர். பல நாடுகளுக்கும் சென்று ஆங்காங்குள்ள இலக்கியப் பண்பாடு, பிறர் திறன் இவற்றை உணரவேண்டும் என்று அடிக்கடி

அவருள்ளம் தூண்டும். கி.பி. 1637-ல் தாய் இறக்க இந்த எண்ணமும் உருவடைந்தது. தந்தையும் தனயனது எண்ணத்திற்கு இசைவு நல்கினர். கி.பி. 1638-ல் மில்டன், ஐரோப்பாக் கண்டத்தை நோக்கிச் செலவைத் தொடங்கினர். முதன் முதலில் அவர் பிரான்சின் தலைநகரான பாரிஸ் மாநகரத்தை யடைந்தார். அப்பொழுது பிரெஞ்சு சபையில் ஸ்வீடன் தேசத் தூதர் 'குரோஷியஸ்' இருந்தார். அவரையும் காணும் வாய்ப்பு மில்டனுக்குக் கிட்டியது.

அவர் பிரான்ஸ் நாட்டைவிட்டு இடாலி நாட்டையடைந்தார். அந்நாட்டின் மொழியினை யும், இலக்கியப் பண்பையும் நம் கவியரசர் முன்பே உணர்ந்திருந்தார். ஆதலால் அவர் இதாலி நாடு முழுவதும் தான் பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். எனினும் அவர் 'பிளாரன்ஸ்' என்னும் இடத்தில் மட்டும் இரு மாதங்கள் தங்கினர். அங்கு ஆன்ருேர் கூட்டுறவு கிடைத்தது. தனது கவித்திறமும் அன்னுரால் போற்றப்பட்டதைக் கண்டார். உழைப்பும் நுட்ப மும் உடைய கல்வியால் ஏற்பட்ட கவித்திறன் உலகில் வீண்போகாது என்ற உறுதி உண்டாயிற்று. தன்னம்பிக்கையும், எடுத்த பொருளில் தெளிவும், அதனை வெளிப்படுத்தும் சீரிய திறனும் பெற்று மில்டன் விளங்கியதால்தான் மிகச் சிறந்த எண்ணற்ற கவிதைகள் எழுதியபோதிலும், அவற்றில் மிகச் சிலரையே அவர் புகழ்ந்துள்ளார். இவ்வாறு மிகுதியாகக் கவிதைகள் எழுதிச் சிலரை மட்டும் புகழ்ந்தோர் அரிது. மக்களைப் புகழ்ந்து எழுதும்

போதும் அச்செயலது இன்றியமையாமை பற்றிப் புகழ்ந்ததாக அமையுமே அன்றி வேறில்லை. அவ்விடத்திலும் அவரைப்பற்றிய புகழ்ச் சொற்கள் மிகக் குறைவாகவே இருக்கும்.

இவர் பிளாரன்ஸில் தான் தங்கிய காலத்தில் பல இடங்களில் சிறப்பும் மதிப்பும் பெற்றுப் பல கூட்டங்களில் கொண்டாடப்பட்டார். ‘கார்லோ டேட்டி’ (Carlo Dati) என்பார் இவரது கவிச் சிறப்பைப் புகழ்ந்து செப்புப் பட்டயம் நல்கினர்; ‘பிரான்ஸினி’ என்பார் ஒரு புகழ்ப்பாமாலை அளித்தனர். இவ்வாறு சென்றவிடமெல்லாம் சிறப்புற்று விளங்கிய நம் புலவர் பெருமான் அவ்வூரை விட்டு வீயன்னு அடைந்தார். அங்கிருந்து ரோமாபுரி சென்ருர். அறிஞரும், சான்ருேரும் அகமகிழ்வுகொண்டு மில்டனை ரோமாபுரியில் வரவேற்றனர்.

ஆக்ஸ்போர்டில் படித்த அறிஞரான ஹால்ஸ்டீனியஸ் என்பார் அங்கு ஓர் வாசகசாலையின் தலைவராய் இருந்தார். இவர் கார்டின் பார்பரினியை அறிமுகப்படுத்திவைத்தார். அவரது கவிதைத் திறன் கண்டு பலரும் களித்தனர்; தான் பெற்ற பாராட்டுரைகளையெல்லாம் தனது பாடல்களுக்கு முன்னர்தான் அச்சிட்டு வெளியிடுவது வழக்கம்; ரோமாபுரியிலும் இரண்டு மாதங்கள் தங்கினுர். அக்கால அளவு அவ்வூரைச்சுற்றிப் பார்த்துக் கேளிக்கைகளில் ஈடுபடுதற்குப்போதும் என்ருலும் படிப்பதற்கும் பழக்கங்களை உணர்தற்கும் நடத்தைகளை அறிவதற்கும் போதாதென்றே கூறலாம்.

ரோமாபுரியினின்றும் கிளம்பி நேபிள்ஸ் என்னும் பட்டணத்தை ஒரு துறவியுடன் அடைந்தார். அத்துறவிதான் மில்டனுக்கு 'மான்லோ' என்பாரை அறிமுகப்படுத்தினர். இருவரும் தத்தம் மொழியில் ஒருவரை ஒருவர் புகழ்ந்தனர். அதில் மில்டனது புகழுரைகளைப் படித்த மான்லோ ஆங்கிலப் பண்பாட்டின் உயர்வினையும் மொழியின் வளமையையும் பாராட்டினர். நேபிள்ஸ் நகரை விட்டு சிசிலித்தீவையும், கிரீஸ் நாட்டையும் காண விழைந்தார். அப்பொழுது தன் தாய் நாடான இங்கிலாந்தில் அரசனுக்கும், பாராளுமன்றத்திற்கும் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளை அறிந்தார். ஆகவே தாய்நாடு குழப்பமுற்று இருக்கையில், தான் நாடு காணும் அவாவில் ஈடுபடுதல் தகுதியல்ல என்பதை ஆய்ந்துணர்ந்தார். தன் நாட்டு மக்களின் சுதந்திர உணர்ச்சியோடு தானும் தாய் நாடு சென்று மக்களோடு ஒட்டி வாழ்வதே தன் கடன் எனக்கொண்டார். உடனே ரோமாபுரியைத் திரும்ப அடைந்தார். அங்கு மதத்தைப்பற்றி வாய்க்குவந்தபடி பேசியதை உணர்ந்த மதத்தீவிர வாதிகள் மில்டனுக்குத் தீங்கிழைக்க எண்ணினர். ஆனல் மில்டன் யாதொருவிதமான ஆராய்ச்சிப் போட்டிகளிலும் ஈடுபடாமலிருந்தார். அப்போது சிறையில் இருந்த கலிலியோவைப் பார்த்துப் பேசியதைத் தவருக மதத் தீவிரவாதிகள் நினைத்திருக்கக்கூடும். தனக்கு விருப்பமில்லாவிடினும் மதச்சார்பான எந்தச் சொற்பொழிவிலும் தான் ஈடுபடாமல் ரோமாபுரியில் மேலும் இருதிங்கள் தங்கிய பின்னர் 'பிளாரன்ஸ்' இவரை அழைத்தது. அங்கிருந்து லூக்காவைத்தாண்டி வெனிஸ்

அடைந்தார்; இசை நூல்கள் பலவற்றையும் சேக ரித்தார்; பல சிறந்த நூல்களும் அங்குக்கிடைத்தன. பிறகு வைதிகத்திற்கு உயிர் நாடியாக விளங்குகின்ற ஜெனிவாவை அடைந்தார்; மதத்தின் புனித குரு மாரும், நிரம்பப் படித்த அறிஞருமான ஜான் டியடோடி என்பாருடனும் பிரடரிக் ஸான்ஹீம் என்பவருடனும் பழகினர்; 1639 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அடைந்தார். இவ்வாறு ஐரோப்பாக் கண்டத்தைச் சுற்றிப்பார்ப்பதில் சுமார் ஒன்றேகால் ஆண்டுகள் கழிந்தன.

### ஆசிரியத் தொழில்

இங்கிலாந்து திரும்பியதும் தனது உயிர் நண்பஞன சார்லஸ் தேவடோடி என்பவரது மரணத்தை உணர்ந்தார். அவர் இறந்தது குறித்து ஓர் இரங்கற்பா எழுதினர். அப்பாடல் கிராமிய வாழ்க்கையையே சித்தரிக்கின்றது. திரும்பிவந்த மில்டன், ‘ரஸல்’ என்னும் தையற் கலைஞரின் உதவி கொண்டு ஒரு வாடகை வீட்டில் தங்கினர். தன் தங்கையின் பிள்ளைகளான எட்வர்டையும், ஜான் பிலிப்ஸ்ஸையும் தன் கண்காணிப்பிலேயே வைத் துக் கல்வி புகட்டினர். 1641-ல் ஆல்டர் கேட் தெருவிற்குத் தனது இருப்பிடத்தை மாற்றிய பின்னரே, ஜான் மில்டனைத் தேடி மாணவர்கள் வந்தனர். அப்போது இங்கிலாந்தில் குடிமக்கட் கும் அரசனுக்கும் இருந்த வேறுபாட்டைக் கண்டு தன்னுலாவன செய்ய நினைத்த மில்டன் ஒரு ஆசிரியராக அமர்ந்தார் என்பதை நினைக்கப் பலரும் வியப்பர். பிற்கால மக்கள் கவியரசரான

மில்டனை ஓர் ஆசிரியர் என்று இழிவுபடுத்தி எழுதுவதா என்றுகூட நினைப்பர். ஆனால், நம் கவிஞர் ஆசிரியப் பணிபூண்டு மாண்புடைய மாணவர்களைக் கூட்டிக் கற்பிப்பதையே தனது உயர் தொழிலாகக் கொண்டார் என்பதில் ஐய மில்லை. ஏனெனில், அவர் ஊதியங்கருதி ஆசிரி யத் தொழில் புரியவில்லை. குடும்பத்திற்குத் தேவை யான செல்வத்தை அத்தொழில் நல்காவிடினும் கண்ணியமும், பயனுமுடைய தொழில் என்று கருதியே மன அமைதி அடைந்தார் மில்டன்.

பத்து முதல் பதினைந்தாண்டு முடியும் அள வும் உள்ள மாணவர்கட்கு மில்டன் கிரேக்க, லத்தீன் மொழியில் உள்ள பல சிறந்த நூல்களைக் கற்பித்தார். மேலும் மில்டன் வெறும் இலக்கி யத்தை மட்டும் பயின்று நாட்களைக் கழிக்குமாறு தன் மாணவர்களை விடவில்லை. வெளியுலக அறிவு, பயனுள்ள கல்வி, வானக்கலை, நிலநூல், அறிவு என்று இவையாவும் நல்குவதே கல்வியின் நோக்க மாதல் வேண்டும் என்பது கருதி அவற்றிலுள்ள ஐயந்திரிபுகளை அகற்றித் தெள்ளிய முறையில் கற்பித்தார். இது மிகவும் போற்றத்தக்கதாகும். கௌலி என்ற அறிஞரும், தான் மனோநிலையில் கண்ட கல்லூரியில் மேற்கண்ட பாடங்கள் எல்லாம் கற்பிக்கப்படவேண்டுமென்றே கருதினார். இவை யாவும் தவிர மில்டன் தன் மாணவர்க்கு மதக் கல்வியையும் ஐயமறப் போதித்தார். ஒவ்வொரு ஞாயிறும் தியானமுறை கற்பிப்பதில் கழியும்; தானும் குறைவாக உணவு உண்டு மிக வருந்தியும் நூல் களைக் கற்றார். தன் மாணவரும் அவ்வாறே செய்ய

வேண்டுமென்று விரும்புவதாக அடிக்கடி கூறுவார். எப்பொழுதாவது மாதத்திற்கு ஒருமுறை இரு முறைதான் பாடம் கற்பிக்காத நாளாகக் கழியும்.

அப்பொழுது தன் நாட்டில் பெரிதும் தீவிர மாகப் புகைந்துகொண்டிருந்த மதவேறுபாடுபற்றிய பிரச்னைகளைப்பற்றி எழுதுவதில் தானும் ஈடுபடலா ஞர். சர்ச்சுக்கு எதிரிடையாக ("Reformation") என்று எழுதி இருபாகங்கள் வெளியிட்டார். "ஹால்" என்னும் பிஷப் எழுதிய "பணிவான புனிதத் தன்மை" என்ற நூல் வெளிவந்தது. அதனை எதிர்த்துப் பலர் எழுதினர். அவருள்ளும் மில்டன் **1641**-ல் எழுதிய எதிர்ப்பே சிறந்த முறை யில் அமைந்திருந்தது. **1642**-ல் ("The reason of Church Government urges against Prelaty") என்ற நூல் எழுதினர். இந்நூலில் தன்னுடைய அறிவாற்றல்களால், நாட்டிற்குத் தன்னுலியன்ற மட்டும் உதவ முடியும் என்பதனை உணர்த்தி யுள்ளார். இத்தகைய அறிவாற்றல்களை எல்லாம் வல்லவரைத் தொழுவதாலேயே பெற முடியும் என்பதனை இந்நூலில் அறிவுறுத்துகிருர். ஈசனைத் தொழுவதற்கு இடைவிடா உழைப்போடு இடையீடில்லாத நல்ல படிப்பும் தேவை என்பதை நிலைநாட்டுகிருர். நாம் காணும் வெளிக் காட்சிகளையும், செய்திகளையும் நிதானமாக ஊன்றிக் கவனித்து மனதிலேயே எண்ணிக்கொள்வதாலும் கடவுள் பக்தி தோன்றும் என்றும் கூறுகிருர். இவ்வாறு உள்நோக்குக் கலையில் சூழ்ந்து பிரவே சித்ததாலேயே "இழந்த சுவர்க்கம்" (Paradise Lost) எழுதி வெளியிட ஏதுவாயிற்று.

அவ்வாண்டிலேயே, இதுபற்றி மேலும் இரு பிரசுரங்கள் வெளியிட்டார். இவைபற்றி அவரது இலக்கிய உலகச் சச்சரவாளரில் சிலர் இவரைத் தாழ்த்திப் பேசிக் கல்லூரியில் கற்றவற்றைக் கற்ற படியே எழுதினர் என்று கூறினர். அதற்கு நம் மில்டன் கல்லூரியையும் கல்லூரிக் கல்வியையும் பற்றி விரிவாக எழுதித் தன் கருத்தை நிலைநாட்டினர். ஆகவே பிற எழுத்தாளர் ஏதேனும் தவறிப் பேசினுல் மில்டனுல் மட்டந்தட்டப்படுவர் என்பதில் ஐயமில்லை. இதனை ஒட்டியே "மில்டன் கோபித்தாலுனல் நரகமும் சீர்கேடுறும்" என்ற பழமொழியும் ஏற்பட்டது.

**1643** ஆம் ஆண்டு மே திங்களில் எஸ்ஸெக்ஸ் என்பவரால் ரீடிங் என்ற இடம் எடுத்துக் கொள்ளப் பட்ட பின்னர், மில்டனின் தந்தை மில்டனுடனே வந்து வசிக்கத் தலைப்பட்டனர். அப்போதுதான் புலவரது பள்ளியும் மாணவர் எண்ணிக்கையால் மேலும் அதிகரித்தது.

### திருமணமும் இல்லற வாழ்க்கையும்

மில்டன் தற்போது **35** வயதை அடைந்தார். கலைச்செல்வியை மணந்து களித்துக் கவிதையின்பத்தைப் பெற்றிருந்த நம் மில்டன் இல்லற வாழ்விலும் நோக்கங்கொண்டார். ஆக்ஸ்போர்ட்ஷையரில் ஒரு நீதிபதி இருந்தார். அவர் பெயர் பவுல் என்பதாம். அப்போது அவர் விட்லன்டைட் என்ற இடத்தில் வாழ்ந்துவந்தார். அவரது குமாரியின் பெயர் மேரி. அவ்வம்மையாருக்கும் மில்டனுக்கும் **1643**-ல் திருமணம் நடந்தேறியது அவளைத் தன் வீட்டிற்கு உடனே அழைத்துச்

சென்று இல்லற இன்பம் யாவும் பெற எண்ணங் கொண்டார். வாழ்க்கைத் துணைவியான மேரியோ இவரது உழைத்த படிப்பும், குறைந்த ஆகாரமும் கண்டு வியப்படைந்தார். மேரியம்மையாரோ பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவள். எப்பொழுதும் பலருடன் பேசியும் பாடியும் ஆடியும் களிக்கும் குணம் உள்ள சுற்றுச் சூழலிலும் நிரம்ப உணவு உண்ணும் பழக்கத்திலும் வளர்ந்தவள். இவரது (மில்டனது) பற்றற்ற இலக்கிய வாழ்வு அவரது உள்ளத்தைக் கவரவில்லை. அவளது தோழிகளும் மேரியின் மனோநிலையை உணர்ந்தனர். அவளது தந்தை மில்டனுக்கு ஒரு கடிதம் எழுதவே, மில்டன் தன் இல்லறத் துணைவி சின்னாள் அவளது நண்பர் குழாத்துடன் தங்கிவர அனுமதித்தார். அவள் தன் பிறந்தகம் சென்ற பிறகு தேனைத்தேடி வண்டு மலருள் நுழைவதுபோல் மில்டனும் கவிதையின் நயம்தேடி இலக்கியங்களில் நுழைந்து ஈடுபட்டார். தன் காதலி தன்னைவிட்டுப் பிரிந்ததைப் பற்றியே எண்ணாதவரானார். மைக்கல்மஸ் (Michael-mas) நாட்களில் தன் மனைவி திரும்புவாள் என்று எண்ணியிருந்த நாட்களும் வந்தன. மில்டனிடமிருந்து வந்த கடிதங்களும் பயனின்றியே கிடந்தன. மேரியம்மையும் திரும்ப விருப்பமின்றியே இருந்தனள்.

மேரியம்மையோ பிரபுக்கள் வழிவந்தவள். ஆதலால் புலவர் பிரபுக்களைப்பற்றியும், மண வாழ்க்கை பற்றியும் விரிவான பிரசுரங்களை வெளியிட்டு அனுப்பினார். விவாகரத்தும் செய்தார். இதனைப் பிரபுக்களும் பாதிரிமார்களும் கண்டனர்.

பிரபுக்கள் கோபித்தனர். தங்கள் கட்சியைப் புறக் கணித்ததாகக் கருதினர். தங்கள் கட்சியை இது காறும் ஆதரித்தார். இவ்வாறு திடீரென்று விட்டுச் சென்று மதகுருமார்கள் கட்சிக்குச் சென்றுரே என்றும், உண்மையைவிடத் தன் கருத்தே முக்கிய மாகக் கருதுவோர் என்றும், அவரைக் குற்றஞ் சாட்டினர். இவ்வாறு மில்டன் பிரபுக்களின் விரோதியானுர்.

மேரியின் உறவினர்கள் மில்டன் செயலுக்கு வருந்தி எவ்வாறேனும் இவ்விருவரையும் திரும்ப ஒன்று சேர்த்துவைக்கவேண்டும் என்று விரும்பி னர். டாக்டர் டேவிஸ் என்பவரது மகளைத் தனது வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளும் நோக்கத் துடன் சென்ருர். ஆனல் டாக்டர் டேவிஸ் முதலியோர்க்குங்கூட நமது கவிஞர் மேரியை மன்னித்து ஆவலுடன் திரும்பவும் வாழவேண்டும் என்றே விரும்பினர். வேருெருநாள் தங்கள் உறவினருள் ஒருவரான "பிளாக் பார்ரோ" என்பவ ரது வீட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு தன் முதல் மனைவி மேரி இருப்பதைக்கண்டு வியப் புற்ருர். மேரியும் அவரை வணங்கித் தன்னை மன்னித்து ஏற்குமாறு வேண்டினுர். மில்டன் "சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம், பெரியோ ராயின் பொறுப்பது கடனே" என்ற தொடர்க் கிணங்க அவளைப் பொறுத்து ஏற்ருர். உறவினர் களும் இருவர்க்குள்ளும் நலம் நிலவுமாறு பலவாறு புகழ்ந்து பேசினர்.

இதன் பின்னர், தன் மனைவி, அவளது பெற் ருேர் இவர்கள் யாவரையும் தன் இல்லத்திலேயே

அழைத்துக்கொண்டுவந்து குடும்பம் நடத்திஞர். மேலும் மிகுதியான மாணவர்கள் தன்னைத் தேடி வருவதற்காக "பார்பிக்கன்" என்ற விடத்தில் ஒரு பெரிய வீட்டில் குடியேறிஞர். தன் மனைவி வழி உறவினர்களும், ஏராளமாகத் தன் வீட்டிற்கு வந்து போயினர். கல்வியைக் கவிஞர் மில்டன் தன் உறவினர், நண்பர், பிரபுக்கள் முதலியோரது குழந்தைகட்கே கற்பித்தார். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்ருல் தனது இலக்கிய அறிவை மில்டன் யாவர்க்கும் பயன்படுத்தாது சிறந்த செல்வந்தனைப்போலத் தனது நண்பர்க்கே பயன்படுத்தி வந்தார்.

நம் புலவர் நூல் வெளியிடுவோர், அச்சகங்கள் இவற்றிற்குள்ளான அரசியலார் கட்டுப்பாடுகள் இவற்றைப்பற்றிப் பல விடங்களில் பலவாறு பேசிஞர்; தனது நேரத்தைச் சொற்பொழிவாற்றுவதில் செலவிட்டபோதிலும், 1645-ல் அவர் எழுதிய "அலிக்ரோ" என்ற பாடலும், "பென்ஸெராஸோ" என்ற பாடலும் வெளிவந்தன.

இவ்வாறு மில்டன் சிறந்த ஆசிரியராகவும் கவிஞராகவும் பணியாற்றிக்கொண்டிருந்தபோது தான், பாராளு மன்றக் கட்சியினருக்கும், அரசனுக்கும் இடையே மனவேற்றுமை வளர்ந்துவந்தது. அவ்வமயமே, நாட்டுப் படையும் மாற்றியமைக்கப் பட்டுப் பலரும் போர் வீரராய்ச் சேர்ந்தனர். 1645 ஆம் ஆண்டில் மில்டன் அல்பர்ன் என்ற இடத்திலிருந்து வேருெரு சிறு வீட்டிற்குச் சென்று குடியேறிஞர். அவர் இங்கிருந்துகொண்டு ஜேம்ஸ் அரசர் இறக்கும்வரை யாதொன்றும்

வெளியிட்டதாகத் தெரியவில்லை. அரசன் இறந்த பின்னர் பிரபுக்கள் அரசனைக் கொலைசெய்தோரை வெறுத்துப் பலவாருக எழுதியபொழுது மக்களுடைய மனதை ஆற்றுதல் வேண்டி ஓர் எதிர்ப் பிரசுரம் வெளியிட்டார்.

அரசியல் தொண்டு

ஆர்மண்டிற்கும் ஐயர்லந்து கலகக்காரர்களுக்குமிடையே அமைதி வேண்டிய சட்டத்தைப்பற்றிப் புலவர் தன் கருத்தை வெளியிட்டார். இதன் பிறகு பிற ஆசிரியர் எழுதிய நூல்களில் உள்ள குற்றங் குறைகளைக் கண்டுபிடித்துக் கண்டிக்கும் தொழிலில் அரசியலார் மில்டனை அமர்த்தினர்; அத்தகைய பதவியிலிருக்குங்கால், பிறர் எழுதிய நூல்களிலுள்ள சிறு குற்றத்தைக்கூடப் பெரிதும் கண்டிக்கத் தலைப்பட்டுத் தீவிரமாகவே கண்டித்திருக்கிருர்.

இரண்டாம் சார்லஸ் மன்னர் ஓடி ஹாலண்ட் நாட்டில் அடைக்கலம் புகுந்தார். அறிவு நிறைந்த சால்மிஷியஸ் என்பவர் அவருக்கு நண்பரானுர். அவ்வறிவாளி லேடன் என்ற இடத்தில் வசித்து வந்தார். அவரைத் "தன் தந்தை அரசியல் பதவி வகிக்குங்கால் யாதொரு கேடும் மக்கட்குச் செய்ததில்லை" என்பதை மக்கள் மனதில் பதியுமாறு எழுதி வெளியிடும்படி சார்லஸ் வேண்டினுர். கற்ரேர் கருத்தைக் கவருமாறு செய்தியை எழுதும் ஆற்றல் படைத்தவரும், படித்த அறிஞர் யாவரினும் ஒருபடி மிகுதியாகவே ஒரு செய்தியை விளக்கும் நிபுணருமான சால்மிஷியஸை சார்லஸ் புகழ்ந்தார். மக்கள் மனநிலையையும் சமூக

உணர்ச்சியையும் சிறிதும் பொருட்படுத்தாத சால் மிஷியஸ் அரசரின் விருப்பத்திற்கிணங்கி "மன்னர் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கி.பி. 1649-ல் வெளியிட்டார். அது பலர் கருத்தையும் கவர்ந்தது. இதை அறிந்த அரசியலார் மில்டனை அழைத்து இதற்குப் பதில் வெளியிடவேண்டினர். புலவர் எழுதியதே சிறந்தது என்று யாவரும் கொண்டாடும் முறையில் 1650-ல் மில்டன் பதிலும் வெளி வந்தது; அதில் சால்மிஷியஸ் எழுதியவை மனிதத்தன்மையற்றவை என்று வன்மையாக மில்டன் கண்டித்திருந்தார்.

1650-ல் மில்டனது உடலும் தளர்ச்சியுறத் தொடங்கியது. அவரது கண்ணொளி மங்கலுற்றது; ஆயினும் மனவுறுதி குன்றவில்லை; அவரது உறுதி உள்ளம், யாவற்றையும் உந்திமேலோங்கியது. ஆர்வம் நிரம்பித் தளிர்த்தது. மக்கள் அவரது மறுப்புரை நூலுக்கு ஆயிரம் பவுன் அளித்தனர். அவரை "இலக்கிய அரசன்" என்றே மக்கள் மதிக்கத் தொடங்கினர். பலரும் அவர் எழுதிய நூலைப் படித்து மகிழ்ந்தனர்.

சால்மிஷியஸ் எழுதியதோ அதிகாரத்தையும், அதிகாரத்திற்கு மக்கள் பணியவேண்டிய இன்றியமையாமையையும் விளக்குவதாக இருந்தது. ஆதலால் அவரை மக்கள் வெறுக்கத் தலைப்பட்டனர். அவரும் இலக்கிய உலகில் இருந்து ஒதுங்கி 1653-ல் இறந்தார்.

இக்காலத்தில், கிராம்வெல் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தானே அதிகாரத்தைக் கைக்

கொண்டான். அவன் அவ்வாறு ஏதேச்சாதிகார மாய் நாட்டை ஆளத் தொடங்கியது உள்நாட்டுச் சண்டையால் அல்லலுற்றிருந்த குடிமக்கட்கு வேண்டியேயிருந்தது. அரசன் கொலையுண்டது நீதியே என்று வாதிட்ட மில்டனும் பதவியாசை யால் தான் விரும்பிய சுயேச்சை கிடைக்காது வேறு கொடுங்கோலனிடம் சிக்கிக்கொள்வதுபோல் கிராம்வெல்லிடம் அகப்பட்டுப் பதவி வகித்து அவனது ஆணைக்கு அடங்கி நடந்தார்; கண் பார்வையும் சிறிது சிறிதாக மங்கி வந்தது. அவரது அறிவொளி லத்தீன் செயலாளர் (Latin Secretary) பதவியை வகிப்பதற்குத் தக்க அளவில் வீசியது என்பதில் தடையில்லை. அவரது மனம் வேறு வழியில் திரும்பவோ அடங்கவோ முடியாதபடி கிளர்ச்சியும் துடிப்பும் மிக்க நிலையிலிருந்தது.

மில்டனின் முதல் மனைவி மேரி **1654**-ல் இயற்கை யெய்தினுள். அவள் மூன்று பெண் குழந்தைகளையும், அன்பும் அறிவும் மிக்க கணவனை யும் விட்டுச் சென்ருள். அதன் பின்னர் தன் குழந்தைகளைக் கவனிப்பதற்காக ஹாக்னியில் இருந்த "கேப்டன் உட்காக்" என்பவரது மகளான காதரைன் என்பவளை மணந்து மில்டன் மீண்டும் தன் இல்வாழ்க்கையைத் தொடங்கினுர். அவள் ஓராண்டிற்கெல்லாம் ஒரு குழந்தைக்குத் தாயானுள். குழந்தை பிறந்தது முதலே நோய்வாய்ப் பட்டிருந்த காதரைன் சில நாட்களில் இறந்தாள். மில்டன் அவள்மீது ஓர் இரங்கற்பா இயற்றினுர்; அதன் பின், சில ஆண்டுகள் இலக்கியக் கட்டுரைகட்கும்

மதத்தொடர்பான கட்டுரைகட்கும் ஆதரவளித்தோ, எதிர்த்தோ எழுதுவதில் தனது காலத்தையெல்லாம் கழித்தார்.

கிராம்வெல்லிடம் காரியதரிசி பதவியை மில்டன் வகித்துவந்ததால் ஸ்பெயின் நாட்டோடு போர்தொடுத்தது நியாயமே என்று சில கட்டுரைகள் விளக்கியிருக்கிருர். அக்கட்டுரைகளேப் பல நாட்டவரும் படித்து இன்புற்றனர். ஸ்வீடன் நாட்டு ஏஜெண்டு அக்கட்டுரையைப் படித்து "ஆங்கில நாட்டில் சிறந்த முறையில் லத்தீன் எழுதத் தெரிந்தவர் ஒருவரே. அவரும் குருடராகி வருகிருர்" என்று எழுதினுர் எனின் நமது புலவரின் அறிவின் ஆழத்தை வியவாமல் இருக்கக்கூடுமோ?

## இயற்றிய கவிதை நூல்கள்

நாற்பத்தேழு வயது நிறைந்த மில்டன் வெளியுலகத் தொடர்பைவிட்டு விலகவே எண்ணங் கொண்டார். தனது நிறைந்த அனுபவம் ஆழ்ந்த படிப்பு, வன்மையான அறிவுத்திறன் இவற்றைக் கொண்டு தனது வாழ்நாளின் எஞ்சிய நேரங்களில் மூன்று கவிதைகளேயியற்றத் திட்டமிட்டார். அவை யாவன: இதிகாசப்பாடல், தன்னுட்டு வரலாறு, லத்தீன் மொழியகராதி என்பனவாம். கண்ணெளியிழந்த நிலேயில் அகராதிக்காக உழைப்பது என்பது சாத்தியமற்ற செயலாய் முடிந்தது. ஆனுல் நம் புலவர் கண்ணெளி இழப்பதற்கு முன்பே எழுதிவைத்தவை கேம்பிரிட்ஜ் பல்கலேக் கழகத்தில் லத்தீன் அகராதி அச்சிட்டபோது மூன்று சிறு பிரிவுகளுக்கு உதவின.

நாட்டு வரலாறு எழுதுவதற்குப் பலதிறப்பட்ட வரலாற்று ஆசிரியர்களேயும் தேடிச்சென்று அன்ஞரோடு கலந்து பேசிச் செய்திகளேச் சேகரித்தல் வேண்டும். திறமையும் மறதியுமற்ற பிறர் உதவியும் வேண்டும். இவ்வாறு ஒருவரோடு ஒருவர் உரையாடுதல், எழுதியவற்றைச் சரிபார்த்தல், என்ற இவ்விரு செயல்களுமே கண்ணொளி யிழந்த நிலேயில் முடியாததால் கைவிடப்பட்டது.

நீண்டநாள் அல்லும் பகலும் வருந்தி உழைத்து நினைத்து அதன் பின்னர் தன் வாழ்வின் பிற்பகுதியில் அக்கருத்தைச் சொல்லோவியமாகத் தீட்ட முன்வந்ததே "இழந்த வீடு" என்ற ஒரு புராணக் கவிதா காப்பியமாகும். இதனே மிகவும் வருந்திப் பொறுக்கித் தலேப்பிட்டு அதிக நாள் கழித்து எழுதத் தொடங்கினர்.

தான் எழுதிய "இழந்த வீடு" (சுவர்க்கம்) என்ற கவிதைக்குப் பல மர்மக்கதைகளின் ஆதாரத்தையும், குணங்களே விளிப்பதுபோன்ற தன்மையின் பண்பையும் அடிப்படையாகக் கொண்டார். கேப்பிரியல் என்னும் தேவதை உலகம் படைத்த நாள் முதல் உலகிற்கும் சுவர்க்கத்திற்கும் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தது. உலகப் படைப்பும், மனிதவாழ்க்கை தொடங்குவதும் சுவர்க்கத்தின் ஆணேயால் ஏற்படுகிறது என்ற கொள்கை நிலவிய காலம் அது.

"ஆதம், ஈவ் என்ற இவ்விருவரும் சுவர்க்கத்தினின்றும் துரத்தப்படுகின்றனர். உலகில் துன்பம், அறியாமை, பயம், சாவு முதலியன அவ்விரு

வரையும் வருத்துகின்றன. நம்பிக்கை, ஆதரவு, அறம் இவை அவ்விருவரையும் ஊக்குவிக்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்கவிதை நூல் அமைக்கப்பட்டது. இந்நூல் இயற்றுவதற்கான முயற்சிகள் இடையரூது வளர்ந்து கொண்டுவரும் நாளிலேயே தனது சிறு வெளியீடுகளான ஆலோசனை சபை (Cabinet Council), மதவிஷயங்கள், பாமரர்கள் பலம்" என்பன போன்றவைகளையும்வெளியுலகிற்கு அளித்தார் நமது மில்டன்.

இக்காவியத்திற்கு அடிப்படை எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று அறியப் பலரும் ஆவலுடன் ஆராய்ச்சி செய்யலுற்றனர். சிலர் இத்தாலி நாட்டுத் துன்பியல் கதையினின்றும் இது எடுக்கப்பட்டதோ எனக் கருதுவர். சிலர் ஆதரவற்ற கிராமிய நாடோடிக் கதைகளை அந்நாட்டில் வாழ்ந்தபோது கேள்வியுற்று இக்கதை எழுந்ததோ எனச் சிலர் ஐயுறுவர். அது, துன்பியல் கதையோ, வாய்மொழிக் கூற்றோ, நாடகமோ, எதனின்றும் இக்கவிதை நூல் தோன்றியது என்று அறுதியிட்டு எவராலும் கூறயியலவில்லை. எனினும், அரசனை ஆதரிப்பவர்களோடு கட்டுரை எழுதிச் சண்டையிட்டு நிறுத்திய காலமான கி.பி. 1655-ல் இந்நூல் வெளிவந்தது என்பதே யாவரும் அறிந்த உண்மை.

இச்சந்தர்ப்பத்தில் கிராம்வெல் இறந்தார்; ரிச்சர்டு பதவியை யிழக்குமாறு வற்புறுத்தப்பட்டார். ஏதேச்சாதிகாரத்தோடு கூடிய மக்கள் ஆட்சி பல விதங்களில் சிதறுண்டது. மில்டன் தானும் தனது

குறிக்கோளும் கேடுற்ற நிலையைக் கண்கூடாகக் கண்டார்; எனினும் தான் ஏதேனும் செய்யக்கூடும் என எண்ணினார். புதிய குடியரசை எம் முறையில் நிலைநாட்டலாம் என்பதுபற்றிப் பல வெளியீடுகள், கட்டுரைகள் எழுதினார்.

தீவிர மதவெறியனான ஹாரிஷ்டன் சில சகாக்களுடன் உதவிசெய்து அரசனுக்குப் பதவி கிடைக்கும்படி செய்தான். அரசியல் அமைப்பை அரசனே ஏற்று நடத்தத்தக்க ஏற்பாடுகளும் செய்யப் பட்டன. அரசன் பதவி ஏற்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு மில்டன் "கடவுளையும் அரசரையும் பற்றிய பயம்" என்ற தலைப்புள்ள கட்டுரையை எழுதி வெளியிட்டார். இதற்கு மறுப்பாக எஃடிரேஞ்ச் என்பார் "குருட்டு வழிகாட்டி தேவையில்லை" என்ற தலைப்புடைய ஒரு கட்டுரையை வரைந்தார். மில்டனும் தனது செயலாளர் (Latin Secretary) பதவியை இழக்க நேரிட்டது. தான் மறைந்து பணியாற்றும் காலம் வந்துவிட்டது என்பதையறிந்த நம் புலவர் மேற்கு "ஸ்மித்பீல்ட்" என்ற இடத்திற்கு அருகிலுள்ள "பிராக்தர் லோமியோ" என்ற விடத்தில் மறைந்து வாழலானார். இவரைப்பற்றி எழுதிய ஒவ்வொரு வரலாற்று ஆசிரியரும் இவர் தங்கிய ஒவ்வொரு வீட்டைப் பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை.

இரண்டாம் சார்லஸ் பாராளுமன்றத்தோடு கலந்து ஆராய்ந்து தன் தந்தை முதலாம் சார்லஸ்ஸின் கொலைக்குக் காரணமாயிருந்தவரையெல்லாம் பழிக்குப்பழி வாங்கினான். நம் புலவர் அக்கொலையில் நேரடியாகச் சம்பந்தப்படாததால் மன்னிக்கப்

பட்டுவிட்டார்; ஆயினும் பிறர் செய்த தவறைக் கண்டிக்காதது நியாயமானதுதான் என்று எடுத்து எழுதியதும் தவறேயாகும் அல்லவா? அத்தகைய குற்றத்திற்காக இவர் எழுதிய "ஆதரவு" (Defence) என்ற நூல் கொளுத்தப்பட்டது. இவரைத்தேட எடுத்த முயற்சியும் பலிக்கவில்லை. அரசனும் கவிஞனைக் கொல்லுதல் தவறு என்றுணர்ந்து மில்டனை மன்னித்தான். பொது மன்னிப்புப் பகுதியில் நம் புலவர் பெயரும் காணப்பட்டது.

மில்டன் இந்நிகழ்ச்சிக்குப்பிறகு தன் இருப்பிடத்தை ஆல்டர்ஸ் கேட் தெருவின் அருகிலுள்ள ஜூயின் தெருவிற்கு மாற்றிக்கொண்டார்; அவ்வமயம் முழுக் குருடாகிவிட்டார் என்றே கூறலாம். சிறிது மங்கலாக மட்டும் பார்வை தெரிந்தது; அதிகச் செல்வமும் கையில் இல்லை. தன்னைக் கவனிப்பதற்கு ஓர் உதவியாளனை அவர் மனம் மிகவும் விரும்பியது. அதுபோது செஷயர் என்னும் பகுதியில் ஒரு கனவான் குடும்பத்தில் மணமாகாத எலிசபெத் மின்ஷெல் என்னும் மாது இருந்தனள். அவளுக்குச் செல்வமில்லாவிடினும், அவளை மணக்கலாம் என்று டாக்டர் பெகெட் என்பார் சிபார்சு செய்தார். தனக்கு ஆதரவு வேண்டி அவளைப் புலவர் மணந்தார். சேர்ந்து வாழ மனமில்லாத மூத்த மனைவியோ இல்லறம் நடத்தி மூன்று பெண்களைவிட்டுச் சென்றனள். இரண்டாமவளோ ஒரே ஆண்டு வாழ்ந்து நோய்வாய்ப்பட்டு இறந்தனள். தம் வாழ்நாளிலேயே பெண்களைக் கொடுமைப்படுத்தியும், தம் வாழ்வுக்குப் பின்னர் தன் பெண்களை ஏமாற்றி

யும் வாழ்ந்த மூன்றும் மனைவியையும் மில்டன் மணம் செய்துகொண்டார்.

இந்நிலையில் அரசியல் கருத்துக்களிலோ மதத் தொடர்பான சச்சரவுகளிலோ மில்டன் ஈடுபடு வதை அறவே நிறுத்திக் கொண்டார்; இலக்கியத் திலும், கவிதையிலும் தன் மனதை நிலைநிறுத்தினார்; **1661** ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான சிற்றிலக்க ணத்தையும் வெளியிட்டார். இந்நூல் இலக்கணக் குழப்பத்தைத் தீர்த்தது.

எல்உட் என்பார் கண்ணொளியிழந்த மில்ட னுக்கு லத்தீன் மொழிநூல்களைப் படித்துக்காட்டு வதற்காக அமர்த்தப்பட்டார். அவரும் புலவரின் இருப்பிடத்திற்கு ஒவ்வொருநாளும் பிற்பகலில் வருவார். அப்பொழுதெல்லாம் மில்டன் ஆங்கி லப் பாணியில் லத்தீன் படிப்பது மட்டரகமான பிரெஞ்சு மொழியைக் கேட்பதனை ஒக்கும் என்று கூறுவார். எல்உட் என்பவரை லத்தீன் மொழியை இத்தாலியப் பாணியில் பயின்று கற்க வற்புறுத் தினார். இது பயனற்ற வேலையாக முடிந்தது.

நம் புலவர் கடைசியாகத் தான் வாழ்ந்த வீட்டை மாற்றிப், பன்ஹில் மைதானத்தை ஒட்டிய ஆர்டிலரிலாக் என்ற இடத்தில் அமைத் தார். இதுவே அவர் வாழ்நாளின் கடைசியிட மாய் வாழ்ந்ததாகும். தன் நாட்டிற்கு எவரும் செய்யாத இலக்கியப் பணியைத்தான் ஆற்றவேண் டும் என்று எண்ணியிருந்த மில்டன், இதுகாறும் தன் படிப்பிற்கும், நாட்டுப் பணிக்கும் தன் நேரத் தைச் செலவிட்டதால், கவிதையியற்றும் செயலுக்கு அதிக நேரத்தைச் செலவுசெய்ய முடியவில்லை.

ஆயினும், அக்காலத்திலேயே அவர் கதைகள் எழுதுதல், நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தல், பாகங் களை விகிதப்படுத்தல், நாடகப் பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் ஒன்றுசேர்த்தல் என்ற இவைகளி லெல்லாம் ஈடுபட்டிருந்தார் என்பது உண்மை. அவர் அரசியலில் பதவி வகிக்கும் காலத்தில், அவரது கவியியற்றும் ஆற்றல் பற்றி உலகம் சிறிதும் அறியாதிருந்தது. தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை அரசியல் அலுவலிலும், மதக் கருத்துக்களைச் சீர்திருத்தி அமைப்பதிலும் கழித்த மில்டன் தன் வாழ்நாளின் எஞ்சிய பகுதியை இலக்கியப் பணி புரிவதிலேயே செலவிட்டார்.

**கண்ணொளியற்ற முதுமை நிலை**

கண்ணொளியிழந்த மில்டன் வசித்த அறை சிறியது; கறுப்பு நிறப்படுதா முன்பு தோற்றமளிக் கும். அவர் முரட்டுத் துணியால் தைக்கப்பட்ட சாம்பல் நிற அங்கியை அணிந்து வீற்றிருப்பார்; வீட்டின் முன் வாயிலில் காற்றிற்காக அவர் வந்து அமர்வது வழக்கம். அங்கு தான் தன்னை விரும் பிக் காணவரும் மக்களைக் காண்பார். அவ்வாறு காணவந்தோரில் அவரிடம் அதிக அன்பும் ஆர்வ மும் கொண்டவர் ரிச்சர்ட்ஸன் ஆவர். அவர் பல சமயங்களில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஆடுவார். சில வேளைகளில் கருவிகளைக் கொண்ட இசையில் ஈடுபடுவார். கையில் சீமைச் சுண்ணப்புக் கட்டியுடன் காணப்படுவார். இத்தகைய நேரத்தில் தான் அவரது உலகம் புகழும் கவிதை நூலும் சிறிது சிறிதாக உருவாகியது. இதனை அவரைச் சுற்றியிருந்து பழகிய நண்பர் அறிவர்.

அம் முதுமையில் அவர் சொல்வதைக்கேட்டு நடக்கக்கூடிய பணியாளர் எவரும் இல்லை. தன் நினைவாற்றலால் எத்தனை அடிகள் இயற்றி முடிக்க இயலுமோ அவற்றை மனதில் எண்ணி முடித்துக் கொண்டு, நண்பர் யாரேனும் வரும் நேரத்தில் அவைகளை ஒரேமூச்சில் கூறி எழுதச் செய்வார். பல நண்பரது கையெழுத்தும் காணப்பட்டதால் புலவர் கூறியதை எழுதியோர் பலர் என்பதை அதனைப் படித்துச் சரிபார்த்தவர் கூறுவர். ஆண்டு முழுவதும் மில்டன் இப்பணியில் ஈடுபட்டிருந்தார்; எனினும் இளவேனில், முதுவேனில் காலங்களிலும் வஸந்த காலத்திலும் செய்யுளாக்கும் திறன் மிகுதியும் இருந்ததாக நம் புலவரே கூறியதுண்டு.

“இழந்த சுவர்க்கம்” என்ற காப்பியத்தை இயற்றிய நேரம், அதற்கு அவர் எடுத்த முயற்சி இவை பற்றி நமக்கு முற்றும் தெரியவில்லை. பலர் பலவாறு கூறுவர். சிறந்த கவி தட்ப வெப்ப நிலைகளால் தமது கற்பனைத்திறன் பாதிக்கப்பட்டு வருந்தியிருப்பார் என்பது நாம் நினைக்கக்கூடிய தொன்றல்ல. இவருடன் நெருங்கிப் பழகிய ரிச்சர்ட்ஸன் என்பார் ஒரு நாள் இரவு பூராவும் விழித்திருப்பினும் செய்யுளில் ஓர் அடிகூடச் செய்யாது கழித்த காலமும் உண்டென்று கூறியுள்ளார். நம் புலவருக்குத் திடீரென்று செய்யுளாக்குந்திறன் ஆற்றொழுக்காக ஓடிவரும்; அப்போது, தான் கூறுவதை எழுதுவதற்குத் தனது பெண்களைக் கூப்பிடுவார்; ஒரே மூச்சில் நாற்பதிற்கு மேலான அடிகளைக் கூறுவார். அவரது காவியத்தின் முக்கால் பங்கிற்கு மேலான பகுதிகள் இரவி

லும் காலையிலும் கற்பனைத் திறன் ஊற்றெடுத்து எழுதப்பட்டவையாகும்; கருத்துக்களைக் கோர்வைப் படுத்துவாரே ஒழியச், சொற்கள் தாமாகவே குற்றேவல் செய்து நடக்கும் பணியாளனைப்போல் வந்து ஒன்றன்பின் ஒன்ருய் அமையும். இக்காப்பியத்தின் மூன்ரும் பாகம் தொடங்கும்போது அவர் கண்ணொளியிழந்தார் என்று கருதப்படுகிறது. சார்லஸ் மீண்டும் அரசரானபோது இவர் ஏழாம் பாகம் எழுதியுள்ளார் என்பது அங்குக் காணப் படும் செய்யுளடிகளை ஆழ்ந்து நோக்குவோருக்குப் புலனுகும்.

**1665** ஆம் ஆண்டு லண்டனில் மிகக் கொடிய பிளேக்நோய் பரவி மக்களைத் துன்புறுத்தியது. அக் காலை, எல்உட் பெருமுயற்சி செய்து வாங்கித்தந்த "சால்போண்ட்" என்ற இடத்தில் அடைக்கலமாகத் தங்கினுர். "எல்உட்" தான் (Paradise Lost) "இழந்த சுவர்க்கம்" என்ற கவிதை நூலை முதன்முதலில் முற்றும் படித்துப் பார்த்தார். உடனே புலவரை நோக்கி "நீர் சுவர்க்க இழப்புப்பற்றி எழுதினீரே ஒழிய திரும்பப்பெற்ற சுவர்க்கத்தைப் பற்றி ஏன் எழுதவில்லை" என்று கேட்டார். அவ்வினு நம் புலவர் உள்ளத்தில் மற்ருெரு சீரிய நூலுக்குத் திட்டமிட்டது போலாயிற்று.

அடுத்த ஆண்டு பிளேக்கின் கொடுமை குறைந்தது. தான் முன்பு வசித்துவந்த பன்ஹில் மைதானப் பகுதிக்கே புலவர் திரும்பினுர்; தான் மெய்ப்பாடுபட்டு எழுதிய காப்பியத்தை அச்சிட்டு வெளியுலகிற்கு அளிக்க விரும்பினுர். அதற்கு வேண்டிய அனுமதி மதத்தலைவரிடமிருந்து பெற

வேண்டியிருந்தது. அந்நூலைப் படித்துப்பார்த்த மதத்தலைவர் அருளுள்ளத்தோடு அனுமதிச்சீட்டு வழங்கினர். 1667 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள் நம் புலவர் தனது சிறந்த காவியத்தைச் சாமுவேல் சிம்மன்ஸ் என்பார்க்கு அற்பத் தொகைக்கு விற்ருர். முதற்பதிப்பில் ஆயிரத்து முந்நூறு பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. ஒவ்வோர் பதிப்பிற்கும் ஆசிரியர்க்கு ஏதேனும் ஊதியம் தருவது என்ற ஒப்பந்தமும் காணப்பட்டது. முதன் முதலில் பத்துப்பாகங்கள் பத்துப் புத்தகங்களாக வெளிவந்தன.

வெளிவந்த காப்பியத்தைக் கற்றறிந்தார் கொண்டாடினர்; சிறப்பை வானளாவப் புகழ்ந்தனர். ஆனல் அரசனுக்குப் பொது விரோதியாக மில்டன் காட்சியளித்தமையாலும், பிரபுக்கள் அரசனை ஆதரித்தமையாலும் அவர் நூலைப் பற்றிய புகழுரைகள் யாவரும் அறிய வெளிவரவில்லை. மேலும் பெரும்பான்மையோர்க்கு இச் சிறந்த காப்பியத்தை யுணரும் கல்வித்திறனும் இல்லை. பெண்களும் அப்பொழுது 20 ஆம் நூற்ருண்டைப்போல் அதிகக் கல்வி பெற்றிருக்கவும் இல்லை. ஓய்வு நேரங்களில் படித்து அறிவைப் பெருக்கும் வழக்கமும் அக்காலத்தில் இல்லை. இத்தகைய பிரதிகூலமான நிலைகளிருப்பினும் கி.பி. 1628-லிருந்து கி.பி. 1664 முடிய நாற்பத்தொரு ஆண்டுகளில் ஷேக்ஸ்பியர் எழுதிய நூல்கள் ஆயிரம்படிகளே விற்றன. ஆனல், முதற் பதிப்பில் வெளிவந்த மில்டனது புத்தகத்தின் ஆயிரத்து முந்நூறு படிகள் ஏழு ஆண்டுகளுக்குள்

செலவாயின. இந்நிகழ்ச்சியிலிருந்தே எத்தகைய எதிர்ப்பு இருப்பினும் உண்மையிலக்கியம் சிறந்த மதிப்பைப் பெற்றே தீரும் என்பதை நாம் உணரலாம். இவ்வாறு இவர் எழுதிய சீரியகாவியம் ஆதிக்கத்தின் கொடுமை, பயத்தின் சிறுமை இவைகளினிடையே மின்னித் தவழ்ந்து வெளிவந்தது எனலாம்.

பின்னர் கண்ணொளியிழந்த மில்டன் லத்தீன், கிரேக்கம், இத்தாலியம், பிரஞ்சு இம் மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தம் பெண்களைக் கொண்டு படிக்கச் செய்து கேட்டுக் களிப்பார். "இழந்த சுவர்க்கம்" என்பது அச்சிட்டு வெளிவந்த மூன்றுண்டுகட்குப் பின்னர் நம் கவி இங்கிலாந்தின் சரித்திர வரலாற்றைத் தீட்டி வெளியிட்டார். கோப்ரி கதையிலிருந்து நார்மானியர் படையெடுப்பு முடிய இந்நூல் விளக்குகின்றது. இதனைக் கண்ணுற்ற மத குருமார்களும், புத்தகப் பரிசிலனை செய்யும் அதிகாரிகளும் பல குற்றங் குறைகளைக் கூறிப் பல பாகங்களை எடுக்கும்படி செய்தனர். அவ்வாண்டிலேயே "திரும்பப்பெற்ற சுவர்க்கம்" என்ற கவிதையும் "ஸாம்ஸன் அகோனிஸ்டஸ்" என்ற கவிதையும் வெளிவந்தன. "திரும்பப்பெற்ற சுவர்க்கம்" என்ற நூல் வெளிவந்தது எல் உட்டின் தூண்டுதலினுல்தான். ஆதலால் அந்நூலை அவரிடம் மில்டன் அளித்தார். அவரையும் பெருமைப்படுத்திஞர்.

மில்டன் தனது இறுதிக்காலக் கவிதையான "திரும்பப்பெற்ற சுவர்க்கம்" (Paradise Regained) என்ற நூலையே மிகவும் நேசித்தார். தான் இயற்

றிய நூல்கள் யாவற்றினும் இது ஒன்றே சிறந்தது என்பது அவர் கருத்து. அறிஞர் பலரும் இழந்த சுவர்க்கம் என்ற காவியமே உயர்வுடையது என்று திட்டமாகக் கூறினர். மில்டனே காவியம் அளித்த கவியரசர்; மாறுபாடான கருத்துக்களைத் திட்டமுற எழுதித் தக்கமுறையில் விடையிறுக்கும் எழுத்தாளர்; சிறந்த அரசியல்வாதி; இவர் பள்ளி மாணவர்கள் படிக்கும் நிலைக்கு ஏற்பத் தன் அறிவின் திறத்தை ஒழுங்குபடுத்தித் தனது வாழ்நாளின் இறுதியில் "ராமஸ்" சென்ற முறையில் ஒரு தத்துவநூலை வெளியிட்டார். இந்நூல் வெளிவந்த பின்னர் நாட்டின் அமைதியான நிலைகண்டு சாத்வீக முறையில் இங்கிலாந்து சர்ச்சை (Church) எதிர்த்து ஒரு கட்டுரையும் எழுதினர்.

மில்டனுக்கு வயது அறுபத்தாறு வந்தது; உடலும் நோயினல் துன்புற்றது. **1674** ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் **10** ஆம் நாள் பன்ஹில் என்னும் இடத்தில் சொந்த வீட்டிலேயே அமைதியாக இயற்கை எய்தினர்.

இவரது தந்தை அடக்கம் செய்யப்பட்ட ஷெயிண்டகில்ஸ் என்ற இடத்தில் கிரிப்பின் கேட்டில் இவர் உடலும் அடக்கம் செய்யப்பட்டது. அரசியல் வாதிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், இலக்கிய அறிஞர்கள் முதலிய பல திறப்பட்டவர்களும் இவரது இறுதிப் பயணத்தில் கலந்து பெருமைப்படுத்தினர். இவர் இறந்து பல ஆண்டுகட்குப்பின் **1737** ஆம் ஆண்டில் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபி என்னும் இடத்தில் புலவர்க்குச் செய்யும் மரியாதையாக ஒரு நினைவுச்

சின்னம் எழுப்பப்பட்டு அதன்மீது "இழந்த சுவர்க்கம் எழுதிய ஆசிரியர்க்கு" என்றும் எழுதப்பட்டுள்ளது.

குண நலன்கள்

மில்டன் பெற்ருேருக்கு அடங்கிக் கல்வி பயின்று அன்னாரிடம் பெரு மதிப்பும் அன்பும் கொண்டவர். இவரது உடலழகைக்கண்ட கல்லூரி மாணவர்கள் யாவரும் இவர்க்குக் "கல்லூரி அழகி" எனப் பெயரிட்டனர் என்பர். அவர் எந்த நேரத்தையும் வீணுக்காமல் ஏதேனும் செய்துகொண்டிருப்பார்; வீணுகக் கழித்தநேரமே அவர் வாழ்நாளில் காணயியலாது. அவர் கையில் ஒரு கத்தியிருக்கும்; கத்திச்சண்டையிடுவதில் தேர்ச்சி பெற்றவர். ஒளிவாய்ந்த அவரது கண்களினின்றும் அறிவொளி வீசும். அவர் தம் வாழ்க்கை முழுவதுமே தன்னே ஒரு கடமை தவருத மாணவனுக நினைத்தே வாழ்ந்துவந்தார். அவர் உணவு உண்ணும்போது சிறந்தவற்றை உண்டு ஏனையவற்றைத் தள்ளார். அளவு கடவாது மிதமாகவே உண்பார்.

நம் புலவர் இளமைப் பருவத்தில் இரவு நீண்டநேரம் கண்விழித்துப் படிப்பார்; ஆனல் வயது முதிரமுதிரக் கற்குங் காலத்தை மாற்றி அமைத்துக்கொண்டார். முன்னிரவில் படுத்து வைகறையில் எழுந்து கற்பதைக் கைக்கொண்டார். கண்ணெளியிழந்த பின்னர், அவரது அன்ருட வாழ்க்கையைப்பற்றி நாம் தெளிவாக அறியக்கூடும். அவர் எழுந்தவுடன் ஹீப்ரு

மொழியிலுள்ள பைபிளைப் (வேதத்தை) படிக்கக் கூறிப் பிறர் படிக்கத் தாம் அவைகளைக் கேட்பார். அதன் பிறகு பன்னிரண்டு மணிவரை இலக்கியப் பயிற்சி நடைபெறும். ஒருமணிநேரம் உடற் பயிற்சியும் நிகழும். நண்பகல் உணவுக்குப்பின் இசையில் ஈடுபடுவார். இசையறிவுமிக்க பிறர் வரின் அவர் பாடக்கேட்டு இன்புறுவார். இரவு எட்டுமணிவரை தன்னைக் காணவருவோரை அன் புடன் வரவேற்று மனம் கலந்து அளவளாவுவார். இரவு உணவிற்குப்பின் சிறிது தண்ணீர் அருந்தி விட்டுப் படுக்கச் செல்வார். வைகறையில் எழும்ப இயலாத நாட்களில் பிறர் இலக்கியங்கள் படிக்கத் தான் கேட்டு மகிழ்வார். காலையில் தனது கற்பனைத் திறனால் கவிதைகளை ஆக்கி, அவைகளைப் பகற் பொழுதில் எழுதுமாறு கூறுதலே மில்டனின் வேலையாகும்.

கலைச் செல்வி நமது கவியரசரிடம் தவழ்ந்து விளையாடினாள். கலைச் செல்வியின் அருளைப் பெற்றோர் யாவரும் பொருட் செல்வியால் கைவிடப் படுதலே உலக இயல்பாக உள்ளது. அதனால்தான் வள்ளுவரும்

"இருவேறு உலகத்தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்றார். உள்நாட்டுக் கலகத்தில் அரசனை எதிர்த்து மக்கட்படை நின்றபொழுது மில்டன் தனது நில புலங்களையெல்லாம் பாராளுமன்றத்திற்குக் கொடுத்துவிட்டார். போர் முடிந்தபின் அவை களை மீண்டும் பெறமுடியவில்லை. ஏழ்மையுற்ற

அந்நிலையிலும், புலவர், நாட்டிற்கும் மக்கட்கும் தன்னால் தொண்டாற்றக்கூடும் என்பதை லத்தீன் காரியதரிசியாக அமர்ந்து பணியாற்றிப் பிறர்க்கு உணர்த்தினார்; அப்பொழுது கிடைத்த ஊதியம் மிகக் குறைவானதேயாகும். ஒரு பத்திரம் எழுது பவனிடம் கொடுத்த இரண்டாயிரம் பவுனும் மில்டன் இறந்தபிறகு மோசம் செய்யப்பட்டது. புலவர் தனக்குக் கிடைத்த மிகக் குறைவான பொருளைக்கொண்டு மனநிறைவுடன் வாழ்ந்து வந்தார்; தான் இறப்பதற்குமுன் தன்னிடத்திலுள்ள நூல்நிலையத்தை **1500** பவுனுக்கு விற்றார். அதில் அவரது மூன்றும் மனைவி பெண்களுக்குத் தலைக்கு நூறு பவுன் மட்டும் கொடுத்து மீதியைக்கொண்டு சென்றனள்.

அவரது கற்பனைத் திறனால் உண்டான இலக் கியங்கள் மிகச் சிறப்புடையன. உயர்வும் மதிப்பும் பெற்ற எல்லா மொழிகளையும் அவர் அறிந்திருந் தார். ஹீப்ரு மொழியையும் அதற்குரிய இரு வரி வடிவங்களையும் கற்றார்; கிரேக்கம், லத்தீன், இத்தாலி யம், பிரஞ்சு, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் வல்லுநர். ஹோமர் எழுதிய மகாகாவியத்தில் எந்த இடத்தில் எது வேண்டுமாயினும் திருப்பிக் கூறக்கூடிய அளவுக்குத்தான் கண்ணொளியிழந்த காலத்தினும் விளங்கினார் என்றால் லத்தீன் மொழி யில் அவருக்கிருந்த ஆர்வம், அறிவு வன்மை, நினைவாற்றல் என்பவைகள்பற்றிக் கூறவும் இயலுமோ? ஆங்கில அறிவாளிகள் "மில்டன் மகாகவி, ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர், கௌலி" என்ற மூவரையும் அவ்வவரது இலக்கியத் தொண்

டிற்காக வியப்பதுண்டு. இம்மூவருள்ளும் ஸ்பென்ஸர் எழுதியவைகளே சிறந்ததாக எண்ணி விரும்பிக் கற்பார். அவர் மனதில் எப்பொழுதும் நாட்டின் குழப்பநிலே, அரசரதுநிலே, மதக் கிளர்ச்சிகள் முதலியன நிலவியபோதிலும் சர்ச்சையும் (Church), அதன் தலைவரையும் ஒருபோதும் மட்டமாக மதித்ததில்லை. அவர் ரோமாபுரிச் சர்ச்சையோ, இங்கிலாந்து சர்ச்சையோ தழுவியவர் இல்லே.

இவ்வாறு மதத்தில் ஒருவிதப் பற்றுக்கோடும் இல்லாதிருப்பது தவறுதான். மதம் என்பது நம்பிக்கை, பற்றுக்கோடு இவற்ருல் ஆனது. அதனுல் நாம் பெறும் நன்மை மிகச் சேய்மையில் உள்ளதே ஆகும். புறச் சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்தாவிடில் பாமர மக்களுக்கு மத நம்பிக்கை என்பது தம் மனதைவிட்டே அகன்று விடும். முதிர்ந்த அறிவுடைய மில்டன் கிறிஸ்தவ மத உண்மையில் நம்பிக்கையுள்ளவர். வேதப் புத்தகத்தை மிக மதிப்போடு தொழுவார்; வேதப் புத்தகமும், அதுபற்றித் தோன்றிய விளக்கங்களுமே நம்மைக் கடவுளுக்கு அருகில் அழைத்துச் செல்லக்கூடியவைகள் என்று நம்பினர்.

ஆனல் அவர் தன் இளமைமுதல் முதுமைகாறும் புறத்தொழுகையின்றி வாழ்நாளைக் கழித்ததால், பாமரர் அவரை மதிக்கவில்லே. தம்முதல் மூதாதையரே தொழுகையை விட்டதால் அடைந்த கேட்டினே விளக்கிய இத்தகைய புலவரோடு, தொழுகையைக் கைக்கொள்ளவில்லே என்று நீவிர் வினவவும் கூடும். அவர் தனது படிப்பையும் கவிதையியற்றுவதைப்பற்றிய சிந்தனையையும்

ஒரு தொழுகையாகக் கொண்டாரென்றே நாம் கொள்ளல் சாலச்சிறந்தது. ஆனால் குடும்பத்தில் அடிக்கடி ஏற்பட்ட சாவு, குடும்ப ஒற்றுமைக் குறைவு இவற்றால் குடும்பப் பொதுத் தொழுகை யும் இல்லாது போயிற்று.

அவரது அரசியல் கொள்கையையும், தானும் ஒரு குடிமகன் என்று எண்ணி நடந்த வழிவகை களையும், நாம் ஆராய்வோமானால், மக்கள் பணத்தை விரும்பும் அரசனது ஆட்சியைத்தான் விரும்ப வில்லை என்பதை அடிக்கடி எடுத்துக் காட்டி வந்தார்; அழிக்கும் மனோபாவமுடைய ஆட்சிக் குழுவை எதிர்த்தல் மக்கள் கடமை என்று கூறிவந் தார்; மன்னனது எதேச்சதிகாரமும், சர்ச்சு செய்து வந்த கொடுமைகளும் ஒழியவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். எவர் விடுதலையை விரும்பு கின்றனரோ அவர் பிறர்க்கு விடுதலை அளிப்ப தில்லை. இது உலகியல். அவ்வாறே மகாகவி மில்டனும் தனது இல்லத்தில் பெண்களை அடக்கி ஆளவேண்டும் என்றே கருத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தினார்.

இளமைமுதலே கவிதை எழுதும் மனோபாவம் உடைய நம் புலவர் ஒருமுறை கற்பனைத்திறனோடு ஆய்ந்து எழுதியவற்றை நன்கு பாதுகாக்கும் திறன் படைத்தவர். முற்றுப்பெறாத சில கவிதை களையும் சில சமயம் இவர் வெளியிட்டிருக்கிறார். இவர் இத்தாலி, லத்தீன், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் கவிதைகள் இயற்றியுள்ளார். இத்தாலி மொழி வல்லுநர் அவைகளை மிகப் பாராட்டுகின் றனர். லத்தீன் மொழியில் ஆக்கப்பட்டவை

களோ அம்மொழியின் முன்னோரது வழியைப் பற்றியே எழுந்தவையாகும். எனினும் நடையின் தூய்மை, புதிய கருத்துக்களின் உறுதி, சொற்களின் செறிவு, பொருளின் ஆழம் என்பனயாவும் நம் புலவருக்கு உரிமையானவைகளேயாகும். ஆங்கிலத்தில் எழுதிய பிற கவிதைகள் “இழந்த சுவர்க்கத்தை”ப்போன்று மிகச் சிறந்தனவாய் அமையாவிடினும், அவரது சிறந்த அறிவிற்கும், கடன் வாங்காத கற்பனைத் திறனுக்கும் எடுத்துக் காட்டாக மிளிர்பவை எனலாம். அவர் இளமையில் எழுதிய கவிதைகளின் கையெழுத்துப் பிரதியை இன்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் காணலாம். அவரைக் கவிதை இயற்றுவதில் ஆண் சிங்கம் என்று கூறலாம். ஏனெனில், அரியேறு சிறு விலங்குகளைக் கொல்வதில் தன் உடல் வலிமையைக் காட்டாது பெரிய விலங்குகளிடம் காட்டுகின்றதோ அதுபோல் தான் இயற்றிய சிறு கவிதைகளில் தன் அறிவுத்திறனை வெளிப்படுத்தாது தன் திறன் முழுவதையும் “இழந்த சுவர்க்கம்” (Paradise Lost) என்ற கவிதை நூலில் மட்டும் வெளியிட்டார். நாட்டு வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் லிஸிடஸ் (Lycidas) என்ற கவிதை யாவர் மனதையும் கவர வல்லது.

மில்டன் தன் வாழ்நாளில் பலவிதக் கவிதைகளை இயற்றினர்; பல மொழிகளில் உள்ள சிறந்த செய்திகளை ஆங்கிலக் கவிதைகள் மூலம் வெளியிட்டார். நிபுணர்கள் அவரைச் சுயமான அறிவுத் திறனுக்காகவே கொண்டாடினர். கதைகளை

அமைக்கும் திறன், நிகழ்ச்சிகளைப் பொருத்தமான முறையில் வரிசைப்படுத்தும் வன்மை, உரையாடல்களை உணர்த்தும் வகை, இவையாவும் படிப்போரைப் பரவசப்படுத்தும். தன் காலத்திற்குமுன் வாழ்ந்த ஹோமர் என்ற கவியைமட்டுமே தன் லட்சியக் குறிக்கோளாகக் கொண்டார் மில்டன். அவர் தன் சமகாலப் புலவர்களைப்பற்றிச் சிறிதும் எண்ணியதில்லை. துன்பப்படவே பிறந்து துன்பத்திலே வாழ்ந்து, மக்கள் மனம் என்றென்றும் மகிழவே இலக்கியத் தொண்டாற்றிக் கவிதைகளை அளித்துச் சென்றவர் நம் மகாகவி என்பதில் ஐயமில்லை.

# 2. டாக்டர் இலக்குமணசுவாமி முதலியார்



## தோற்றம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்றார் நம் வள்ளுவர் பெருமான். இதற்குப் பொருள் எழுதிய அறிஞர் "புகழ் வந்து அடைவதற்கு வேண்டிய நற்குண நல்லொழுக்கங்களோடு

ஒருவர் தோன்றவேண்டும்" என்ருர். அவ்வாருன நற்குண நல்லொழுக்கங்கள் ஒருவனை எவ்வாறு வந்தெய்துமெனின், பல பிறவிகள்தோறும் ஒருயிர் செய்யும் நல்வினை காரணமாய்த்தான் வந்து அடையும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய பண்புகள் ஒருவர் உயர்வெய்திப் புகழடையக் காரணமாக அமைகின்றன. அவை கருவிலேயே வாய்க்கப் பெற்ருேராய்ப் பிறத்தல் அருமை.

நல்வினைப்பயனுய் நற்பண்புகள் வாய்க்கப் பெற்றுப் பிறந்தவர் பலர் ஆவர். அவருள்ளும் டாக்டர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார் அவர்களும் ஒருவராவர். இவர் இருவகைத் துறையிலும் பெரும் புலவராய்க் காட்சியளிக்கிருர். பிள்ளைப் பேற்று மருத்துவத்துறையிலும், புகழ் நல்கும் கல்வித்துறையிலும் சிறப்புடன் விளங்குகிருர்.

### பிறப்பிடம்

நம் முதலியார் அவர்களது பிறப்பிடத்தைப் பற்றிச் சிறிது கூறுவோம். நீர்வளம் நிலவளங் கமழும் தஞ்சை மாவட்டத்திற்கு வடக்கே ஆர்க்காடு மாவட்டம் உள்ளது. சங்கநாள்தொட்டே இவ்வூர் மிகுந்த சிறப்புற்றது என்பதனை "அழிசி ஆண்ட ஆர்க்காடு" என்ற தொடரினின்றே உணரலாம். முஸ்லீம்கள் ஆட்சி நாளிலும் நவாபுகள் தென்னுட்டை ஆண்டனர். நவாபுகள் ஆட்சி காலத்திலும் ஆர்க்காடே தலைநகரமாயிருந்தது. அவர்களது பெயரையும் "ஆர்க்காட்டு நவாப்" என்றே மக்கள் கூறினர். ஆதலால் இந்த ஆர்க்காடு ஆற்றூர்களுள் பழம் பெருமைகள் பலவும் பெற்று ஏறக்குறைய இரண்டு நூற்ருண்டுகட்கு முன்னரே சிறப்புற்று

விளங்கிவரும் இடம் என்பதில் ஐயம் இல்லை. இத்தகைய மூதூரில் ஒரு பழங்குடி சிறப்புற்றுப் பன்னெடுநாளாய் வசித்துவந்தது. ஆர்க்காட்டு முதலியார், பொன்னேரி முதலியார், பூவிருந்தவல்லி முதலியார் என்று முதலியார் மரபினரை மூவகையாகக் கருதுவர். இம்மூவகைக் குடிகளுள் நமது மதிப்பிற்குரிய இலக்குமணசுவாமி முதலியார் தோன்றியது ஆர்க்காட்டு முதலியார் மரபாகும். இவர் தாளாண்மைகுன்ரு வேளாண் மரபினர். இக்குடியினருள் சிலர் அரசியல் அலுவல் வேண்டி வேற்றூர்களிலும் வசித்தனர். அத்தகையோர் ஆங்கிலம் கற்றுத் தேர்ந்திருந்தனர். அவ்வாறு வாழ்ந்தவருள் முதலியாரின் தந்தையும் ஒருவராவர்.

நம் மதிப்பிற்குரிய முதலியார் அவர்களின் தந்தை கர்நூல் நகரில் 19 ஆம் நூற்ருண்டின் இறுதியில் அரசியல் அலுவலை மேற்கொண்டு வாழ்ந்த காலம் ஒரு நற்காலம் என்றே கூறுதல் தகும். 1887 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14 ஆம் நாள் கர்நூலில் இன்று உலகம் போற்றும் சர். ஆ. இராமசுவாமி முதலியாரும், சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியாரும் இரட்டைப் பிள்ளைகளாய்த் தோன்றினர். நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாய் இரு குழந்தைகளும் வளர்ந்தன. இரண்டு ஆண்டுகளே நிரம்பப்பெற்ற பச்சிளங்குழவிகளாய் இருந்த ஞான்றே அவர்களின் தாய் வானுலகு ஏகினள். தாயே அறுசுவையுண்டிகளைத்தயாரித்து உண்பிக்கத் தக்கவள். அவ்வாறு நாக்கிற்கு உகந்த அறுசுவை இன்பத்தையும் விட்டு, அறிவில் மிளிரவேண்டும் என்று கருதித் தானே எல்லாம் வல்ல இறைவன்

தாயைப் பிரித்தான்போலும். தந்தையே அக்காலந் தொட்டு குழந்தைகளுக்குத் தாயும் தந்தையுமாய் நின்று உதவவேண்டிய நிலை ஏற்பட்டது. அவரும் குழந்தைகளை அன்புடன் பாதுகாத்து வந்தனர்.

பள்ளியில் பயிலும்போது தமது இடைவிடா யுழைப்பினால் ஆசிரியர் அன்பைப் பெற்றனர்; தம் தகுதியால் உடன்பயிலும் மாணவரது மதிப்பைப் பெற்றனர்; ஒவ்வோர் ஆண்டும் முதற் பரிசைப் பெற்று விளங்கியதால் தம் பள்ளி வாழ்க்கை முழுவதும் தலைமையாசிரியர் கவனத்தையும் தம்பால் ஈர்த்தனர். இவ்வாறு பள்ளி வாழ்க்கை முழுவதும் தம் மதியூகத்தால் சிறந்து விளங்கிய இரட்டையர் அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகளிலும் சிறிதும் தவறவில்லை. **1902** ஆம் ஆண்டு மெட்றிக்குலேஷன் தேர்விற்குத் தாம் இருவரும் இடைவிடாமல் உழைத்துக்கொண்டிருந்தபோது அந்தகன் அன்னாரது தந்தையைத் தன்பால்கொண்டு ஏகினன்; பதினைந்து நாட்களுக்குமுன் தங்களுக்கு ஏற்பட்ட அவலநிலையைச் சிறிதும் பொருட்படுத்தாது நன்குதேர்வு எழுதி முதன்மையாகத்தேறினர்; ஆகவே இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனை இடைவிடாது நம்பும் பழக்கம் இளமையிலேயே கொண்டு விளங்கினர்.

பள்ளியிறுதித் தேர்விற்குப் பின்னர் இவ்விருவரும் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாயினர். இராமசுவாமி முதலியார் அரசியற் கலை நூற்களைக்கற்க, நம் முதலியார் அறிவியற் கலை நூல்களைக் கற்கலாயினர். பொது அறிவினைப் பெரிதும் நல்கும் நூல்கள் பல கற்றுத் தேர்ந்தார்.

டாக்டர் மில்லர், டாக்டர் ஸ்கின்னர், டாக்டர் மெஸ்டன் போன்ற பல ஆசிரியர்களும், பலரும் புகழ நூல்கள் பல கற்றுச் சிறந்த பேச்சாளராயும் விளங்கினர். நம் இலக்குமணசுவாமி முதலியார் கல்லூரி இடை நிலை வகுப்புத் தேர்ச்சிக்குப்பிறகு மருத்துவக் கல்லூரி மாணவராயினர்; எல்லா நூல்களையும் நன்கு கற்று மருத்துவ நிபுணராகத் திட்டமிட்டார்.

ஐயங்களைக் கேட்டுத் தெளியும் பண்பையும், ஆராய்ச்சி செய்யும் திறனையும் கண்ட ஆசிரியரும், பிறமாணவரும் நமது முதலியார் எதிர்காலத்து மருத்துவக் கலையில் சிறப்படைவர் என்றே பல காலும் கூறினர்; மருத்துவத் தேர்விலும் முதல்வராக வெற்றிபெற்றார். இராமசுவாமி முதலியாரோ **1908** ஆம் ஆண்டில் சட்ட இளைஞர் (B.L.) தேர்வில் பட்டம் பெற்று வழக்கறிஞர் ஆனார்.

### மருத்துவத் தொண்டு

இன்முகம் கொண்ட இளைஞர் இலக்குமண சுவாமி முதலியார் **1909** ஆம் ஆண்டில் சென்னை அரசியலார் கண்காணிப்புக்கு உட்பட்ட மருத்துவ நிலையத்தில் மருத்துவர் வேலை பெற்றார். அப்போது அவருக்கு வயது இருபத்திரண்டு. அவர் முதன் முதல் மதுரையில் தொண்டாற்றினார்; துன்புறும் மக்களை இன்முகம் கொண்டு வரவேற்கும் இனியராக விளங்கினார்; நோயின் அடிப்படையை நன்கு ஆய்ந்து தெளிந்து, அதன்பிறகு அந்நோயினைத் தடுக்கும் மருந்தை உதவுவார். ஆகவே, தம்மை நாடிவந்தோரை இனிமைகொண்டு ஏற்றலும், நன்மையோடு நோய்க்கு உதவுதலுமே தம் தொண்

டெனக்கொண்ட தொண்டரை மக்கள் கூட்டம் பெரிதும் பாராட்டியது.

ஓராண்டுக்குப்பின்னர் மதுரையிலிருந்து சென்னை சென்று பொது மருத்துவ நிலையத்தில் சல்லியக்கிரியை செய்யும் மருத்துவ நிபுணராய் இரண்டாண்டு பணியாற்றிப் பெரும் புகழ் தேடினர்; சென்னை எழும்பூர் மாதர் குழந்தைகள் மருத்துவ நிலையத்திற்கு 1912 ஆம் ஆண்டு மாற்றப்பட்டார்; தம் தொழில் திறன், நல்லொழுக்கம் முதலியவற்ருல் பெரும் மதிப்படைந்தார். பின்னர் இராயபுரத்தி லுள்ள பிள்ளைப்பேற்று மருத்துவ நிலையம் நம் முதலியாரை வரவேற்றது.

இராயபுரம் சுற்றுச் சூழலில் வாழ்வோர் யாவரும் தொழிலாளர்களே ஆவர். ஆதலால், வீட்டுப் பெண்மணிகளே வேறு துணையின்றித் தம் துன்பத்திற்குப் பற்றுக்கோடு வேண்டி வருபவர். ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு நீக்கித் துன் பத்தால் வருந்துவோருக்கு அன்போடு ஆறுதல் கூறுவார். மருத்துவப் பணிக்கு "அரசரும் ஆண் டியும் ஒன்றே" என்ற சீரிய நோக்குடன் பணி யாற்றினர்.

மீண்டும் 1920 ஆம் ஆண்டில் முதலியார் எழும்பூர் தாய்மார் குழந்தைகள் மருத்துவ நிலை யத்திற்கு மாற்றப்பட்டார்; அங்குப் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக அலுவல் ஆற்றினர். அவர் பிள்ளைப் பேற்றுத் துறை பேராசிரியராகவும், மருத்துவ நிலையத் துறை கண்காணிப்பாளராகவும் இருந்தார். இங்கு இருந்த நாட்களில்தான் இவரது புகழ் நம் நாட்டிலும், ஏன், உலகம் முழுவதுமே பரவியது;

பிள்ளைப் பேற்றுத்துறையில் தனிச் சிறப்படையப் பல நூல்களை வருந்திக் கற்ருர்; மருத்துவ நிலையத்தில் பல மாறுதல்கள் செய்தார். தாய்மாரை நன்கு கவனித்து மருந்து, உணவு முதலியன தந்ததால் அந்நிலையமும் புகழ்பெற்று விளங்கியது.

எத்தகைய சிக்கலான பிள்ளைப்பேற்றையும் முதலியார் எளிதில் குணப்படுத்தவல்லவர் என்னும் பெயர் மாகாணம் முழுதும் பரவியது. தாம் குணப்படுத்திய சிக்கலான பிள்ளைப்பேறுகள் பற்றிப் பல கட்டுரைகள் மேனுட்டுச் செய்தித் தாள்களுக்கு எழுதிப் புகழ்பெற்ருர். அவரிடம் அத்துறையில் பயிற்சிபெறப் பல நாடுகளிலிருந்து மாணவர் விழைந்து வந்தனர்.

**1927** ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கம் முதலியார் அவர்களைப் பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள பல்கலைக் கழகங்களையும், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல்கலைக் கழகங்களையும்பார்வையிட அனுப்பியது. அவ்வாறே, நம் முதலியார் அவர்கள் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் சுற்றிப் பிரிட்டிஷ் தீவுகளையும் கண்டு மகிழ்ந்தார். மேனுட்டு மருத்துவ அறிஞர் பலரும் முதலியார் அறிவுத்திறனைக் கண்டு வியந்தனர். **1930** ஆம் ஆண்டில் பிரிட்டனில் பிள்ளைப்பேற்று மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டது. அப்போது நம் முதலியார் அவர்களுக்கு (F.R.C.O.G.) (Fellow of the Royal College of Obstetricians and Gynæcologists) என்ற பட்டத்தை நல்கினர். இது பெறுதற்கரிய பட்டமாகும்.

வெளிநாடுகளிலிருந்து மீண்டுவந்த இவர், அந்நாடுகளில் கண்ட பல நல்லவற்றைத் தாம்

தொண்டுசெய்யும் சென்னையிலுள்ள மருத்துவ நிலையத்திலும் அமைத்தார். பிள்ளைப்பேற்று மருத்துவத்துறையில் சிறப்புப் பயிற்சி வைத்து, அதற்கெனத் தனி நற்சான்றிதழ்கள் அளிக்க ஏற்பாடு செய்தார். மருத்துவ மாணவர்க்கும், அத்துறையில் வல்லோர்க்கும் பயன்படத்தக்க முறையில் தம் தனித்துறைபற்றி (Obstetrics and Gynæcology) விரிவான நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். அந்நூல் இன்றும் மருத்துவ மாணவர்க்குப் பாடமாய் இருப்பதோடு அது உலக முழுவதும் புகழப்படுபடுகிறது. **1928** ஆம் ஆண்டில் அரசாங்கம் மருத்துவத்துறை நிபுணரான நம் முதலியாருக்கு "இராவ் பகதூர்" என்ற பட்டத்தைத் தந்தது.

முதலில் எழும்பூர் மாதர்-குழந்தைகள் மருத்துவ நிலையத்தை உயர்த்தியதைப் பாராட்டி அரசியலார், அவரை **1939** ஆம் ஆண்டில் அதன் மேற்பார்வையாளராக ஆக்கி, மருத்துவக் கல்லூரித் தலைவராகவும் ஆக்கினர். அப்போதுதான் பல்கலைக் கழகத்தாரைத் தூண்டி மருத்துவம் செய்வோர்க்குப் புதிய பட்டத் தேர்வை முதலியார் ஏற்பாடு செய்தார்.

**1912** ஆம் ஆண்டில் சென்னை மருத்துவக் கழகம் ஒன்றைத் தொடங்கி அதன் மூலம் மருத்துவர் நலனைப் பாதுகாத்தார். **1933** ஆம் ஆண்டில் இந்திய மருத்துவ ஆலோசனைக் கழகம் ஏற்பட்டது. அதிலும் முதலியார் ஒருறுப்பினராக அமர்ந்து செயலாற்றினர். நாட்டுச் சுகாதாரத்தைக் கவனிக்கக் கவலை கொண்டார். பிள்ளைப்பேற்று மருத்துவத் துறையைச் சிறப்பிக்கச் சில புள்ளி விவரங்கள்

சேர்த்தார். அத்துறையில் பல இளைஞரும் ஈடுபட்ட தற்குக் காரணம் முதலியார் செய்த தன்னலமற்ற தொண்டேயாகும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. மருத்துவக் கல்விக்குரிய உட்குழுவின் தலைவராகத் தொண்டாற்றினர். 1948-ஆம் ஆண்டில் ஜெனிவாவில் உலகச் சுகாதாரக் கழக மாநாடு கூடியது. இந்திய அரசாங்கம் ஒரு மருத்துவக் குழுவினை அனுப்பியது. அதன் துணைத் தலைவராய்ச் சென்ற நம் முதலியார் பல அரிய சொற்பொழிவுகளை அங்கு ஆற்றினர்.

## கல்வித்துறைத் தொண்டு

### செனட் சபை (Senate)

பல்கலைக் கழகங்கள் யாவற்றினும் இந்தியாவில் கடினமானது என்று பெயர்பெற்றது சென்னைப் பல்கலைக்கழகமேயாகும். அதில் 1922 ஆம் ஆண்டு வரை அரசியலார் நியமித்த அங்கத்தினரே இடம் பெற்றனர். 1923 ஆம் ஆண்டில் நமது முதலியார் இந்த செனட் சபைத் தேர்தலுக்கு அபேட்சகராய் நின்றார். இவரது கல்வித்திறன், தொண்டின் சிறப்பு, அறிவின் திண்மை இவைகளைக் கண்ட பட்டதாரிகள் இவரைத் தேர்ந்தெடுத்தனர். அன்று முதல் இன்றுவரை, சென்ற முப்பத்திமூன்று ஆண்டுகட்குமேல் நம் செம்மல் பல்கலைக் கழகத் தொடர்புடையோராய் விளங்குவது கல்விக்கும், அறிஞர்க்கும் அவர் ஆற்றிய தொண்டின் சிறப்பே யாகும்.

### சிண்டிகேட் சபை

பல்கலைக் கழகத்தில் செயலாற்றும் குழு சிண்டிகேட் எனப்படும். செனட் சபையிலிருந்து தேர்ந்

தெடுக்கப்படும் உறுப்பினர் சிலர் இச்சபையிலிருந்து வேலை செய்வர். அச்சபையில் உறுப்பினராயிருந்த சர். ஆர். வேங்கடரத்தினம் நாயுடு என்பார் 1925 ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இருந்த இடம் காலியாகவே, அவ்விடத்திற்குச் சர். டாக்டர் இலக்குமணசுவாமி முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆதலால் டாக்டர் மெஸ்டன், டாக்டர் காண்டெத், சத்தியமூர்த்தி முதலிய அறிஞரோடு உடனுழைக்கும் பேற்றினை நம் முதலியார் பெற்ருர். சிண்டிகேட் சபைக் கூட்டங்களில் சிறந்த முறையில் பங்குகொண்டார்.

பல்கலைக் கழகத்திற்கு மூன்று சபைகள் உண்டு. அவை செனட், அக்காடெமிக் கௌன்சில், சிண்டிகேட் என்பனவாம். இம்மூன்று சபைகளிலும் உறுப்பினராய் இருந்த நமது சீரிய தன்னலமற்ற பணியாளர், பேச்சில் வல்லவர்; கருத்தைப் பிறர் உள்ளங்களில் பதியவைப்பதில் நிபுணர்; பல்கலைக் கழகத்திற்கு நன்மையே தேடினுர்; வரவு செலவு கணக்குகளைப் பார்வையிட்டுப் பணத்தைச் சேர்த்து வைப்பதில் சமர்த்தர் என்ற பெயரும் பெற்ருர்.

இவ்வாறு 1923 ஆம் ஆண்டு முதல் இன்றளவும் தொடர்புடைய முதலியாரைப் பல்கலைக்கழகம் 1942 ஆம் ஆண்டும் அவரையே துணைவேந்தராக (Vice-Chancellor)த் தேர்ந்தெடுத்தது. அன்று முதல் இன்றுவரை மூன்ருண்டுகட்கு ஒருமுறை ஒரே மனதுடன் துணைவேந்தராய்த் தேர்ந்தெடுக்கப் படும் பேறுபெற்று நம் முதலியார் விளங்குகிருர்.

தமிழ்த்தொண்டு:—பல்கலைக் கழகப் பழைய விதிகளை மாற்றி 1930 ஆம் ஆண்டு முதல் தனித் தமிழ் வித்துவான் தேர்வுகள் நடைமுறைக்கு வரப் பாடுபட்டார் முதலியார் அவர்கள்; பின்னர் ஆங்கிலப் பட்டம் பெற்ற பிற ஆசிரியர்போலச் சம்பளம் தகுதி முதலியன பெற்றுத் தமிழாசிரியரும் சிறக்க B.O.L. (Hons.) முதலிய பட்டத் தேர்வுகளை ஏற்படுத்தினர். பச்சையப்பன் கல்லூரியிலும் இந்தப் பட்டங்கள் பெறுவதற்குப் பயிற்சி அளிக்க வகுப்புக்கள் ஏற்படுத்தியதற்கு இவரே முதற்காரணமானவர். கல்லூரியில் தமிழாசிரியர் பெறும் ஊதியத்திற்கும் பிற மொழி ஆசிரியர்கள் பெறும் ஊதியத்திற்கும் உள்ள வேறு பாட்டினையும் விலக்கினர். பல்கலைக்கழக இசைத்தேர்வில் மாணவர் விரும்பினல் தமிழ்ப் பாடல்களும் பாடலாம் என்று ஏற்படுத்தித் தமிழிசையையும் போற்றினர். சில கல்லூரிகளில் பி.ஏ. ஆனர்ஸ் பட்டத்திற்குத் தமிழ் முக்கிய மொழியாக அமைந்திருப்பதும், B.T. தேர்விற்குத் “தமிழ் கற்பிக்கும் முறை” பாடமாக அமைந்திருப்பதும் நம் முதலியார் அவர்கள் பணியின் விளைவுகள் எனின் மிகையன்று. B.T. பட்டம் பெற்றவர்க்கு M. Ed. என்ற பட்டத்தைப் பெற ஒரு தேர்வினை ஏற்படுத்திக் கல்வித் துறை விளங்கப் பாடுபட்டார்.

கால்நடை மருத்துவர்க்கென ஒரு புதிய தேர்வு ஏற்படுத்தினர். தாதிமார்க்குத் தனித்தேர்வு, குடும்ப ஆட்சிக்கலைத்தேர்வு, மருந்து மட்டும் பற்றித் தனிப் பட்ட முறையில் பயின்று பெறும் பட்டத்தேர்வு இவைகளெல்லாம் ஏற்பட நம் அறிவுக்களஞ்சியமே காரணமாயிருந்தார்.

வாணிகத்துறையில் நாடு வளம்பெற (B.Com.) பட்டத்தேர்வு ஏற்பட்டது. இவர் காலத்தில் அதற்குரிய விதிகள் சில திருத்தி அமைக்கப்பட்டன. கொடை வள்ளல் அழகப்ப செட்டியார் அமைத்த கைத்தொழிற் கலைக்கல்லூரி நிறுவ நம் முதலியாரே ஊக்கம் அளித்தார். அதனைத் தற்போது பல்கலைக் கழகமே ஏற்று நடத்துகின்றது.

தற்கால உயர்நிலைப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஏற்பப் பெருகிய கல்லூரிகளை நம் முதலியார் அவர்கள் சென்று கண்டு பலமுறைகளில் அவைகளுக்கு ஆலோசனைகள் கூறிவருவது வழக்கம். இவ்வாறு கல்வித் துறையின் பல பகுதிகளிலும் நிரம்ப நுணுக்கமான அறிவுடன் விளங்கிய முதலியார்க்குச் சென்னை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் பெருமதிப்புச் செய்தன. இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் நடக்கும் மாநாடுகளில் இவரைப் பங்கு கொள்ளும்படிச் செய்தன. 1929, 1932 இவ்விரு ஆண்டுகளிலும் டெல்லியில் நடந்த பல்கலைக் கழக மாநாட்டிற்கு இவர் சென்னைப் பிரதிநிதியாகச் சென்ருர்; அவ்வாறே 1934 ஆம் ஆண்டிலும், 1943 ஆம் ஆண்டிலும் முறையே பம்பாயிலும், ஹைதராபாத்திலும் நடந்த மாநாடுகளுக்கும் சென்ருர். இன்றும் இவர் அரசியலாருக்குக் கல்வித் துறையில் அறிவுரைகூறும் கழக உறுப்பினராக இருந்து வருகிருர். 1948 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று பிரிஸ்டல் நகரில் நடைபெற்ற பல்கலைக் கழகத் துணைவேந்தர் மாநாட்டில் பங்கு கொண்டார்.

மருத்துவத்துறையில் நல்ல சீரும் ஆராய்ச்சிச் சிறப்பும் கொண்டு மேனுடுகளில் சென்று உயர்

வெய்திய முதலியார் அவர்களைச் சென்னைப் பல்கலைக் கழகம் **1923** ஆம் ஆண்டு முதற் கொண்டே தொடர்பு படுத்திக்கொண்டு அவரது பணியாற்றும் திறனால் பயனடைந்து மேலும் மேலும் உயர்வெய்தியது. சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இருபத்தி நான்கு ஆண்டுகளாக இடைவிடாத் தொடர்பும் தொண்டும் கொண்டு விளங்கிய பின்னர் நம் அறிஞர் **1957** ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் **28** ஆம் தேதி முதல் பிப்ரவரித் திங்கள் முதல்நாள் முடிய நடந்த நூற்றாண்டு விழாவின் போதும் பங்கு கொள்ளும் வாய்ப்புப் பெற்றார். சிறந்த அணிகலனைப் பேரழகனான இறைவன் அணிவானானால் அச்செயலால் அவ்வணிகலனுக்கு உயர்வு உண்டாகும். இறையருளும், இறைப் பண்பான வேண்டுதல் வேண்டாமை யிலானாய் ஒழுகும் இயல்பு முதலிய நற்பண்புகள் பலவும் கொண்டு விளங்கும் முதலியார் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு பல்வேறு வகையிலும் பலநாள் தொண்டாற்றிய பின், இந்த நூற்றாண்டு விழா இறைவனை அடையும் அணிகலன்போல், நம் கலைஞர் துணைவேந்தராய பருவத்தே வந்து நேர்ந்தது பல்கலைக் கழகத்தின் சீரிய நற்பேறேயாகும் என்பதில் ஐயமில்லை. தான் துணைவேந்தராய் அமைந்திடினும் நூற்றாண்டு விழாவிற்குப் பல்வேறு நாடுகளிலிருந்தும் கற்ற கலைச் செல்வரைத் சேர்த்து மகிழ நல்வாய்ப்பு அளித்தார். நம் நாட்டிலுள்ள சிறந்த அறிவாராய்ச்சிச் செல்வர்களையும், உயர்பதவி வகிக்கும் அமைச்சர்களையும், விஞ்ஞான

அரசரான சர். சி. வி. இராமனையும் நூற்றாண்டு விழாவின்போது பங்கு கொள்ளும்படி செய்த நேர்மை அவரது உயர்பண்பைப் பாராட்டும் இயல்பினதேயன்றி வேறில்லை. தமிழ், தமிழ் இசை மருத்துவக்கலைக்குப் பட்டம், இவையன்றி வேறு பல கலைகளுக்குப் புதிய பட்டப்படிப்பு இவை அமைப்பதில் வல்லுநராய் இருந்ததுபோலவே நூற்றாண்டு விழாவினைத் திறம்படச் சிறப்புடன் நடத்தி வைப்பதிலும் உயர்ந்த நிர்வாகத் திறமை யுடையோராய் விளங்கியது போற்றற்குரியதாகும். நம் நாட்டிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களி னின்றும் பிரதிநிதிகள் வந்ததோடல்லாமல், கானடா, ஆஸ்திரேலியா, ஹாங்காங், மலேயா, பர்மா, ஐரோப்பியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலிய பிற நாடுகளில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களினின்றும் பல சான்றோர் நம் துணை வேந்தர் அறிவொளியில் ஈடுபட்டு வந்து சென்னை மாநகரில் குழுமினர் எனின் அது டாக்டர் இலக்குமணசுவாமி முதலியார் அவர்கள் பிற நாடு களில் சுற்றிப் பார்வையிட்ட காலத்துத் தம்மைப் பற்றியும் சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றியும் அமைத்துரைத்த நன்மதிப்பு அன்றி வேறில்லை.

ஐந்தாம் முறையாக எதிர்ப்பின்றித் துணைவேந்த ராகத் தேர்ந்து எடுக்கப்பட்ட நலனைச், சிறந்த முறையில் நூற்றாண்டு விழாவினை நடத்தியும், பல ஆக்கச்செயல்கள் செய்து நிலைநாட்டியும் பணி யாற்றினர். மறுமுறையும் அவரையே கல்வி நலனில் அக்கரையுள்ள சான்றோர் தேர்ந்தெடுப் பார்கள் என்றும் இறைவனும், நீண்ட வாழ்நாளை

தன்னலமற்ற தியாகியும், மதிநலனும் ஆராய்ச்சி அறிவும் உடைய முதலியார் அவர்களுக்கு நல்கி நம் பல்கலைக் கழகத்தை உயர்த்தி, அதனுல் நம் நாட்டையும் உயர்வடையச் செய்வாளுக.

**நற்பண்புகள்.** டாக்டர் முதலியார் அவர்கள் சாதிமத வேறுபாட்டைக் கவனியாத உத்தமர்; துன்புற்று உழைக்கும் தீரர். ஆராய்ச்சியும் உறுதி யான முடிவும்கொண்ட மனம்படைத்தவர்; அடக் கத்தோடு மிகுதியாய்ப் பேசாது பொறுமையாய் மருத்துவப் பணியாற்றியவர்; எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற நற்பண்பு மிக்கவர், வைகறை யாமம் துயிலெழுந்து தாம் செய்யும் நல்லறமும் ஒண்பொருளும் சிந்திப்பதில் துறைபோயவர். அரசர் முதல் ஆண்டிவரை மருத்துவத்திற்குத் தன் னிடம் வந்தோர் யாவரையும் ஒரே நிலையில் வைத்து எண்ணும் ஒழுக்க சீலர். அவரது எண்ணங்கள் மிகவும் பண்பட்டன; எதிரில் பேசுவோர் உள் ளத்தை ஊடுருவது போன்ற காட்சி நம்மைப் பரவசப்படுத்தும்.

அறுபத்தொன்பது ஆண்டு நிரம்பிய எத் துணையோ ஆடவர் ஓய்வு எடுத்துக்கொள்வதை நாம் காண்கிருேம். ஆனுல் நாட்டுப் பணியில் நாட்டமுள்ள பலரும் அவ்வாண்டின் முதிர்ச்சியை நோக்காது பணியாற்றுகின்றனர். அவ்வாறே நம் முதலியாரும் பணியாற்றுதலே தம் கடன் எனக் கொண்டார்; மேனுட்டுப் பயணம், டெல்லியில் நடக்கும் கல்விக் கூட்டம், மருத்துவ ஆலோசனைக் கூட்டம் இவற்றில் பங்குகொண்டு பாடுபடுகிருர்.

நம் முதலியார் அவர்கள் சென்னை மேல் சட்ட சபை உறுப்பினர்; அச்சபையில் பல பேருரைகள் ஆற்றியிருக்கிறார். அவர் அரசியல் கட்சிகளில் பங்குகொள்ளாத உத்தமர். எதனையும் எவர்க்கும் அஞ்சாது தமக்கு நேரியன என்று தோன்றிய வற்றை அழுத்தமாகக் கூறும் சொல்வன்மை கொண்டவர். தகுதிக்கு அரசாங்கம் மதிப்புத்தர வேண்டுமென்று நம் முதலியார் பலமுறை கூறி யிருக்கிறார். இவர் மக்கட்கு ஆற்றிவரும் பொது நன்மை கருதிப் பல்கலைக் கழகங்களும் அரசாங்க மும் பல பட்டங்களை அளித்துச் சிறப்பித்தன. அர சியலார் இவருக்கு "ராவ் பகதூர்" "திவான் பகதூர்" "சர்" என்ற பட்டங்களை அளித்தனர். ஆந் திரப் பல்கலைக் கழகம் D.Sc. என்ற பட்டம் அளித் தது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் D.C.L. என்ற பட்டத்தைத் தந்தது. **1936** ஆம் ஆண்டில் பிள்ளைப்பேற்று மருத்துவக் கல்லூரி F.R.C.O.G. என்ற பட்டம் தந்தது. **1941** ஆம் ஆண்டில் அமெரிக்க அறிவியல் மருத்துவக் கல்லூரி சிறப்பு உறுப்பினராக இவரைத் தேர்ந்தெடுத்தது.

டாக்டர் முதலியார் ஆந்திர நாட்டில் பிறந்த தமிழர். தமிழில் உள்ள பற்றின் காரணமாக டாக்டர் உ. வே. சாமிநாதையர், மறைமலை அடிகள், கா. நமச்சிவாய முதலியார், பண்டித மணி, திரு. வி. கலியாணசுந்தரனார், ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியோ ரிடம் அதிக அன்புகொண்டார். ஆதலால் தமிழ்த் துறையில் பல்கலைக் கழகத்தின் மூலம் பல சீர்திருத் தங்கள் செய்தார்.

பெரியோரது நல்லியல்புகளும், எடுத்து நவி லும் திறமையும் எத்தன்மையன என்பதை அறி வுறுத்தும் கூர்த்த மதிவன்மையும் சொல்லாற்றலும் ஒருங்கே பெற்றுப், பிறர்நலத் தொண்டையும், மக்கள் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்ட நம் முதலியார் அவர்களது அறிவுத் திறனுல் நாடுநலனுற இறைவன் அருளுவாராக.

# 3. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

(தோற்றம் 1855, மறைவு 1942)

தமிழ் தந்த தனிமகன் என்ற தொடரால் இவரை அழைத்தல் பொருத்தமும் இனிமையும் உடையதேயாகும். இத் தொடரைக் கண்ணுறும் போது நமக்குச் சில எழுச்சிகள் தோன்றும். மேற்கண்ட தொடருக்குத் "தமிழைத் தந்த ஒப்பற்ற ஆண்மகன்" என்றும், 'தமிழனுக்கு ஆக்கம் தந்தவர்' என்றும் பொருள் கொள்ளலாம். வேறுவகையாக நோக்கின் இத்தொடரிலுள்ள தமிழ் என்ற சொல்லைத் தமிழ் மொழி பேசப்படும் இத்தமிழகத்திற்குக் கொண்டு தமிழகம் உலகினுக்குத் தந்த ஒப்பற்ற நன்மகனர் எனவும் ஆன்றோர் கொள்வர். இருவழியாகப் பொருள் கொள்ளினும் தமிழர் அமைவுடைத்து என்றே அமைவர்.

நாடு சிறந்து விளங்க நீர்வளனும் நிலவளனும் இன்றியமையாதது. நிலவளனுக்கு முதலில் நீர்வளனே வேண்டப்படுவதாகும். நீர்வளன் நீர்மை கொண்டு ஒழுகும் ஆறுகளாலேயே பெறப்படும். அவ்வாறு பல ஆறுகளால் செழுமைகொண்டு விளங்குவது நம் தமிழகம் எனில் அது மிகை மொழியன்று. அத்தகைய நம் தமிழகம் முக்குணம் போல் முடியுடை வேந்தர் மூவரால் ஆளப்பட்டு வந்த தன்மை கருதிச் சேர சோழ பாண்டிய நாடு

என மூன்று பிரிவு கொண்டது. மூன்று நாடுகளிலும் நடுநாயகமாய்த் திகழ்வது சோழ நாடென்பது, மேலேயுள்ள தொடரை நோக்கின் புலனும்.

அஃதன்றியும் வளங்குன்ருக் காவிரியும் குழந்தையை அன்புக் கைகளால் அணைத்து அருட்பாலூட்டித் தாலாட்டி மகிழ்வுறும் அன்னைபோல் நம் சோழநாட்டைத் தன் நன்னீராம் நீர்வளங் கொண்டு புரக்கின்ருள். அத்தகைய நீர்வளத்தால் நிலவளங்குன்ருச் சோழ நாட்டைப் பெரியோர் பெரு மகிழ்வுகொண்டு மதித்தனர். விஞ்ஞானிகளும் காவிரி நீர்கண்டு வியப்புறுகின்றனர். அத்தகைய கங்கையிற் புனிதமாய காவிரி சோழ நாட்டில் ஓடிவருங்கால் தன்மீது அழகிய பல சிற்றூர்களையும், பேரூர்களையும் கொண்டு திகழ்ந்தது. இன்றும் திகழ்கின்றது.

பேரூர் பலவற்றுள் குடந்தை என்று வழங்கப் படும் கும்பகோணம் என்ற அழகிய ஊரின் அருகில் உத்தம தானபுரம் என்ற ஊரில் 19 ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வேங்கட சுப்பையர் என்ற பெரியார் வாழ்ந்துவந்தார். அவர் இறைவனடி மறவாத அன்புடையார். அவரை மக்களும் மாக்களும் செவிப்புலனல் நுகர்ந்து இன்புற்று ஐம்புலன்களையும் அடக்கி இறையருளைப் பெற ஊக்குவிக்கும் இசையமுதை உண்டு திளைத்த ‘தேனீ’ எனலாம். கற்ருரைக்கற்ருரே காமுறுதல் போலத் தனக்கு இசையில் மிக அன்பும் ஈடுபாடும் உடைமை காரணமாய் இசையாசிரியர், இசை நுணுக்க முணர்ந்தோர் ஆகிய பலருடனும் மாருஅன்பும், இடையரு நட்பும் பூண்டு தம் வாழ்வை

நடத்தினர். இசையினிடமும், 'ஏழிசையாய் இசைப் பயனய்' உள்ள இறைவனிடமும் இணையில்லா இன்பம் கொண்டு ஒழுகிய இவ்வாண்டகை தன் மனைவியோடு இல்வாழ்வாம் நல்வாழ்வதனை மேற் கொண்டு நல்வழி ஒழுகினர்.

மக்கள் மனம் எதனை விரும்புகிறதோ, எதனிடம் நிரம்ப ஈடுபாட்டுடன் காண்கின்றதோ அதனையே இறைவன் மக்கள் வாழ்வுடனும் பிணித்து விடுவான். இது உலகம் கண்ட துணிபு. இசையால் கனிந்த இறைவனும் வேங்கட சுப்பையர் நற்குடி விளங்க உளங் கொண்டான். "ஒரு குடிவாழ உலகே வாழும்" என்ற பண்பிற்கிணங்க, உத்தம தானபுரத்து வாழ்ந்த நற்குடிக்கு ஓர் இன்கனி ஈந்து களிக்க விரும்பிய ஆண்டவன் அக்குடிமூலம் ஒரு மொழியை உயர்த்தினன். அம்மொழியை உயர்த்தியதால் தமிழகத்தின் மதிப்பையும் நிலை நாட்டினன்.

எல்லா நாளும் நன்னளாமோ! 1855 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19-ம் நாள் வேங்கட சுப்பையருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. இந் நாளே நன்னளாயிற்று. குழந்தை பிறந்ததைக் கேட்ட தந்தை தன் மகனுக்கு வேங்கடரமணன் என்ற பெயரினை யிட்டிருந்தார். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந் தது. மூச்சினிலே தமிழின் உயர்வையே உயிர்த்தது. தன் மனதில் தமிழ்க் கற்கவேண்டும் என்ற தனி ஆர்வத்தோடு வளர்ந்தது. ஆனல் தந்தை தன் மகன் வேங்கடரமணன் வடமொழியும் இசைக் கலையும் பயிலவேண்டும் என்றே விரும்பினர்.

கல்வியும் இளமையும்

பயில்வார் மனப் போக்கிற்கேற்பப் பாடதிட்டம் அமைக்க வழிகண்ட இக்காலத்தில் அல்லாமல் 19 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே தந்தை தன் மகஞர் விருப்பத்திற்கு இணங்கத் தன் நிலையை விட்டுக்கொடுத்து நல்லாசிரியர் பலர் பால் அனுப்பிப் பல சிறந்த இலக்கண இலக்கியங்களைத் தன் மகன் கற்றுத் தமிழ் வல்லவனுய்த் திகழத் தன்னுலான உதவிகள் நல்கினர். தன்னூர், அதனை அடுத்துள்ள பெரும்பகுதியான கும்பகோணம் இவ்விரு விடங்களிலுமுள்ள கற்றூர் கற்பிக்க இயலும் பல நூலகளைக் கற்று, நீர் வேட்கை கொண்டாங்கு, மேலும் தமிழ் கற்க விரும்பி நல்லாசான் ஒருவனை நாடி நின்றது நம் தமிழ் மகஞர் மனம்.

அக்காலத்தில் மாயூரத்தில் மீனுட்சிசுந்தரம் பிள்ளை என்ற ஒருசிறந்தகல்விமான் இருந்தார். அவர் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான்; நிரம்பப் பயின்றவர். தமிழ் மொழியின் கடல் அன்ஞர் எனின் அது புகழ்ச்சியன்று. அவர் பாடல் இயற்றுவதில் வல்லவர். புராணங்கள், பிரபந்தங்கள், கோவைகள் முதலியன அவர் பாடியுள்ளார். அவரைப்பற்றிக் கேட்டு, மலரது நறுமணம் இழுக்கச் செல்லும் வண்டுபோல், நல்வினைப் பேறு உந்த நம் பெருந்தகையார் மாயூரம் சென்று அன்ஞரைக் கண்டு வணங்கி (மீனுட்சிசுந்தரம் பிள்ளை) அவர்களையே தம் குருவாகக் கொண்டு தமிழ் நூல்கள் பலவும் கற்கத் துணிந்தார்.

புலவர் பெருமான் கம்பீரமான தோற்றம் உடையவர்; அமைதியும் அன்பும் தவழும் முக

மலர்ச்சியுடையவர். அரச இலக்கணம் அமைந்தோரைப்போன்ற முழங்காலளவு தொங்கும் கைகளையும் உடையவர். மனத்தூய்மையை விளக்கவே அவர் உடலின்மீதும் வெண்மையான ஆடை உடுத்திருந்தனர் எனின் அது பொருத்தமானதேயாம். அவர் குடிவழி செல்வம் மிகுந்து விளங்கியது. எதனையும் தண்மையான நோக்குடனேயே நோக்கும் சீரிய பண்பாடு அவரிடம் இருந்தது. அவரது நடையமைதியைக் கண்டோர் களிப்பர். நம் பெருந்தகை, ஆசிரியரைக் காணச் சென்ற காலம் அன்னாரது முதுமைப்பருவம். ஆதலால் அப்போது நம் பிள்ளையவர்களின் தோற்றத்திலும் வாழ்விலும் பல புண்பட்டு பண்பட்ட தளர்ச்சியும் காணப்பட்டது. சோர்வும் சோம்பலும் அற்ற ஆசிரியர் தன்மையில் மாணவர் ஈடுபட்டார்.

ஆசானைக் கண்ட அன்புள்ள மாணவன் தோற்றத்திலும் பண்பிலும் ஈடுபட்டு நிற்க உணர்ச்சிப் பெருக்கினால் ஆனந்தக்கண்ணீர் சிந்தினார். உருவைவிட்டு நீங்காத சிறந்த நிழலைப்போல ஆசிரியருக்குப் பணிவிடை செய்தார். தன் ஒப்பற்ற கன்றினைக் கண்ட பசுவைப்போல ஆசிரியரும் மாணவருக்கு இன்பம் தரும் தாயன்புகொண்டு கற்பிக்க முற்பட்டார். சீரிய ஆசானிடத்துத் தலை மாணாக்கன் பயின்றால் அது ஆசிரியருக்கு மிக மகிழ்வினையே அளிக்கும் அன்றோ!

தமிழிற்கும் முருகனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நம் நூலார் பழங்காலந் தொட்டே கண்டிருக்கின்றனர். ஆசிரியர் தன் மாணவனது

போக்கும் அமைதியும் அறிவும் கண்டு வியந்தார். உலகிற் காணப்படும் தமிழ் ஒலிகளை இயக்குவிக்கும் நாதனுகவே கண்டார். தற்காலத்தில் பெற்ருேர் குழந்தைகட்குச் செல்லமாய்ப் பல பெயரிட்டு அழைப்பதுபோலச் சுவாமிமலைக்கு அருகாமையில் நம் தனித் தமிழ் மகனுர் பிறந்தமையால் சுவாமிநாதன் என்றும் அழைக்கப்பட்டிருந்தார். இப்பெயரே திரு. மீனுட்சிசுந்தரம் பிள்ளைக்குப் பெருமகிழ்ச்சியும் கவர்ச்சியும் தந்தது. அதுவே புகழ்ப் பெயராக நின்றது. வேங்கடரமணன் என்ற பெயர் மறையத் தமிழ்த் தெய்வத்தின் பெயரான சுவாமிநாதன் என்ற பெயரும் அண்ணலாரைத் தேடி வந்தடைந்தது.

மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் நம் ஐயர் அவர்களும் ஐந்தாண்டு காலம், ஒருவரையொருவர் விட்டுப் பிரியா இயல்போடு இருந்தனர். அல்லும் பகலும் ஆசிரியரோடு உடன் பயின்று பழகும் நிலையுடையவராய் வாழ்ந்து கற்றுத் தேர்ந்தார். பழுமரத்தை நாடிப் பறவைகள் வருவன போன்று பிள்ளையவர்களை நாடிப் பல புகழ்வாய்ந்த நாவலரும் பாவலரும் வந்தமையால் சுவாமிநாத ஐயருக்கு அன்னுரை எல்லாம் பார்த்துப் பழகும் சீரிய நல்வாய்ப்பும் ஏற்பட்டது. ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீனப் புலவராய் இருந்தமையால், அவ்வாதீனத் தலைவரது அன்பும் ஐயருக்குக் கிடைத்தது. இவ்வாறு தன் மாணவனுக்கும் சீரிய கல்வி கற்பித்ததோடன்றி அவனது பிற்கால வாழ்விற்கும் வித்திட்ட பிள்ளையவர்கள் 1876 ஆம் ஆண்டில் பூதவுடல் நீத்துப் புகழுடல் எய்தினுர். தாய்

தந்தையர் ஆகிய இருவரையும் ஒரு பொழுதிலேயே இழந்த குழந்தைபோல் ஐயரும் புறத்தும் அகத்தும் வருந்தி நின்ருர். நற்குணக் குன்றைக் கண்ட ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறை மடத்திலேயே மாணவர்க்கும் பாடங் கற்பிக்கும் பணியைத் தந்தார். சில காலம் சென்றது.

ஆசிரியப்பணி:—கற்ற கல்வியை ஆசிரியரிடமே திரும்பக் கூறிக் காட்டுவதுபோல் மடத்தில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துவந்த முறை அமைந்திருந்தது. நல்வினே, நம் ஐயரை அரசியலாரும் நன்கு அறிந்து போற்றவேண்டும் எனக் கருதியது போலும். அக்காலே கும்பகோணத்தில் கல்லூரியில் பணி ஆற்றிவந்த வித்துவான் தியாகராச செட்டியார் வயது முதிர்ச்சியால் ஓய்வுபெற நேர்ந்தது. செட்டியார் அவர்களும் பிள்ளே அவர்களின் மாணவரே. நம் ஐயர் அவர்களே மாயூரத்தில் பாடங் கேட்டுப் படித்த காலேயிலும் மடத்தில் ஆசிரியராய்ப் பணி ஆற்றிய நாளிலும் பல முறை பார்த்து அறிந்து இருக்கிருர். நல்ல முறையில் ஆராய்ந்தார். தனக்குப்பின் தன் இடத்திற்குப் புகழுடன் பாடஞ் சொல்லக்கூடியவர் சுவாமிநாத ஐயரே எனக் கருதினுர். அதனேச் செட்டியார் அவர்களும் அரசியலாருக்கு எடுத்துக்கூறி சுவாமிநாத ஐயரைக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் பதவியில் பணியாற்ற விழைந்து எழுதினுர். தலேவரும் ஒப்புக் கொள்ள சுவாமிநாத ஐயர் அவர்கள் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியர் பணியை ஏற்ருர்.

கற்பிக்குங்கால் செய்யுட்களே இசையுடன் அமைதி குன்ருமல் பாடி மாணவரைத் தன் வயப்

படுத்திப் பொருந்தக் கற்பிப்பார். கும்பகோணம் கல்லூரியில் 1880 ஆம் ஆண்டு முதல் 1903 ஆம் ஆண்டு முடியச் சுமார் இருபத்துமூன்று ஆண்டுகள் தமிழ்ப் பணி ஆற்றினர். இவரது இசை மணமும் தமிழ் மணமும் பரவச் சென்னை இவர் பணியை ஆவலுடன் விழைந்தது. ஆகவே தனக்கே தனிப்பெரும் உரிமையென மதித்துவந்த கும்பகோணம் கல்லூரியைவிட்டு ஐயர் அவர்கள் 1903 ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கக் கல்லூரியை அடைந்து தம் பணியைச் சிறப்புடன் ஆற்றினர். இவ்வாறு பதினறு ஆண்டுகள் கழிந்தன. அரசியலார் சட்டப்படி தமிழாசிரியர் பணியினின்றும் ஓய்வு பெற்ருர்.

இவரது புகழையும் தமிழ்ப்பணியையும் இராஜா சர். அண்ணமலை செட்டியார் இவரது பணியைத் தம் மீனுட்சி கல்லூரிக்குப் பயன்படுத்த விரும்பினர். ஐயரும் இசைவு நல்கினர். பின்னர் மீனுட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராக அமர்ந்து இலக்கியமும் இலக்கணமும் தெளிவாகக் கற்பித்தார். மாணவர்க்கும் இவரது கற்பிக்கும் திறமையைக் காணப் பூரிப்பு ஏற்பட்டது. தம் ஆயுட்காலமெல்லாம் மாணவராகவே இருத்தல் இன்பம் தரும் என்று எண்ணும்படி இருந்தது எனின், இவரது கற்பிக்கும் ஆற்றல்தான் எத்துணைச் சீர்மையுடைத்து! இவ்வாறு முதுமைப்பழம் யாவரும் சுவைக்கத் தேன் சிந்திச் சிந்தித் தன் வாழ்நாளைத் தனக்கும் பிறர்க்கும் தமிழன்னைக்கும் பயன்படுத்தியது எனின் அது தமிழன்னையின் அருளே அன்றி வேறில்லை.

நூல்களைப் பதிப்பித்தல்

தொன்மையான காலங்களில் மக்கட்கு எழுது கருவிகளும் தாள்களும் இல்லை. அப்பொழுது பனை ஓலைகளை நன்கு சீவிப் பதப்படுத்திக் குறிப்பிட்ட அளவு அமைத்து எழுத்தாணிகொண்டு எழுதுவர். அவ்வாறு எழுதி அமைந்த ஏடுகளின் தொகுதியைச் சுவடி என்பர். பெரிய நூல்கள் முதலாக யாவும் அவ்வாறான சுவடிகளிலேயே காணப்படும். கற்ற பெரியோர் கற்ற பின்னர் ஒரு நூலைச் சுவடியிலிருந்து பார்த்து வேறு சுவடிகளில் எழுதுவர். காலத்தால் பிற்பட்டுப் பயன்படாது செல்லரித்த சுவடிகளைப் படியெடுத்துப் பின்னர் நீரில் விட்டுவிடுவது வழக்கம். ஏட்டில் இருக்கும் செய்திகளைப் படித்து உணரப் பொறுமையும் உழைப்பும் வேண்டும். எழுத்துக்களைத் தெளிவாக அறிந்து படிக்கக் கோவையிலை போன்ற பச்சையிலைகளைக் கசக்கித் தேய்த்தும் படிப்பர்.

நம் ஐயர் அவர்கள் கும்பகோணத்தில் ஆசிரியர் ஆக இருந்தபோதே அவ்வூரில் முனிசீபாக இருந்த திரு. இராமசாமி முதலியாரிடம் நட்புக் கொண்டார். அவரிடமிருந்து சீவகசிந்தாமணி என்ற நூலின் பிரதி ஒன்றைப் பெற்று அதனைப் பல பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து 1887 ஆம் வருடம் அந்நூலை முதன் முதலாக வெளியிட்டார். இந்நூல் சைனசமயக் கருத்துக்களைச் சிறந்த முறையில் விளக்கின. இவ்வாறு ஐயர் தமது இடையரு உழைப்பின் பயனாகச் 'சீவகசிந்தாமணி,' ஏட்டுப் பிரதியை விட்டு அச்சுப் பிரதியாக அமைந்து

முதன்முதலில் வெளிவந்தது. அயல்நாட்டு அறிஞரும் இவரை வியக்க இஃது ஏதுவாயிற்று.

சிந்தாமணி என்னும் நூல் திருத்தக்க தேவரால் எழுதப்பட்டது. அந்நூல் சீவகன் என்ற அரசனுடைய வாழ்க்கை வரலாறுபற்றி விளக்கமாகக் கூறுகின்றது. இதனைச் சைனர் தங்கள் சமய நூலாகக்கொண்டனர். பல கையெழுத்துப் படிகளை ஒப்பு நோக்க நம் தமிழ்த் தந்தை எடுத்துக் கொண்ட சலியா உழைப்பு மிகப் போற்றத் தக்கதாகும். சில இடங்களில் தன் மதிப்பிற்கே குறை நேரிடினும் தாழாமல் தமிழன்னையின் உயர்விற்கே பாடுபட்டார். குறிப்புரைகளைத் தன் நிலை, உழைப்பு இவற்றிற்கேற்ற முறையில் செம்மையாக அமைத்துத் தருவார். இறக்கும் நிலையில் இருந்த நாயின் காதுகளில் ஐந்தெழுத்து மந்திரம் உபதேசிக்கப் பட்டதாக எழுதியிருந்த சுவடிச் செய்தியைத் தன் திறமையால் சைன காவியத்திற்கு இச்செய்தி பொருத்தம் இன்று எனக்கொண்டு அதனைப் பஞ்ச நமஸ்காரம் எனத் திருத்தி வெளியிட்டார். பற்றலரது அழுக்காற்றினைக் கடந்து சிந்தாமணி 1922 ஆம் ஆண்டில் மூன்றும் பதிப்பும் பெற்றது. ஒவ்வோர் பதிப்பினையும் ஐயரவர்கள் சீரிய முறையில் ஆய்ந்து திருத்தமும் பிற்சேர்க்கையும் குறிப்புரையும் அமைத்தே வெளியிட்டு வந்தார். இதனால் இவரது உள்ளம், உரை, உடல் ஆகிய மூவிடங்களிலும் தமிழ் மொழி வளம்படக் கருத்துக்களும், செயல்களும் ஒன்றி வளம்பெற அமைந்தன.

துன்பமிக்குத் துணையின்றித் தனியே ஆர்வம் வந்த அனைவரும் வியக்கும்படி வெளிக்கொணர்ந்த சீவகசிந்தாமணி என்னும் நூல் ஏனைய நூல்கள் வெளியிடுவதற்கு வழி காட்டியாக இருந்தது. ஐயரவர்கள் மிக முயன்று 1889 ஆம் ஆண்டில் பத்துப்பாட்டு என்னும் தொகை நூலை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தார். பத்துப்பாட்டு என்னும் நூல் திருமுருகாற்றுப்படையை முதலாகக் கொண்ட பத்துப் பாடல்களையுடையது. ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான அடிகளை உடையவை. அவற்றின் முடிவுகளும் கதைப் பகுதிகளும் விளங்கா வகையில் சிதைந்திருந்தன. நம் தமிழ்த் தந்தை அவைபற்றிய விளக்கங்களை ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

முத்தமிழ் முழுவதும் விரவப்பெற்ற இயலிசை நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரம் ஐயரவர்கள் கவனத்தை ஈர்த்தது. இக்காலத்தில் கிடைக்கப் பெறாத சில இசை நூல்கள் பற்றியும், நாட்டியம் சோதிடம் இவைபற்றியும் அறிய இந்நூல் வழி காட்டியாக நின்றதற்குக் காரணம் நம் ஏடு தேடித் தந்த ஏந்தல் பதிப்பித்த அரிய பதிப்பேயாகும். கற்றோர் இதயம் களிக்கவும் தமிழன்னை சிலம் பணிந்து அகத்தே பூரிப்பு எய்தவும் சிலப்பதிகாரம் வெளிவந்தது.

சீவகசிந்தாமணி வெளிவர முதல் வாய்ப்பளித்த இராமசாமி முதலியார் அவர்களே மணிமேகலை அடங்கிய சுவடியை ஐயரவர்களிடம் ஈந்து அதனையும் ஆராயவேண்டினார். அது

பௌத்த மத நூல். இதனை மிக ஆராய்ச்சியோடு பதிப்பித்து பௌத்த மதத்தினரது பழக்க வழக்கங் கள், கொள்கைகள் இவைபற்றித் தமிழுலகம் கண்டறிய உதவினர்.

தமிழர்களது பண்டைய பழக்க வழக்கங்கள் மரபுகள், புலவர் நிலை, புரவலர் வண்மை இவை பற்றி யறியப் புறநானூறு இருந்தது. புறத்திலக் கணத்திற்குச் சீரிய இலக்கியமாய்த் திகழ்ந்தது. இந்நூலை அடுத்தபடியாக வெளியிட்டுத் தமிழுல கிற்குத் தமிழர்களது பண்டைய சீரிய நிலையினை நன்குணர உதவினர் நம் புலவரேறு. இவர் எழுதிய பாடினோர், பாடப்பட்டோர் வரலாற்றுக் குறிப்பு தமிழ் கற்க விரும்பும் யாவர்க்கும் சிறந்த நலனைத் தருவதாக அமைந்து கிடக்கிறது. இதனை யடுத்து 1903 ஆம் ஆண்டில் ஐங்குறு நூறு என்ற அகத்திணை நூல் வெளிவந்தது. இந்நூல் ஐந்து புலவரால் தனித்தனியே நூறு நூறு பாடல் களாகப் பாடப்பட்டதாகும். கருத்தூன்றிய சீரிய தமிழ்ச் செல்வரான ஏந்தலார் பின்னர் பதிற்றுப் பத்து, பரிபாடல், பெருங்கதை முதலிய நூல்களை யும் அச்சுலகில் ஏற்றிப் பலரும் மகிழ வெளியிட்டு உதவினர். பல புராணங்கள், சிற்றிலக்கியங்கள் இவற்றை வெளியிட்டதோடு அமையாது 'புது மையும் பழைமையும்', 'கண்டதும் கேட்டதும்' போன்ற சில உரை நடை நூல்களும் எழுதினர். தன்னைத் தமிழிற்குத் தொண்டு செய்யும்படி நல் வழிப்படுத்திய ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர் களின் வரலாற்றை எழுதி வெளியிட்டு நன்றியறித லோடு விளங்கினர். தன்னை அரசியலார்க்கும்

மாணவர் உலகிற்கும் அறிமுகம் செய்து வைத்த தியாகராச செட்டியார் வாழ்க்கையை விளக்கும் நூலையும் அவர் எழுதித் தன் அன்பை வெளியிட மறக்கவில்லை.

## பிற தொண்டுகள்

தமிழ் நூல்களைப் பதிப்பித்தலே சீரிய தமிழத் தொண்டு. எனினும் கூட்டங்கள், குழுக்கள், கழகங்கள் முதலிய பலவற்றிலும் கலந்து கற்றோர் பலரும் மகிழும்படி மனம், மொழி, மெய் என்ற மூன்றினாலும் தன்னாலான பணி செய்வதே தன் குறிக்கோளாகக் கொண்டார் நம் தமிழ்ச் செல்வர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர் ஆனார், வித்துவான் தேர்ச்சிக்குழுவில் பங்கு கொண்டார். சென்னை மட்டுமன்றி மைசூர், காசி, அண்ணாமலை, திருவிதாங்கூர் ஆகிய பல பல்கலைக் கழகங்களுடனும் இவர் தொடர்பு பூண்டார். தமிழோடு இசையையும் தொடர்புபடுத்திப் பண்டைத் தமிழ் இசையும் இசைக்கருவிகளும் என்ற தலைப்பின் கீழ்ச் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார். இச்சொற்பொழிவு கற்றோரையும் மற்றோரையும் ஐந்து தலைப்பின் கீழ் ஆராய்ச்சி செய்யுமாறு ஊக்கியது. அவை யாவை எனின் **1**. இசைப் பெருமை. **2**. தமிழர் இசை. **3**. இசைவகை. **4**. இசைக் கருவிகள். **5**. பிற்கால இசை என்பனவாகும்.

திருவள்ளுவர் திருவிழா, தமிழன்பர் மகாநாடு இவற்றில் பலமுறை பங்குகொண்டார். பாரதீய சாகித்ய பரிஷத்தின் முதலாவது மகா நாட்டில் வரவேற்புச் சொற்பொழிவு ஆற்றினார். அச்

சொற்பொழிவில் இலக்கிய வளர்ச்சிக்கு வேண்டிய வற்றை அழகுற நவின்ருர். 'உயர்வு நவிற்சியை அளவறிந்து கையாளுதல்வேண்டும். பொருத்த மற்ற வருணனைகளும், இன்பச் சுவைகளும் விலக் கப்படல் சிறந்தது. மொழி பெயர்க்கும்போது தமிழிற்கேற்ப மாற்றி யமைக்கவேண்டும். எளிய நடையைக் கையாளுதலே யாவரும் விரும்பும் முறையும், தமிழ் முன்னேற்றத்திற்குத் தக்க வழி யும் ஆகும்' என்று பல சிறந்த ஆக்கக் கருத்துக் களை அறிவுறுத்தினர்.

**பட்டமும் பரிசும்**

வடமொழி வாணர்க்கே அதுகாறும் வழங்கப் பட்டு வந்த பட்டமான 'மகா மகோபாத்தியாய' என்ற பட்டமும், ஆயிரம் வெண் பொற் காசுகள் அடங்கிய கிழியும் சென்னை அரசாங்கத்தாரால் நம் செந்தமிழ்ச் செல்வருக்கு வழங்கப்பட்டது. நம் புலவருடைய உழைப்பு, நூலகள் வெளியீடு, அறிவுத்திறன், எழுதும் வன்மை, நூலாராய்ச்சி யின் மாண்பு ஆகியவைகளை மதிப்பிட்டுப் பாராட் டவே அத்தகைய பட்டமும் பரிசும் அளிக்கப் பட்டது என்பதை அங்கையின் நெல்லி என விளங்கும். பாரத தர்ம மகா மண்டலத்தார் 1917 ஆம் ஆண்டில் 'திராவிட வித்யா பூஷ்ணம்' என்ற பட்டத்தை நல்கினர். 1925 ஆம் ஆண்டில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியார் 'தாட்சணுத்திய கலாநிதி' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டி மகிழ் வித்தனர். தமிழ்ச் சங்கமும் ஐயரவர்கள் தமிழிற் குச் செய்த தொண்டினைப் பாராட்டிப் பொற்கிழி வழங்கிற்று. 1931 ஆம் ஆண்டில் கும்பகோணம்

கல்லூரியில் வைர விழா கொண்டாடப்பட்ட போது, இவரது உருவப் படத் திறப்பிற்குத் திருப்பனந்தாள் மட ஆதீனத்தார் உதவினர். 1932 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் இவர்க்கு "இலக்கிய நூல் புலவர் (டாக்டர்)" என்ற சிறப்புப் பெயரையும் அளித்தனர். 1937 ஆம் ஆண்டில் செனட் மண்டபத்தில் இவர் உருவப் படம் திறக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் எல்லோரும் இவரைப் பாராட்டி இவரது உருவச் சிலையைத் திறந்து வைத்தனர், அஃது மாகாணக் கல்லூரியின் எதிரே கடலை நோக்கியவண்ணம் நிறுவப்பட்டிருக்கிறது "தமிழ் நூல்களின் பரப்பும் ஆழமும் கடலின் பரப்பையும் ஆழத்தையும் ஒத்துள" என்பதைச் சுட்டிக் காட்டுகின்றதோ அத்தோற்றம் என்று கூறும் அளவில் அமைந்துள்ளது. 1935 ஆம் ஆண்டில் சதாபிஷேகம் பெற்று 1942 ஆம் ஆண்டில் இறைவன் பொன்னடி அடைந்த பெம்மானைச் சிலைவடிவில் கண்டு தமிழுலகம் போற்றிற்று எனின் அன்னார் தமிழறிவு வியக்கத்தக்கதேயாகும்.

குணநலன்கள்

ஏடு தேடித் தமிழுலகிற்குத் தந்த ஏந்தலான நம்புலவர் தமிழ் நாட்டில் தமிழனது பழம் பெருமைகளை நிலை நாட்டிய தனி மகன் ஆவர். உழைப்பையே ஆயுளின் எல்லாப் பகுதிகளிலும் சீரியது எனக் கண்ட உத்தமன். வைகறைத் துயிலுணர்ந்து உள்ளம் உருக்கும் திருவாசகத் தேனை இசையொடு பயிலும் தமிழன். ஏடுகளை மாணவரின் துணைகொண்டு ஒப்பிடும் ஏந்தல்.

தெய்வ வழிபாடுகளைத் தெவிட்டாமல் ஒவ்வொரு நாளும் செய்துவந்த தூயோன். ஓய்வினை அளவோடு மேற்கொள்வார். நாலடியார், திருக்குறள் முதலிய நீதி நூல்களை மாணவர் வாயிலாகக் கேட்டு மகிழ்வுறுவார். தன்னிடம் பயிலும் மாணவர்க்குச் சலிப்பின்றிப் பாடம் கற்பிப்பார். கம்பராமாயணம், சங்க நூல்கள் இவற்றை ஒவ்வொருநாளும் ஆராய்வார். மாலையில் நாளுக்குரிய கடமைகள் யாவும் முடிந்தவுடன் கோயிலுக்குள் சென்று சிவனைப் போற்றி மகிழ்வார். இவர் இரவில் தாயுமானவர், பட்டினத்தார் இவர்கள் எழுதிய பாடல்களை ஓதிப் படுப்பார்.

"தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்பதனைத் தந்தையின் இறுதிவரை கும்பகோணத்திலேயே இருந்து பணியாற்றி உண்மையாக்கினர். பதவி உயர்ந்திடினும் தற்செருக்குக் கொள்ளாத குணக்குன்று. பொறுமைக்கும், தளராத உழைப்பிற்கும் எடுத்துக் காட்டாய்த் தன் வாழ்நாள் முழுவதும் நடந்த ஒரு பொற் சித்திரம் எனில் அஃது மிகையன்று. ஏடு தேடுங்காலும், அவற்றிலுள்ளவற்றின் பொருள் காணும்காலும், உள்ள உழைப்புக்கொண்டு ஒழுகி உடல் நலம் பாராத தியாகி. தன் ஆசிரிய வாழ்விற்கு வித்திட்ட தியாகராச செட்டியாரை மறவாமல் தன் வீட்டிற்குத் "தியாகராச விலாசம்" என்று பெயரிட்ட நன்றி மறவா நன்மகன். ஆசிரியரிடம் உலவா அன்பு கொண்டொழுகிய அருட்கடல். தனக்குமுன் பதிப்பித்த கலித்தொகை நூலிற்கும் பதிப்பாசிரியர்க்கும், தான் முன்பே உழைத்து அந்நூலை அச்சிடத் தக்க நிலையில் வைத்திருப்பினும், மதிப்புக்

கொடுத்து விட்டுக்கொடுத்து ஒழுகிய வீரன். இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்தித் தேனீபோன்று தமிழ் மலரில் மூழ்கித் திளைத்துப் பேரின்பம் கண்டு,

'தாமின்புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்ற குறட்பாவினைக் கடைப்பிடித்த பெருந்தகை யார்.

தமிழின் இசை, அதன் வளம் இவைபற்றித் தமிழ் நாட்டிற்கும் உலகிற்கும் அறிவுறுத்திய உத்தமன். பண்பட்ட ஒழுங்கும் ஒழுக்கமும் கொண்ட தன்மையே இவர் நோயின்றி வாழக் காரணமாயிற்று. அதனால் சதாபிஷேகம் வரை தன்னுடலையும் உயிரையும் உலகினர் நன்மைக் கென பயன்படுத்தித் தொண்டாற்றிய அறிஞர். படித்தது போதும் என்று கூறும் சிறுமதியாளர் நிலையைக் கொள்ளாது எப்போதும் படிப்பும் அதன் வழி ஆய்வும் மேற்கொண்டு வாழ்ந்த பண்டிதர். கற்றோராயினும், கற்றோர் மட்டும் உளங்கொள்ளுமாறு எழுதாது யாவரும் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் எளிய இனிய நடையில் சிறு சொற்றொடராக எழுதின சீலன். இவரது பூதவுடல் நம்மைவிட்டு மறையினும், இவரது உழைப்பும் புகழும் என்று அழியா இயல்போடு விளங்கி யாவரையும் பின்பற்றக் கூறும் கலங்கரை விளக்கமாய் அமைந்திருக்கிறது என்பது ஐயமின்று. தமிழ்ப் பற்றுடைய ஆன்றோர்கள் வாய்ப்பேச்சில் வீரராய்த் திகழாமல், நம் புலவர் பெருந்தகையைப்போல் செயலில் ஈடு பட்டு மொழியை உயர்த்தப் பாடுபடுவார்களாக.

# 4. ஆலிவர் கோல்டுஸ்மித்து

## I. பிறப்பும் இளமையும்

**தோற்றம்**

நம் தமிழ் வானில் பதினேழாம் நூற்றுண்டு பல புலவர்களையும் இறையருள் பெற்ற நாயன்மார் ஆழ்வார் முதலியோரையும் தந்து மகிழ்ந்தது. அஃதேபோன்று இயற்கையை ஒட்டியே மேலை நாடான அயர்லாந்து தேசத்திலும் பதினெட்டாம் நூற்றுண்டு பல இலக்கியச் சான்றோர்களையும் கவிகளையும் உலகினுக்கு உதவியது. அவ்வாறு தோன்றிய பல இலக்கியச் சான்றோருள் ஆலிவர் கோல்டுஸ்மித்து என்பாரும் ஒருவராவர்.

அயர்லாந்து தேசத்தில் பால்ஸ்மூர் என்று ஓர் சிற்றூர் உண்டு. அங்கு பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சார்ல்ஸ் கோல்டுஸ்மித்து என்பவர் வசித்துவந்தார். அவர் மக்கட் செல்வம் நிரம்பப் பெற்றவர்.

பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியிலேயே நவம்பர் திங்கள் பத்தாம் நாள் ஆலிவர் கோல்டுஸ்மித்து சார்லஸ் கோல்டுஸ்மித்திற்கு ஐந்தாம் மகனுய்த் தோன்றினர். சார்லஸ் மத குருவாகப் பணியாற்றிய சீலர். எனவே பால்ஸ்மூர்



என்றவூரைவிட்டு லிஸ்ஸாய் என்ற வேறொரு கிராமத்திற்குப் பணியாற்றச் சார்லஸ் மாற்றப்பட்டார். இவ்வூரே நம் கவிஞரின் பிற்கால வாழ்வின் இலக்கியத்திற்கு நல்லாக்கம் தருவதாயிற்று.

இளமையும் கல்வியும்

கோல்டுஸ்மித்து வீட்டில் வேலே செய்துவந்த பெண்தான் முதல் முதலில் தானறிந்தவற்றை நம் ஆலிவர் அவர்கட்குக் கற்பித்தாள். அதன்பின்,

ஆறு ஆண்டுகள் நிரம்பியவுடன் அவர் அக்கிராமப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். நம் கவிஞர் இளமையிலிருந்தே இயற்கையோடு ஒட்டிப் பழகும் இயல்பினர். வன்மையான உடற்கட்டு வாய்ந்தவர். ஆகவே பிறர் தோட்டங்களில் புகுந்து மனஞ்சலிக்கும் வரையில் விளையாடுவார். இவரது உடன் பயிலும் மாணவர் நம் கவிஞரை எப்போதும் விளையாடிப் பேசி மகிழ்வதற்கான கூட்டாளி என்றே மதித்துப் பழகினர். இவ்வாறு தன் விருப்பப் படியே கற்று விளையாடிய ஆலிவர் கோல்டுஸ்மித்துத் தமது பதிஞரும் ஆண்டு பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளியிட்டுத் திரியத் தொடங்கினர்.

கல்லூரிப் படிப்பு நம் கவிஞர் மனதைக் கவரவில்லே. ஏனெனில் தந்தையின் செல்வநிலே கல்லூரிப் படிப்புக்கு வேண்டிய உதவியும் செய்யவில்லே. சிறிது நாள் திரிந்த ஆலிவர் கோல்டுஸ்மித்துக்குக் கல்லூரிப் படிப்பு வாழ்க்கைக்கு இன்றியமையாததுதான் என்று தோன்றியது. ஆகவே, கல்லூரியில் கற்கும் செல்வ மாணவர் ஏவிய குற்றேவல்களேச் செய்துகொண்டு அதனுல் சம்பளமின்றிக் கல்விபயின்று வந்தார். இவ்வாறு வருந்திக் கற்கத் துணிந்ததற்குக் காண்டரின் என்ற தாய் மாமனே அடிப்படையாவார். அதன்பின் டிரினிடி. கல்லூரி சென்று கற்றுத் தேர்ந்தார். சிற்சில பொழுது தம் ஆசிரியருடனேயே வீண் வம்பிழுத்துப் பணத்தைத் தன் விருப்பப்படிச் செலவிட்டுச் சுற்றியும் வந்தார்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே தந்தை யியற்கையெய்திஞர். தாய்

மாமனையே முற்றிலும் நம்பித் தாம் வாழ்வு நடத்த வேண்டுவதாயிற்று நம் கவிஞருக்கு. "நீறுபூத்த நெருப்பு"ப்போல அடங்கிக்கிடந்த கவிதை சக்தியின் உதவியால் தெருப் பாட்டுக்கள் பாடிப் பாடல் ஒன்றுக்கு ஐந்து ஷில்லிங் வீதம் வாங்கிக்கொள்ளலானார். இவ்வாறு எளிய வாழ்வு நடத்தியபோதிலும் நம் கவிஞருக்கு ஆடல்பாடல் ஆகிய இவ்விரு கலைகளிலும் நிரம்பப் பற்றும் திறனும் உண்டு.

இத்தகைய பற்றே ஒருபோழ்து ஆசிரியர் சினத்தைக்கூட நம் கவிஞருக்கு வாங்கித் தந்தது. பலபடி இடருற்றுச் சிலமுறை கல்லூரிப் படிப்பை நிறுத்தியும் தன் வாழ்வை நடத்திய நம் கவிஞர் 1749-ல் பட்டம் பெற்று வெளியேறினார்.

### கற்றபின் தோடக்க வாழ்வு

கல்வி கற்றுப் பட்டம் பெற்றபின் பாலிமேகனில் இருந்த தன் தாய் வீட்டையடைந்தார். அன்றாட வாழ்வை அவர் நடத்தினாரேயன்றிப் பொருளையோ புகழையோ அவர் மனம் நாடவில்லை. இரண்டு ஆண்டுகாலம் கிராமப் பள்ளியில் வேலைசெய்தார். தாய் கூறிய குற்றேவல்களைச் செய்துவந்தார். இரவு வேளையில் "கான்வே" என்பவருடைய சாவடியில் இருப்பார்.

நண்பர்கள்தான் ஏற்ற காலங்களில் தக்கபடி புத்தி கூறி நமக்கு உயர்வு அளித்திடும் தூண்டு கோல்கள் ஆவர். இன்பமுற்றபொழுதும் துன்ப

முற்றுத் துயருறும் வேளையிலும் நண்பரே நம்மைத் தேற்றி, ஊக்கி உயர்வு அளிக்கும் தன்னலமற்ற தியாகிகள் ஆவர். நம் உயர்வு கண்டு களிப்ப வரும் அவரே. நம் உயர்விற்கு அல்லும் பகலும் முயன்று ஆவன அளிப்பர். அவ்வாறே நம் ஆலிவர் கோல்டுஸ்மித்திற்கு அன்னுர் நண்பரே நன்கு உதவிசெய்து அவரது உயர்விற்குக் காரணமு மாயினர். நண்பர் தூண்ட நம் ஆலிவர் தம் தந்தை போல மதகுருவாகப் பணியாற்றத் தொடங்கினுர். ஆனுல் அப்பணிபுரிய மதத்தலைவர் அனுமதிக்க வில்லை. பின்னர் அவருக்கு ஒரு பயிற்றுவிப்போர் (Tutor) வேலை கிடைத்தது. அந்நிலை மிக விரைவி லேயே சீட்டாட்டச் சண்டையால் முடிவடைந்தது. தாய் மாமன் அமெரிக்கா, டப்ளின் முதலிய விடங் களுக்கு ஆலிவரை அனுப்ப எடுத்த முயற்சியும் வீணுயிற்று. மாமனே முயன்று ஆலிவர் கோல்டு ஸ்மித்தை எடின்பரோவுக்கு மருத்துவக் கலை பயில அனுப்பினுர். அங்குச் சென்ற ஆலிவர் நன்கு கற்றுத் தம் ஆசிரியர் சொற்பொழிவுகளை வியந்து பாராட்டிக்கூடப் பல கடிதங்கள் எழுதியுள்ளார். மருத்துவக்கலையில் ஆர்வம் காட்டிய ஆலிவர்க்கு லெய்டன் சென்று அக்கலைபற்றி விளக்கமான சொற்பொழிவுகளைக் கேட்க அவா எழுந்தது. மாமனும் இவ்வேண்டுகோளுக்கு உடன்பட்டு உதவியும் நல்கினுர். கப்பலில் போகும்போது நியூகாஸிலை மரக்கலம் அடைந்தது. அங்கு அவரை அரசியல் மத எதிரி என்று கருதிக் கைதி யாக்கினர். தீர விசாரித்த பின்னர் விடுதலைசெய் தனர். இறுதியாக அவர் லெய்டனை அடைந்தார். இவ்வாறு இடைவழியில் நியூகாஸில் என்ற ஊரில்

கைதி ஆக்கப்படாதிருந்தால் முதலில் ஏறிச்சென்ற கப்பலில் பலரோடும் இவரும் மூழ்கி இறந்து இருப்பார் என்பது உண்மை. கவிஞரது அழகிய கருவூலங்களும் நமக்குக் கிட்டாது போயிருக்கக் கூடும்.

பின்னர் பிரான்சு தேசத்துப் பிளாண்டர்ஸ் வழியாகப் போகும்போது லுவெயின் நகரத்துச் சர்வகலாசாலையிலேயே வைத்தியப் பட்டம் பெற்ருர். பாரிசு சென்று ஆதரவு பெற்றுச் சிலகாலம் தங்கினுர். ஜினிவா நாட்டின் வழியே சென்று அங்கு அக்காலத்து விளங்கிய வால்டேர் என்பவரை யடைந்து ஆடல்பாடல் இவ்விரு கலைகளிலும் ஈடுபட்டு அக்கலையின் நுட்பங்களையும் உணர்ந்தார். இவ்வழியே நம் கவிஞர் பெருமானுடைய வறுமை வாழ்வின் வழியே கல்விச் செல்வமும் அமைவதாயிற்று.

## II. நிலையாப் பல்பணி

கவிஞர் இளமையில் கல்வி தேடப் பலவாறு திரிந்து அமெரிக்கா, ஐரோப்பா இக்கண்டங்களைச் சுற்றிவிட்டு 1756 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாள் டோவரைத் தாண்டி இலண்டன் மாநகரை யடைந்தார். குறைந்த சம்பளத்தில் மருந்து கலந்து கொடுப்பதற்கும் விற்பதற்கும் ஒரு ஆளாய் அமர்த்தப்பட்டார். பின்னர் தம் நண்பர் டாக்டர் ஸ்லே என்பவர் உதவியால் தேம்ஸ் நதிக் கரையிலுள்ள ஓர் மருந்துக் கடையுடன் தாமும் ஓர் சிறு மருத்துவராய் விளங்கினுர். நோயாளிகள்

யாவரும் ஏழை மக்களாய் இருந்தமையால் வறுமை தீர வழியின்றி வருந்தினர். இவ்வாறான வாழ்வு நடத்தியகாலை ஒரு அச்சுக்கோர்ப்பவன் ஏழை நோயாளியாக நம் மருத்துவரது உதவி கோரி நின்றான். அவனுடன் நட்புரிமை பூண்டொழுகினார் நம் கவிஞர். அவனது உதவியால் அச்சகத்தில் அச்சிடும் புத்தகங்களில் பிழைதிருத்தும் பணியையும் வேண்டிப் பெற்றார். இப்பிழை திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த காலையிலேயே ஒரு துன்பியல் நாடகமும் ஒன்று எழுதினார். மருத்துவப்பணி, பிழைதிருத்தும் செயல் இவ்விரண்டையும் விட்டு பெக்ஹாம் சென்றார்.

பெக்ஹாமில் டாக்டர் மில்னருக்குச் சொந்தமான பள்ளியில் அமர்ந்தார். மில்னருடன் அவருடைய வீட்டிலே ஆலிவர் ஓர் நாள் அளவளாவிக்கொண்டிருந்தார். அப்போது "திங்கள் தாளின்" ஆசிரியரான கிரிபித்ஸ் என்பவர் மில்னரோடு பேசவந்தார். மில்னரோ அச்செய்தித் தாளுக்கு எப்போதும் செய்தி எழுதி வழங்குவது வழக்கம். மூவரும் அளவளாவிக்கொண்டிருக்கையில் ஆலிவர் கோல்டுஸ்மித்துக் கூறிய பல கருத்துக்கள் அச்செய்தித்தாள் ஆசிரியர்க்கு வியப்பும் கவிஞர்பால் மதிப்பும் அளித்தன. ஆகவே நம் கவிஞருடன் ஓராண்டிற்கு உடன்படிக்கை எழுதிக்கொண்டு நம் காரியாலயத்திற்கு அழைத்துச் சென்றார். நல்ல வருவாய் வந்தபோதிலும் நம் கோல்டுஸ்மித்து இப்பணியையும் ஓராண்டிற்குப் பின்னர் விட்டொழித்தார். அப்போது அவருக்கு வயது இருபத்தொன்பது. புத்தகப் பணியே அடுத்தபடியாக ஆலிவரைத் தேடிவந்தது.

இவரது கவியுள்ளம் ஒரு பால் புத்தகம் எழுதத் தூண்டிற்று எனினும் இவர் தமது மருத்துவக் கலைத்திறனைப் பயன்படுத்தத்தக்க வாய்ப்பினை விரும்பியே காலங் கழித்தார். மறுபடி ஆஷர் வேலையிலேயே மில்னரிடம் அமர்ந்தார். பல்வேறு முறை இவர் மருத்துவராய் அமரச் சிபாரிசு செய்யப்பட்டபோதிலும் இவரது ஊழ்வினைப் பயன் அவ்வாறு அமைத்திலது.

**1759** ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **2** ஆம் நாள் நூல் எழுதும் ஆசிரியராய் அமர்ந்தார். முதன் முதலில் "தற்கால ஐரோப்பிய உயர்தரப் படிப்பின் விசாரணை" என்னும் நூலை எழுதி முடித்தார். இவரது நண்பர் முயற்சியால் மேற்கூறிய நூல், ஆக்கியோன் பெயரின்றியே வெளிவந்தது. அந் நூலின் கண் நம் ஆசிரியர் ஆராய்ச்சி என்பது கல்விக்கு எக்காலத்தும் கொடிய பகை என்றும் ஒன்றை எழுதுகின்றவர் ஏட்டுப்படிப்பைமட்டும் துணையாகக்கொண்டு அதனை எழுதாமல் உலக வியற்கை உணர்வு உந்திய அறிவின் துணை கொண்டும் எழுதவேண்டும் என்றும் ஆணித்தர மாய்க் குறித்து இருந்தார். நூலாசிரியர் நிலை செல்வர் ஆதரவின்றி மங்கிக் கிடக்கின்றது என்றும் அந்நூலில் கூறினர். ஆகவே, நூலாசிரியர் புத்த கம் விற்போரது கைப்பொம்மையாக நேரிடும் அவல நிலையைச் சுட்டியிருக்கிறார். மேலும் நூலா சிரியர் கருத்தும் புத்தகம் விற்போரின் கருத்தும் வேறுபடுவதால் சுவையற்ற நூல்களே பெருக வாய்ப்பு ஏற்படுகின்றது என்பவை போன்ற பல கருத்துக்கள் அந் நூலில் காணப்பட்டன.

பின்னர் தேனீ (Bee) என்ற செய்தித்தாளுக்குப் பல சிறந்த கருத்துக்களைக் கட்டுரையாக எழுதிக் காலங் கழித்து வருவாயும் தேடலானார். இவரது கட்டுரைகளை விரும்பிப் படிக்கும் மக்கள் பலர் இருந்ததால் இவர் கருத்துக்களை அச்சிடும் செய் தித் தாட்களும் நிரம்ப விற்கப்பட்டன. அவற்றை நடத்துவோரும் ஊதியம் பெற்று மகிழ்ந்து ஆலி வர் கோல்டுஸ்மித்தைப் பல வழிகளிலும் ஆதரித் தனர்.

உலகவாசி ஒரு சீரிய நூல்

ஆலிவர் கோல்டுஸ்மித்துடன் நட்புக்கொண்ட செய்தித்தாள் முதலாளிகள் இருவர் ஆவர். அவர் கள் டாக்டர் ஸ்மாலெட் என்பவரும் சான் நியூ பெரி என்பவரும் ஆவர். நம் புலவர் ஆதரவாய் "தேனீ"யின் எட்டாவது இதழ் வெளிவந்தது. எப்போதும் மாறும் உள்ளம் படைத்தவர் நம் ஆலிவர். ஆகவே காரிக் என்பவரிடம் தன்னைக் கலைக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கும்படி கூறினார். டேவிட் கார்க் ஒரு நாடக சாலையின் உரிமையாளர். நம் கவிஞர் தாம் எழுதிய முதல் ஆராய்ச்சி நூலில் நாடகசாலை நிர்வாகம் ஊழல் என்று எழுதியிருக்கிறார். ஆகவே, கார்க் ஆலிவர் கோல்டுஸ்மித்திற்குத் தக்கவாறு உதவிசெய்ய மறுத் தார்.

தேனீ என்ற பத்திரிகைக்கு இருபது கட்டுரை கள் எழுதித் தந்தார். மேலும் அப்போதுதான் சான் நியூபெரி என்பார் (பொதுப்பேரேடு) என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அச்செய்தித்

தாளுக்கு வாரம் இருமுறை ஆலிவர் செய்திதானம் உதவினர். அவை நூறு கடிதங்களாக அமைந்தன. அவற்றைத் தொகுத்து "உலகவாசி" என்ற பெயரால் அமைத்தார். அக்கடிதங்களில் வெளிவந்த செய்தி சீனன் ஒருவன் லண்டன் நகரிலிருந்து தாம் காணும் காட்சிகளைத் தன் நண்பனுக்கு எழுதுவதுபோல அமைந்திருந்தது. அவ்வாறு எழுதிய கடிதங்களில் தம் நாட்டுப் பழக்கவழக்கங்கள் அவற்றின் இழுக்குகள், செல்வர் செருக்கு ஏனையோர் இழிநிலை இவை எடுத்துக்காட்டப் பெற்றிருந்தன. எழுதும் கட்டுரையாளருக்குச் சரியான மதிப்புக் கொடுக்காத அக்காலத்து நிலையினையும் அக்கட்டுரைக் கடிதங்கள் விளக்கிக் கூறின. மேலும் நாடகசாலைகளைப்பற்றிக் கூறும் போது 'அவை மக்களுக்கு நீதி புகட்டுவனவாக அமைதல் வேண்டும் என்றும் நாடக ஆசிரியர் தற்செருக்கு உடையோராய் வாழ்தல் கூடாது என்றும் மக்கள் சுரக்கும் அருளை வெளியிட்டுப் பிறருக்கு உதவும் பண்பாடு உடையவராய் இருத்தல் வேண்டும்' என்றும் எழுதினர். இப்பண்பு கறுப்பு மனிதனிடமே காணப்படுகின்றது. வெளிப்படையாக இக்குணமும் வெள்ளையனிடமும் காணப்படல் வேண்டும் என்று அறிவுறுத்தும் கடிதம் மிகச் சிறந்த தொன்றாகும். பின்னர் வேறொரு கடிதத்தில் டிப்ஸ் (Tibbs) அழகன் என்ற ஆண்மகனை வெளிக்கூறி அவன் வாயிலாகப் பிறர் புகழ்வதை விரும்புதல் கூடாது. ஊனுண்ணல் கூடாது என்றார். மேலும் பணத்திமிர் கொண்டு ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடுதல் அணுவளவும் கூடாது என்று கூறினர். பெருந்திண்டி தீராத்

துன்பம் அளிக்கும் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல எடுத்து அறிவுறுத்தினார். இவ்வாறு தன் நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான நீதிகளைப் பிறநாட்டான் இங்கிலாந்திலிருந்து கீழை நாடுகளுக்குக் கடிதம் எழுதுவதுபோல எழுதி அறிவுறுத்தினார்.

## III. ஆலிவர் கோல்டுஸ்மித்தும் ஜான்ஸனும்

கி.பி. **1760** ஆம் ஆண்டின் இறுதியில் ஒயின் ஆபீஸ் கோர்ட்டில் கோல்டுஸ்மித்து குடிபுகுந்தார். நியூபெரியும் ஜான்ஸனும் நண்பர்கள். நியூபெரி ஓர் செய்தித்தாள் காரியாலயத் தலைவர். அவர் நடத்திய செய்தித்தாளிலேதான் ஆலிவர் கோல்டுஸ்மித்து எழுதிய கட்டுரைகள், கடிதங்கள் இவை நிரம்ப வெளிவந்தன. அவற்றையெல்லாம் விடாமல் ஜான்ஸன் படித்துவந்தார். ஜான்ஸன் அக்காலத்து விளங்கிய சிறந்த ஆங்கில நூலாசிரியர் ஆவர். கோல்டுஸ்மித்து நூல்களைப் படித்து மிக மதிப்புடன் கோல்டுஸ்மித்தை ஜான்ஸன் கருதலானார். ஒரு விருந்தின்போதுதான் நியூபெரி என்ற செய்தித்தாள் நிர்வாகி, ஜான்ஸனை ஆலிவர் கோல்டுஸ்மித்திற்கு அறிமுகப்படுத்தினார்.

அக்காலத்தில் ஸ்காட்லாந்தில் ஒரு செல்வந்தரின் மகனான பாஸ்வெல் என்பான் இருந்துவந்தான். பாஸ்வெல் ஜான்ஸனை நன்கு மதித்து இருந்தார். அதனால்தான் அவர் இங்கிலாந்திற்கு ஜான்ஸனைப்பார்க்கவந்தார். ஆனால் ஜான்ஸனைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டுமுன் பாஸ்வெல் ஆலிவர் கோல்டுஸ்மித்தைப் பார்த்தார். அவரைப் பார்த்த

வுடனேயே தம் தவருன எண்ணத்தை மாற்றிக் கொள்ளும்படி நேரிட்டது. அவரது மனத்தில் ஆலிவரைப் பற்றியிருந்த இழிவு மனப்பான்மை அகன்றது. மேலும் கோல்டுஸ்மித்துடன் அளவ ளாவிய போழ்து ஜான்ஸனைப் போலவே இனிய எளிய நடையில் கருத்துக்களைக் கோர்வைபடுத்திக் கற்ருர் மனம் களிப்புறப் பேசியதைப் பாஸ்வெல் தம் காதுகளால் நன்கு கேட்டு மகிழ்ந்தார். நகைச் சுவை கலந்த ஆலிவரது சொல் நயம் பாஸ் வெல்லையே ஈர்த்தது. அறிவும் ஆற்றலும் மிகுதி யும் பெற்ற ஜான்ஸன், ஆலிவர் கோல்டுஸ்மித்துப் பேசியதைக் கேட்கக் கேட்க மனம் மிகவும் பூரிப் படைவாராம். இவ்வாறு 'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' என்ற முதுமொழிக் கிணங்க அக்கால நூல் வல்லார் இருவரும் ஒருவர் புகழ் வெளிவர மற்ருெருவர் காரணமாய் இருந்து நட்புரிமை யுடன் பழகி வந்தது அறிந்து இன்புறற்குரிய செய்தியாகும்.

**1762** ஆம் ஆண்டு ஆலிவர் கோல்டுஸ்மித்து ஐலிங்டன் என்ற நாட்டுப்புறத்தில் குடியேறினர். நியூபெரி என்பார் பத்திரிகை, கோல்டுஸ்மித்தின் செய்திகளால் மிகுதியும் நிரம்பப் பெற்றதால் கலைச் செல்வருடைய உணவு, குடிக்கூலி இவற்றின் செல வினங்களையும் தாமே ஏற்று நடத்தினர் நியூபெரி. இப்போது கோல்டுஸ்மித்தின் உடல் வன்மை சற்றே சுருங்குவதாயிற்று. பாத் என்ற ஊருக்கு உடல்நலம் கருதிச் சென்ருர். அங்கு இருந்த போதுதான் "ரிச்சர்டு நாஷ் சரிதம்" என்னும் நூலை எழுதினர். ஆலிவர் கோல்டுஸ்மித்து எழுதிய

சிறு நூல்களுள் இதுவே இனிமை தருவதாகும். டாக்டர் ஜான்ஸனே அதன் பிரிதியை விலைக்கு வாங்கிப் படித்து நிரம்பச் சுவையுள்ளது என்றார் எனின் அதற்கு வேறு மதிப்புரையும் வேண்டுமோ!

நாஷ் அழகன் என்றவனே இந்நூலில் படைத்து அறிவும் நிலைக்கேற்ற கூர்த்தமதியுமே மக்கட்கு இன்றியமையாதது என்பதை விளக்கி நன்னடத்தை விதிகளையும் நாஷ் அழகன் வாயிலாக அமைத்து எழுதியது கற்றோரையும்கூடக் கருத்துப்பட நிறுத்தும் ஆற்றலுடையது. அக்கால ஆங்கில மாதரின் நடத்தைகளை இச்சிறு நூல் நகைச்சுவை ததும்பச் சித்தரிக்கின்றது.

### IV. வறுமை வாழ்வும் வையகப் புகழும்

**1763** ஆம் ஆண்டில் ஜொஷுவா ரெய்னுல்ட்ஸ் என்னும் ஓவியப் புலவர் சிறந்த நூலாசிரியர் பதின்மரைச் சேர்த்துக் "கல்விக் கழகம்" ஒன்று நிறுவினர். அதில் ஆலிவர் கோல்டுஸ்மித்தின் புலமைத் திறத்தில் ஜான்ஸனுக்குப் பெருமதிப்பு இருந்தமையாலும் மக்களது மட்டற்ற மதிப்பினாலும் இந்த அரிய பதவியை அவரடைந்தார். ஜான்ஸன் தாம் கருதிய சீரிய மதிப்பைத் தம்முடன் தொடர்புடைய பாஸ்வெல் என்பவருக்கு அடிக்கடி கூறிவந்தார். அப்பொழுதெல்லாம் கோல்டுஸ்மித்தை முதன்மையான நூலாசிரியர் என்று குறிப்பிடுவாராம். இஃதொன்றே தொல்லோர் சிறப்புக்கூறப் பயன்படுவதாயிற்று. பல்வேறு நேரங்களில் ஜான்ஸனும் கோல்டுஸ்மித்தும் பல செய்திகளைப்பற்றிச் சொற்போரில் பல நாழிகைகள் இடையீடின்றி யீடுபட்

டிருக்கின்றனர். இதினின்று ஆலிவர் கோல்டு ஸ்மித்து நாவன்மை, எழுதும் திறன் இவ்விரண்டி லும் ஜான்ஸனுக்குத் தாழ்ந்தவர் அல்லர் என்பது புலனுகும். ஆலிவர் கோல்டுஸ்மித்து வாழ்ந்த காலத்தில் அச்சக அமைப்பாளரும் செய்தித்தாள் தலைவரும் சிறுதொகை கொடுத்து நூலாசிரியர் நூல்கள் பெறுவதே வழக்கமாயிருந்தது. அவ் வாறே நியூபெரியும் சிறந்த உழைப்பைச் சிறு தொகைமூலம் ஆலிவரிடம் பெற்றுப் பெருமை யெய்தினுர். வறுமையில் தோய்ந்த நம் புலவர் மனத்திற்கு ஒவ்வோர் பொழுது இச்செயல் துன்பத்தைத் தந்தது. ஆகவே நியூபெரியின் ஆதர வில் குடியிருக்க மனமின்றி, டெம்பிள் என்ற புத்தக சாலை மாடியில் அமைத்தார். வறுமையில் வாடிய செம்மல், தம் உற்ற நோய் நீக்கும் உறுதுணை நண்ப ரான ஜான்ஸனுக்குத் தம் நிலையை விளக்கி, வந்து காணுமாறு ஒரு கடிதம் போக்கினுர். ஜான்ஸன் பெருமகனும் உடனே சென்று கண்டார். குடி யிருப்புக்கூலி கொடுபடாததால் தாம் அடைந்த இன்னலை ஆலிவர் விளக்கிக் கூறினுர். இருவரும் அளவளாவினர். அப்போது தம் துன்பத்தைத் தீர்க்கத் தம்மிடம் இருந்த புதுக் கதையான (Novel) "வேக்பீல்டு பாதிரியார்" என்ற நூல் இருப்பதை ஜான்ஸனுக்கு உணர்த்தினுர். அதனை ஜான்ஸன் கையகத்தில் பெற்று நியூபெரி என்பவனை அடைந் தார். நூலைப்பற்றிப் புகழ்ந்து பேசி அறுபது பவுன் பெற்றுத் திரும்ப வந்து தந்து உதவினுர்.

நிறைந்த வறுமையிலும் தாம் எழுதிய நூலை அடமானம் வைக்காமலும் விற்காமலும் இருந்த

தன் நோக்கம் யாதெனில், அவற்றைத் தாமே அச்சிட்டு வெளிக் கொணர்ந்து நிரம்ப வருவாயை எதிர் நோக்கினர் என்பது புலனுகும். மேலும் ஒருமுறை எழுதிய நூலைப் பன்முறையும் படித்துத் திருத்திச் செம்மையுறச் செய்யும் ஆற்றலும் பண்பாடும் பொறுமையும் உள்ளவர்.

பல நாடுகளிலும் தாம் பிரயாணியாகச் சுற்றிய காலத்துத் தாம் நுகர்ந்த இன்ப துன்பங்களையெல்லாம் ஒரு செய்யுள் வடிவில் (Traveller) "பிரயாணி" என்ற தலைப்பின்கீழ் எழுதி வைத்திருந்தார். இச்செய்யுள் நூலின் முற்பகுதி தாம் ஐரோப்பாவில் சுற்றும்போதே தன்னுடைய உடன்பிறந்தவருக்கு எழுதிய கடிதங்களில் அமைந்து கிடந்தது. ஆகவே இந்நூலை அச்சகோதரனுக்கு உரிமையாக்கி வெளியிட்டார். **1764** ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் **19** ஆம் நாள் "பிரயாணி" என்ற நூல் ஹென்றி என்பார்க்கு உரிமையாக்கப்பட்டு வெளிவந்தது.

இந்நூலின் முற்பகுதி ஆலிவர் கோல்டு ஸ்மித்துத் தன் உடன்பிறந்தார் மாட்டுக்கொண்டிருந்த அன்பின் நெகிழ்ச்சியை விளக்குகின்றது. பின்னர் தாய்நாடுவிட்டு நெடுந்தூரத்தில் வருபவரது ஏக்கத்தையும் துன்பத்தையும் விளக்கும் இந்நூல். மென்மையான மொழிகளை எளிய இனிய நடையில் கொண்டது. சீரிய கருத்தைப் பெற்றது. அறிஞர்க்கு மகிழ்ச்சியும் அளிக்கவல்லது. எளிய இனிய சொல், காண்போரை மேலும் மேலும் படிக்கச் செய்யும். இந்நூல் ஐரோப்பாவின் ஒவ்வோர் நாட்டின் இன்ப நுகர்ச்சிகளைக்கூறி விரிவாக அமைக்கின்றது. இச்செய்யுள் நூலைக்கண்ட

கற்ருேர் பலரும் போப்பின் காலமுதல் இதுவரை இத்தகைய சீரிய நூலைக் கண்டதேயில்லை எனப் புகழ்ந்தனர். லாங்டன் என்ற ஆசிரியர் '"பிரயாணி" என்ற நூலில் ஒரு பிழைகூடயில்லை' என்று மதிப்பிட்டனர். சார்லஸ் பாக்ஸ் என்பவர் இது ஓர் ஆங்கிலச் செய்யுள் நூல் என்ருர். இவ்வாறு அறுபது பவுனுக்கு விற்ற வேக்பீல்டு பாதிரியார் என்ற நாவலை வெளியிட்டு அதிக ஊதியம் பெற வழிகாட்டியாக அமைந்து நின்றது "பிரயாணி" என்ற செய்யுள் நூல் எனில் அது மிகையன்று. இவ்வாறு வெளிவந்த செய்யுள் நூலும் குறைந்த தொகைக்கு விற்கப்பட்ட நாவல் நூலும் நம் அறிஞர் வறுமையை ஓரளவு போக்கி அறிஞர் அறிவிற்கு விருந்தாய் அமைந்தன.

## V. நூல்கள் வெளி வருகை

### பல்பொருட் கட்டுரைகள்

இலக்கியக் கலையைக் கலைஞர் எழுதும் சொற்களே வெளியிடுகின்றன. அவ்வாறு ஆலிவர் வெளியிட்ட பல்வேறு கட்டுரைகளும் மக்கள் அகத்தும் புறத்தும் நின்று நீதி பயக்கும் கலைக் கோயில்களாக அமைந்தன. பல்வேறு சிறு கோயில்கள் சேர்ந்து ஒரு பெருங் கோயில்களாகக் காட்சி அளிப்பது போலவும் பல்வகைப் பயனுடைய மரங்கள் பல குழுமி ஒரு தண்ணறும் சோலையாகக் காட்சி அளிப்பதுபோலவும் பல்வேறு பொருட் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு தொகுப்பு நூலாக்கித் தந்தார் நம்புலவர் பெருமான்.

இவரது "பிரயாணி" என்ற செய்யுள் நூலுக்கு ஏற்பட்ட புகழைக் கண்ட நியூபெரி என்ற பத்திரிகை யாசிரியர் இதுவரை இவர் தனது பத்திரிகை வாயிலாக வெளியிட்ட கட்டுரைகளைத் தொகுத்து ஒரு தொகுப்பாக வெளியிட வேண்டினர். ஊதியமும் நல்கினர். உலகச் செய்திகள், கற்பனைச் செய்திகள், அறிவாராய்ச்சிகள், நகைச்சுவைகள், கலைத்திறன் இவை அமைந்த பல கட்டுரைகள் கொண்ட ஒரு தொகுப்பு வெளிவந்தது. அத் தொகுப்புக்கு முகவுரையாக நம் ஆலிவர் கோல்டு ஸ்மித்து 'இக்கட்டுரைகளை என் கண் காணுக் கற்ருேர் வசம் புகுத்தி எனது புகழாகிய சிறப்பைப் பெறுவதற்காக அமைத்துள்ளேன்' என்று எழுதிய அஞ்சா நெஞ்சம் வியக்கத்தக்க தொன்ருகும். 'பின்னர் நார்த்தம்பர்லந்து சீமாட்டியை மகிழ்விக்க எட்வினும் ஏஞ்சலினவும்' என்று ஒரு செய்யுள் நூலையும் எழுதித் தந்தார். மறுபடியும் கூலிக்குக் கட்டுரை எழுதத் தொடங்கினர். இதனிடையில் சிறிதுகாலம் மருத்துவனுகவும் பணியாற்றினர்.

## வேக்பீல்டு பாதிரியார்

இந்த நாவல் நூல் நியூபெரி என்பவரால் அச்சிடப்பட்டு **1766** ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் **27** ஆம் நாள் வெளிவந்தது. இந்நூல் மக்கள் இயற்கைக்கு ஏற்றவாறு இயற்றப்பட்ட தொன்ருகும். ஒருமுறை படித்தவனைப் பலமுறையும் படிக்கும்படி செய்யும் இயல்பினது. இதன்கண் கள்ளங் கபடமற்ற பாதிரியாரின் தன்மை, இயற்கையான நுண்ணறிவு, சுவையான உரையாடுந் திறன் இவை

யாவும் படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் படி நூலாசிரியனால் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வறுமையுற்ற காலத்து ஆடம்பரமாக உடுத்துத் திரிந்த தம் குடும்பத்துப் பெண்மக்களையும் மனைவியையும் கண்டு பாதிரியார் பேசிய சொற்கள் மிகச் சிறந்த முறையில் அமைந்து அறிவு கொளுத்தும் வகையின. இதனைப் பல நாடுகளிலும் உள்ள கற்ற பெரியோர் உயர்ந்த நகைச் சுவை நிறைந்த நூல் என்றே போற்றிப் புகழ்ந்தனர். இந்நூலின் ஓரிடத்துப் பாதிரியார் இரவில் வீடு திரும்பும் போது அமைத்துக் கூறிய சொற்கள் இன்பச் சுவையையும் அவலச் சுவையையும் கலந்தளிக்கும் இயல்பினது. உலகில் காணக்கிடக்கும் மாசுகளும் செய்கலாகாச் செயல்களும் நன்கு விளக்கிக் கூறப் பட்டு அவற்றை மக்கள் கைக்கொள்ளலாகாது என்று நயமும் சுவையும் பட ஆசிரியர் கூறுகிறார். தூய்மையான ஒழுக்கங்கொண்ட பாதிரியார் இன்னல்களும் அவரது மேன்மைப் பண்புகளும் படிப்போரை நல்வழிப்படுத்தும் முறையில் அமைக்கப் பட்டன. இவ்வாறு புகழ்பெற்ற நூல் நம் ஆசிரியப் பெருமகனுருக்கு அறுபது பவுனே தேடித் தந்தமையால் அவர் மறுபடியும் கூலிக்கு எழுதும் வாழ்க்கையை இடைவிடாமல் கைக்கொள்ள வேண்டியதாயிற்று.

**நல்லியலான்** (The Good Natured Man)

இஃது ஆலிவர் கோல்டுஸ்மித்து எழுதிய நாடக நூலாகும். இதனை நம் ஆலிவர் கோல்டுஸ்மித்துக்

காலப் புலவரும் அவரது இலக்கிய நண்பருமான டாக்டர் ஜான்ஸன் நன்கு ஆழ்ந்து படித்து முகவுரையும் மதிப்புரையும் எழுதி நல்கினர். இவர் இந்த "நல்லியலான்" என்ற நாடகத்தை எழுதி முடித்த காலத்தில் பல நாட்களாக எதிர்ப் பின்றி நடந்துவந்த கார்க் என்பாரின் நாடகக் கம்பெனிக்குப் போட்டியாக ஜார்ஜ் கோல்மன் (George Colman) என்பார் ஒரு நாடகசாலை நிறு வினர். கோல்மனிடம் இந்த நாடகம் கொடுக்கப் பட்டது. இதனிடையில் இவரை இதுகாறும் ஆதரித்துவந்த நியூபெரியும் இறந்தார். 1768 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாள் "நல்லிய லான்" நாடகம் நடத்தப்பட்டது. நாடகத்தில் சில பகுதிகளை நீக்கி அவர்கள் நடத்தினர். அது ஆசிரியர்க்கு நிரம்பத் துன்பத்தைத் தந்தது. நாடகம் எத்தகைய ஆதரவை மக்களிடம் பெறுமோ என்று ஆசிரியர் மிகவும் எண்ணியெண்ணி வருந் தினர். அவ்வாறு பகுதிகளில் சில நீக்கப்பட்ட போதிலும் முதல் மூன்று நாட்களிலேயே வறுமை யுற்ற ஆலிவர் கோல்டுஸ்மித்திற்கு அவர் எழுதிய நாடகம் நானூறு பவுனைத் தேடித் தந்தது. பின்னர் இந்நாடகத்தை அச்சிட மேற்கொண்ட அச்சக நிர்வாகிகள் நூறு பவுன் நல்கினர். இவ்வாறு "நல்லியலான்" என்ற நாடகமே நம் கவிஞருக்குத் தம் வாழ்வில் அதிக ஊதியம் தேடித் தந்த நாடகம் ஆகும். நல்லியலான் நல்கிய ஐந்நூறு பவுனையும் குடியிலும் தம் உறையுளைப் பெருக்கி அமைப்பதி லும் நண்பர்க்குத் தேநீர் விருந்து நல்குவதிலும், தீராப் பெருந் திண்டி தின்பதிலுமே செல விட்டார்.

மீண்டும் கூலிக்கு எழுதித் தரும் வேலையில் ஈடுபடலானார். டேவிஸ் என்பவர் இவரை அணுகி 'உரோம் நகரச் சரிதம்' என்ற வரலாற்று நூல் எழுதித் தருமாறு கோர, இவர் ஒப்புக்கொண்டார். இப்போது இவர் மனத் தகத்துச் சிறந்த செய்யுள் நூலான "பாழ்பட்ட ஊர்" உருவெடுத்தது. இவரது கற்பனைச் செய்யுள் வளர வளரக் கூலிக்கு வேலையான கட்டுரை எழுதும் பணியும் இவரை விட்டிலது. 1769 ஆம் ஆண்டு கிரிபின் என்னும் வரலாற்று நூலாசிரியர் ஆலிவர் கோல்டுஸ்மித்தை நாடிவந்து ஐந்நூறு பவுன் நல்கினார். "உயிர் வருக்க வரலாறு" என்பதுபற்றி எட்டுக் காண்டங் களாக எழுதித்தரவேண்டினார். நம் கவிஞரும் கிடைத்த ஐந்நூறு பவுனையும் தன் மனப்படி செலவுசெய்த பின்னரே அதுபற்றி எழுதத் தொடங்கினார். இதற்கிடையில் "உரோம் நகர்ச் சரிதம்" அச்சாகி வெளிவந்தது. ஏனைய சரித ஆசிரியர் எழுதியவைகளிலும் பல்வேறு திறங் களில் மேம்பட்டு இந்நூல் விளங்கியது. அதே டேவிஸ் என்பார் 'இங்கிலாந்து சரித்திரம்' என்ற நூலை ஐந்நூறு பவுன் கொடுத்து எழுதும்படி ஆலிவரை வேண்டினார். தாம் எழுத ஒப்புக் கொண்ட "உயிர்வருக்க வரலாறு" என்ற நூலை ஒருபுறம் வைத்துவிட்டு இங்கிலாந்து சரிதம் எழுதவும் ஒப்புக்கொண்டார்.

'பாழ்பட்ட ஊர்' (Deserted Village)

பாழ்பட்ட ஊர் என்ற அவரது கற்பனைச் செய்யுட் காவியம் நாடோறும் வளர்ந்தது. 1770 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் வெளி

வந்தது. இச் செய்யுள் நூலுக்கு நம் ஆலிவர் கோல்டுஸ்மித்து கொண்ட மூலக் கருத்து ஒன்றே ஒன்றுதான் எனின் அது மிகையன்று. ஒரு நாட்டின் செல்வம் ஒருபுறமே சென்று குவிந்துவிடுமானுல் அச்செயலே அந்நாட்டிற்குக் கேடு பயக்கும் என்ற அடிப்படைக் கருத்தேயாகும். இப் பாடல் பாழ்பட்ட ஊரின் சிறப்பு, மத குருமாரின் இயல்பு, ஆசிரியர் பண்பு இவற்றையெல்லாம் அங்கை நெல்லிக்கனி என எடுத்துக் காட்டுகின்றது. எட்டுக் காண்டங்கள் அடங்கிய மிகப் பெரிய நூலான உயிர்வருக்க வரலாறு என்ற நூலும் இதற்கிடையில் முடிவுற்று வெளிவந்தது. இத்தகைய சிறு நூல்களும் நாடகங்களும் பெருநூல்களும் வெளியிட்ட பின்னர் தமது நாற்பதாவது வயதில் ஆலிவர் கோல்டுஸ்மித்துத் தமது நண்பர் ரெய்னுல்ட்ஸின் உறவினரையும் குமாரிகளேயும் உடனழைத்துக்கொண்டு ஐரோப்பாவிற்குப் பயணமானுர். அப்பயணத்தின்போது அவர்க்குப் புதிய நுகர்ச்சிகள் தோன்றி இருபது வயதில் கொண்ட அனுபவங்களினும் அவை வேறுபட்டன. தாம் கண்ட காட்சிகளே இங்கிலாந்து காட்சிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அவற்றை இகழவே அவரது கவியுள்ளம் முற்பட்டது. இவர் ஐரோப்பிய பிரயாணத்தை முடித்துவிட்டு இங்கிலாந்து திரும்பிய பின்னர், 'அவள் வெற்றியுறவே பணிகிருள்' என்ற நாடகத்தை எழுதி முடித்தார். ஆலிவர் கோல்டுஸ்மித்துக்கு நல்லியலான் ஐந்நூறு பவுனே நல்கியதால் கவியுள்ளம் அவரை நாடக நூல் எழுதத் தூண்டியது. இது ஒரு இன்பியல் நாடகமாயிற்று. துன்பியல் நாடகமே மேடைக்கு ஏற்றது என்று

எண்ணிக் கோல்மான் அநேகமுறை மறுத்துத் தள்ளி இறுதியில் தன் நாடகக் கம்பெனியில் நடிக்க ஒப்புக்கொண்டான். கோல்மனைச் சம்மதித்து நடிக்கும்படி செய்தது நம் ஜான்ஸனே யாவர். மதிப்பையும் புகழையுமே நம் ஆசிரியருள்ளம் விரும்பியது. நாடகத்தைப்பற்றி மக்கள் எவ்வாறு கருதி எத்தகைய மதிப்பு நல்குவரோ என்று யெண்ணியெண்ணி ஏங்கி ஒரு தோட்டத்தில் நாக்கு வறண்டுபோவதைக்கூட கவனிக்காது உழன்றார். நண்பர் ஒருவர் ஆலிவரை நாடகசாலைக்கு வலிதின் இழுத்துச் சென்றார். நாடகத்தைக் கண்ட மக்கள் அனைவரும் களித்தனர். பாணரும் விறலியரும் சிறப்புறவே மதித்தனர். முதன் முதலிலேயே அந்த நாடகம் நம் கவிஞருக்கு பெரும் பகுதியான ஐந்நூறு பவுனை அளித்தது.

## VI. இயற்கையோடு கலத்தல்

இரு நாடகங்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நன்கு விவரித்து எழுதப்பட்ட வரலாற்று நூல் களும் நம் கவிஞர்க்கு நிரம்பப் பெருந்தொகையைத் தந்தன.

“ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை
போகாறு அகலாக்கடை”

என்பதுணராத நம் ஆலிவர் கோல்டுஸ்மித்து என்பார் “கண்டதே காட்சி கொண்டதே கோலம்” என்பதனைக் கொண்டு நன்கு பெருந்திண்டி உண்டு விருந்திற்கும் பலரையும் வரவேற்று ஆடல், கேளிக்கை, மது இவற்றில் ஈடுபட்டுக் கடன் தொல்லையைப் பெருக்கிக்கொண்டார். நாற்பது

வயது அடைந்த பின்னர் உடல்கட்டும் தளர்வது யியற்கை. ஆகவே நாற்பதாவது ஆண்டு நழுவும் நிலையை நல்கும் என்பர் ஆன்றோர். நெருப்பினுள் படுத்து நன்கு அயர்ந்து தூங்கவும் கூடும். ஆனல் வறுமை நிலையில் கண்கொட்டுதலும் இயலாத செயலன்றோ! மேலும் கடன்பட்டு வாழும் வாழ்வு மிகுந்த துன்பந்தரும் நிலைமையது என்பதை வாளி புதையுண்ட நெஞ்சத்தையுடைய இராவணன் நிலையை விளக்கவந்த கம்பர் "கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினுன் இலங்கை வேந்தன்" என்ருர். உடல் தளர்ச்சியும் உள்ளச் சோர்வும் கனல்போல் வருத்தும் வறுமை வாழ்வும் நம் கவிஞரை வாட்ட முற்பட்டன. இவையன்றி உடலும் நோய்வாய்ப்பட்டது. மனமும் உடலும் வருத்தமுறவே பேச்சும் நண்பரிடம்கூட இன்பந் தாராமல் துன்பமே தந்தது என்னலாம். இன்பியல் நாடகம் எழுதித் தருவதாக முன் பணம் கொண்டாரே தவிர அதுவும் முற்றுப்பெறவில்லை. இத்தகைய உடல் நடுக்கமும் உள்ள நடுக்கமும் நோயின் தீமையும் கொண்ட நம் கவியரசு 1774 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 25 ஆம் நாள் இரவு படுத்தார். ஏப்ரல் மாதம் 4 ஆம் நாள் அவரது ஆன்மா இயற்கை நிலை யெய்தியின்பங் கண்டது. ரெய்னல்ட்ஸ், பர்க் என்பார் பெரிதும் வருந்தினர். அவரது உடல் டெம்பிள் என்றவிடத்திலுள்ள கோவிலில் அடக்கம் செய்யப்பட்டது. டாக்டர் ஜான்ஸன் மிக வருந்தி "ஆலிவர் கோல்டுஸ்மித்து நல்ல கவிஞராலும் உடலையும் பொருளையும் ஓம்பிக் காக்க அறியாதவர். ஆதலால் தன் வாழ் நாளில் இன்பமின்றித் துன்பமே நுகரலாயிற்று"

என்று பன்முறையும் வருந்திக் கூறினர். பாஸ்வெல் முதலிய மூதறிஞர்களும் வருந்தி அவரது கல்லறைமீது பொன்னெழுத்துக்களால் கவிஞரின் பெருமைகளைப் பொறித்தனர். இவ்வாறு களியாட்டங்கள், நிலைதவறிய வீண் செலவினங்கள் இவற்றில் ஈடுபட்டாலும் என்றும் அழியாத செய்யுள் நூலையும் இருபெரும் நாடக நூலையும் ஏனைய சரித்திர நூல்களுடன் வெளியிட்டுத் தன் வாழ்நாளிலேயே தன் போன்ற கவிஞர் பெருமக்களால் பெருத்த ஆதரவும் மதிப்பும் அடைந்த ஆலிவர் கோல்டுஸ்மித்து என்ற கவிஞர் பெருமகனர் பதினெட்டாம் நூற்ருண்டிலேயே தோன்றி மறைந்தார்.

## VII. குண நலன்கள்

வறுமையும் மதப்பற்றும் கொண்ட மதகுருமாரான சார்லஸ் கோல்டுஸ்மித்தின் ஐந்தாம் மகனுகத் தோன்றினர். லிஸ்ஸாய் கிராமத்தில் வாழ்க்கை தொடங்கினர். தன் முயற்சியால் பட்டம் பெற்ருர். ஆடம்பரமாய் உடுத்துவதிலும் ஆடல்பாடல்கள் காண்பதிலும் கேட்பதிலும் அணையா ஆர்வமுடையோர். இளமையில் தன் மனம் போனபடி செலவிட்ட தன்மையர். மருத்துவக் கலையில் மட்டற்ற மகிழ்ச்சிகொண்டு தன் நாடு கடந்துகூடச் சென்ற மருத்துவர். சொற்பொழிவு கேட்பதில் செவிவாயாக நெஞ்சு களனுகக் கொண்டொழுகும் சீரியோன். பொருளையும் புகழையும் வருந்தித் தேடவேண்டுமென்ற கவலையேயின்றி இளமை வாழ்வு வாழ்ந்த இனியன். மதப்பற்றுக் கொண்டு

மதகுருவாகப் பணியாற்ற விரும்பிய மேதை. நிறுத்திப் பேசும் பண்புடைய நிமலன். நண்பர் பலரைத் தன்பால் கொண்ட நேர்மையோன் கூலிக்கு எழுதும் குவலயம் புகழ் உத்தமன். செய்தித்தாள் ஆசிரியர் இருவர் நட்டைப் பெற்று அன்னூர் விருப்பத்திற்கு இணங்கிப் பல்வேறு வகையான கட்டுரைகளை எழுதி அமைத்துத் தந்த எழுத்தாளன். கிடைத்த புகழும் பொருளும் கண்டு தனக்கெனவே கொண்டு மகிழாத மாணவன். தமிழ்ப் புலவரைப் போன்று கிடைத்தவற்றைப் பலரோடும் பகிர்ந்து உண்டு மகிழும் உயரியோன்.

இலக்கிய இலக்கணம் முழுதும் உணர்ந்து கதை, கட்டுரை, கற்பனை, புனைந்துரை, இவையே யன்றி ஆராய்ச்சித் துறையிலும் பாடுபட்டுக் கவிஞர் மனம் களிக்க எழுதிய கவி. நாடகங்களில் இரு வகையினவும் சிறந்து அமைத்துத் தரவல்ல நகை யரசு. பேசும்போதே பிறர் மனம் புண்படாத வாறு நகைச்சுவை ததும்பவும் பொருள் பொதிந்து நிற்கவும் உரையாட வல்ல ஆற்றலுடையவன். கடன்பட்ட நிலையும் அதனால் புண்பட்ட மனமும் தன் வாழ்நாள் முழுவதும் அமைத்த பொருளுலகு அறியாத பேதை. இயற்கைப் பொருளை உள்ளது உள்ளவாறு எழுதும் பேராற்றல் படைத்த சிறந்த கவிஞர் நம் ஆலிவர் கோல்டுஸ்மித்து எனின் அது மிகையன்று. சரித்திர ஆராய்ச்சித் துறை, கவிஞர் பலர்க்குப் பொருந்துவதொன்றன்று. ஆனல் ஆலிவர் கோல்டுஸ்மித்துச் சிறந்த சரித் திர ஆசிரியர். பல துறைகளிலும் பழுதறப் பயின்றவர். எத்துறையில் எதனை எழுத நேரிடி

னும் ஒவ்வொன்றையும் அழகுடன் பிறர் மனம் கரைந்து உருகுமாறு அமைப்பார். பேரறிவும் இன்முகமும் கொண்ட பெரியோன். பிறர் சொற் பொழிவுகளைக் கேட்பதில் தெளிவும் ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் கொண்டவர். பெருமையும் பொலிவும் பொருந்த எழுதுவார்.

தன் உடன் பிறந்தார், தாய்மாமன், நண்பர் ஆகிய பலரிடமும் அன்பும் ஆதரவும் நண்பும் பூண்டு ஒழுகியவன். தன் நாடகம் மக்களிடையே நன் மதிப்புப் பெறவேண்டுமே என்று பலவாறு வருந்தி நுனித்து எழுதிய நாடக ஆசிரியன். ஒன்பான் சுவையும் ஒழுங்குபெற அமைக்கும் நல்லோன். இத்தகைய புலவர் வாழ்க்கை நமக்குச் சீரிய அறிவையும் நேரிய ஒழுக்கத்தையும் தருவதாகுக.

## பயிற்சி

கீழ்வருவனவற்றுள் ஒவ்வொன்றையும் பற்றி இரண்டு பக்கங்கட்கு மிகாமல் கட்டுரை வரைக:—

I. மில்டனது தோற்றமும் கல்விச்சிறப்பும்.
  ,, வெளிநாட்டுப் பயணங்கள்.
  ,, திருமணமும் ஆசிரியத்தொண்டும்.
  ,, அரசியல் தொண்டு.
  ,, மகாகாவியமும் முதுமைப் பருவமும்
  ,, குணநலன்கள்.

II. இலக்குமணசுவாமி முதலியாரின் இளமையின்னலும் உயர் கல்வியும்.
  ,, மருத்துவப்பணி.
  ,, கல்விப்பணி or பல்கலைக் கழகப்பணி.

III. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்:
  ,, உ. வே. சா. அவர்களின் இளமையும், கல்வியும்.
  ,, உ. வே. சா. பெற்ற பட்டங்களும், பதவிகளும்.
  ஐயரவர்களின் தமிழார்வமும், அதன்பொருட்டுச் செய்த முன்னேற்றங்களும்.
  ஐயரவர்கள் உலகம் காணுமாறு செய்த இலக்கியப் புதையல்கள்.
  ஐயரவர்களின் குணமேன்மைகள்.

IV. ஆலிவர் கோல்டுஸ்மித்:
  ஆலிவரின் இளமைக் கல்வியும் தொடக்க வாழ்வும்.
  ஆலிவர் ஆற்றிய பல்வகைத் தொண்டுகள்.
  ஆலிவர் கோல்டுஸ்மித்தும் ஜான்ஸனும்.
  ஆலிவரது வறுமை வாழ்வும் வையகப் புகழும்.
  ஆலிவர் இயற்றிய இலக்கியங்களும் நாடகங்களும்.
  ஆலிவரிடம் அமைந்த குணச் சிறப்புக்கள்.